www.padippakam.com

JUDE

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஜூன்.29–ஜூலை.05,1997

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 211

## சிறுதுளி பெருவெள்ளம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## கெரில்லாப் போரில் அதிரடி உபாயம்



## தேர்தலும் திருகுதாளமும்

## இயக்குநருக்கு நன்றிக்கடன் மீனா

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## முயன்று பாருங்களேன்....!

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

அரச தொலைக்காட்சி,
வானொலி சேவைகளின்
பணிப்பாளர் சபைகள் மாற்றப்பட்டுள்ளன.
மாற்றங்கள் பயன் தருமா?

அரச ஒளி-ஒலிபரப்பு சேவைகளின்
நம்பகத்தன்மை
வெகுவாக நலிவடைந்திருக்கிறது!

அவை சீர்படுமா? சீர்படாதா?
என்ற விவாதம் விரயம்.
ஏனெனில்
ஆட்சியில் யார் இருப்பினும்
அவர்கள் நலன் சார்ந்ததாகவே
அவை இருந்தேயாகும்!

செய்திகள்-பேட்டிகள் மூலம்
ஆட்சியில் இருப்போரிடம்
நல்லபெயர் எடுப்பதில்தான்
பணிப்பாளர் சபைகளும்
குறியாக உள்ளன.

தங்களை நியமித்தவர்களுக்கு
அவர்கள் விசுவாசமாக
இருப்பது தவறல்ல;
விசுவாசமாய் இருப்பார்கள்
என்ற நம்பிக்கையில்தான்
நியமனங்களும் அமைந்துள்ளன!
அத்தனையும் அரசியல் நியமனங்கள்
என்பதையும் கவனிக்கவேண்டும்!

ஆனாலும், தங்கள் நேரத்தில்
ஒரு பகுதியையாவது ஒதுக்கி,
தரமான நிகழ்ச்சிகள் தருவதற்கும்
மக்களை மகிழ்விப்பதற்கும்
புதிய பணிப்பாளர் சபை
கவனம் செலுத்தினால் சந்தோசம்!

குறிப்பாக-
தமிழ் நிகழ்ச்சிகளின் தரம்
குட்டிச் சுவராகிக்கொண்டிருக்கிறது!

இலங்கை வானொலியின்
தமிழ் நிகழ்ச்சிகள்
ஒரு காலத்தில்
தமிழக மக்களையும் கவர்ந்தன.

உச்சரிப்பும்,
நிகழ்ச்சிகளின் ஒழுங்கமைப்பும்
செந்தமிழ் தேனை
செவியில் பாய்ச்சுவதாக
தமிழகமக்கள் பூரித்ததுண்டு!

இன்று...?
சயத்தைக் காய்ச்சி
செவிக்குள் ஊற்றாத குறை!

பாலர் வகுப்பில்
பாடப் புத்தகத்தை
தடுக்கி தடக்கி- நாக்குளறி
வாசித்ததுபோல
உச்சரித்து வெறுப்பேற்றுகிறார்கள்!

தரமான அறிவிப்பாளர்
பலர் இருந்தும்கூட
தொலைக்காட்சியிலும்-வானொலியிலும்
வாயில் வாளோடு தோன்றுவோருக்கு
அதிக வாய்ப்புக் கிடைப்பது ஆச்சரியம்!

பணிப்பாளர் சபைகளில்
உள்ள தமிழ் பேசுவோர்
தொலைக்காட்சி- வானொலி
நிகழ்ச்சிகளைக் கேட்பது நலம்.
அப்படியானால்தான்-
யாம்பெறும் துன்பம்
பெறுவர் அவர்களும்!

'இது நம் நாடு:
நாம் அதன் மக்கள்'
என்ற உணர்வு ஏற்படுத்துவதில்
தொலைக்காட்சி- வானொலிகளுக்கு
முக்கிய பங்குண்டு.
அந்த உணர்வை
ஒழித்துக்கட்டும் காரியத்தையும்
அவை செய்ய முடியும்!

துரதிஷ்டவசமாக
பின்னதைத்தான்
அரச வானொலியும்-தொலைக்காட்சிகளும்
சிறப்புறச் செய்து வருகின்றன!

கிரிக்கெட் போட்டியில்கூட
வேண்டா வெறுப்பாகவே
தமிழ் அறிவிப்புத் தரப்படுகிறது!

கிரிக்கெட் அணியை
ஆதரியுங்கள் என்று
அறிக்கைவிடும் அமைச்சர்கள்
கிரிக்கெட் போட்டியைக் காணும்
பல்லாயிரம் தமிழ் பேசும் மக்களை
அரச தொலைக்காட்சி
அந்நியராக்குவதை அறிவார்களா?

புதிய பணிப்பாளர் சபைகளாவது
ஒலி-ஒளிபரப்பு சேவைகள்
தமிழ் பேசும் மக்களிடம்
தினசரி அந்நிய உணர்வைத்
தோற்றுவிப்பதையாவது
தடுத்து நிறுத்த முயலுமா?

தமிழ்பேசும் மக்கள்
அதிகமாக ஒன்றும் எதிர்பார்க்கவில்லை.
தரமான நிகழ்ச்சிகள்-
குறைந்தபட்சம்
இனவிகிதாசாரத்துக்கு ஏற்ப
தமிழுக்கு நேர ஒதுக்கீடு
என்பவற்றையாவது தரலாமே?

தமிழ்பேசுவோர் சிலரும்
பணிப்பாளர் சபைகளின் பட்டியலில்
இடம்பெற்றிருக்கிறார்கள்.
அதை ஒரு கௌரவமாக
கருதுவதுடன் மட்டும் நில்லாமல்,
காரியம் சிலவும் செய்தால்
நிச்சயம் மெச்சுவோம்!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## ஆலோசனை!

வேத புத்தகம் நம் ஒவ்வொருவருக்கும் தகுந்த ஆலோசனைகளை, தகுந்த நேரத்தில் தந்தருளுகிறது. எல்லாச் சூழ் நிலைகளுக்கும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வுகளையும், ஆலோசனைகளையும் போதிக்கக் கூடிய ஒரே புத்தகம் வேத புத்தகம்தான். அவருடைய வசனத்தைக் கேட்டு அவரை விசுவாசிக்கிற வனுக்கு நித்திய ஜீவன் உண்டு.

(யோவான் 5:24)

வேதத்தின் மூலமாக மட்டுமல்ல, கர்த்தர் சபையின் போதகர் மூலமாகவும், சுவிசேஷகர்கள் மூலமாகவும் கூட நமக்கு ஆலோசனை தருகிறார். நாம் கர்த்தருடைய ஆலயத்திற்குச் சென்று வார்த்தைகளைக் கேட்கும்போது நமக்குத் தேவையான சத்தியங்களையும் ஆலோசனைகளையும் நாம் பெற்றுக்கொள்கிறோம்.

அருமையான தேவனுடைய பிள்ளையே! மனுஷனுடைய ஆலோசனைகளைக் கேட்க ஓடினது போதும். கர்த்தருடைய ஆலோசனைகளை அவருடைய பாதத்திலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். அவர் ஆலோசனைக் கர்த்தர்!

தி.பெஞ்சமின் தேவபாலன், மட்டக்களப்பு.

## செய்ய வேண்டிய ஐந்து காரியங்கள்!

ஹஸரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்- அண்ணல் நபி நாயகம் அவர்கள் தங்கள் தோழர்களிடம் "இந்த என்னுடைய பேச்சை மனமொப்பி கேட்பதற்கும், பிறகு அதன்படி செயல்படுவதற்கும், அல்லது மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்து அதன்படி அவர்கள் செயல்பட தூண்டுவதற்கும் உங்களில் யார் இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு நான், "அல்லாஹ்வின் தூதரே! நான் செய்கிறேன்" என்றேன். உடனே அண்ணலார், எனது கரங்களைப்பற்றி பிடித்துக் கொண்டு 5 விஷயங்களைக் கூறினார்கள்: அவை வருமாறு:

1. ஹராமாக்கப்பட்ட (தடுக்கப்பட்ட)தை விட்டு பேணிக்கொள்ளும். நீர் மற்றவர்களைவிட பெரிய வணக்கஸ்தராகி விடுவீர்.
2. அல்லாஹ்வை கொண்டு உமக்கு எது கிடைக்கிறதோ அதனைக் கொண்டு நீர் பொருந்திக் கொள்ளும். நீர் மற்றவர்களை விட (அதிகம்) தேவையற்றவராகி விடுவீர்!
3. உம்மை ஒத்தவரோடு நீர் நல்ல முறையோடு நடந்து கொள்ளும். அதிகம் விசுவாசமிக்கவராகி விடுவீர்!
4. உமக்காக எதனை விரும்புகிறீரோ அதனை நீர் மற்றவருக்காக விரும்பும். நீர் முழுமையான முஸ்லிமாகி விடுவீர்.
5. அதிகமாக சிரிக்காதீர்! அது அதிகரிப்பதன் காரணமாக உமது உள்ளம் பிணமாகிவிடும்.

ஆதாரம்: திர்மிதி-727

பாத்திமா மின்ஹா, புத்தளம்.

## கவிதைப் போட்டி இல. 208



இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

### பரிசுக்குரிய கவிதை

### எம் கதியோ?

பசுமை செறிந்த இலை விரித்து
பக்குவமாக நிழலளித்து
காலம் தவறா மழை தந்த
தருக்கள் இன்று இலையுதிர்த்து
போரால் எல்லாம் இழந்த எம்போல்
இதுவும் ஏங்கிச் சோர்ந்ததுவோ?

நிஜந்திக்கா கனகசிங்கம்-
கல்லடி வேலூர், மட்டக்களப்பு

### விந்தை

காலத்தின் கோலம்
சருகாகிச் சாயும்;
ஆயுதம் செய்யும் அவலம்
பாலையாகிக் காயும்!

றோஸ் பேர்னாட்-
பண்டாரவளை.

### விளைவு?

தனிமரம் தோப்பாகாதே!
படுமரம் பயன் தராதே!
பாழாய்ப் போன போராலே
பலபேர் வாழ்க்கை-இக்
கதையா காதோ??

காரைதீவூர் சிவம்- குருக்கள்மடம்.

### தனிமை

வெட்ட வெளிதனில்
ஒற்றை மரம்
வாழ்வின் இரகசியம்!

சுபா வரன்- கண்டி.

### நிஜம்

இது பட்ட மரம் அல்ல!
வெடி(ப்)பட்ட மரம்

தர்மகுலசிங்கம் பிருந்தா,
மட்/வின்சன் உயர்தர பாடசாலை-
மட்டக்களப்பு.

### அழிவுகள்

இயற்கையிங்கு அழிந்தாலென்ன,
இருப்பிடம் தொலைந்தாலென்ன?
அவர்களுக்குத் தேவையெல்லாம்,
நிச்சயமான வெற்றிதானாம்!

'இதயநிலா'- ஆரையம்பதி-03.

### ஆச்சரியம்

ஆ! இது
யா(பா)ழ் தானே!

எஸ்.கே.தாஸ்-
ஆரையம்பதி-2.

### தனித்த மரம்

தென்னையும் வாழையும் தேன்பலாவும்
தன்மையாய் வளர்ந்து தழைத்திருந்த புவியில்
வன்மையாய்த் தொடர்ந்து வதைத்திடும் போரும்
திண்மையாய் நிலைத்ததால் தனித்ததோ இம் மரம்?

மல்லிகா பத்மநாதன்- பசறையூர்.

### பொசுங்கும்

கார்மேகம் கசிந்த போது
கனிந்தன காடு!
போர் மேகம் கக்கும் போது
பொசுங்கின காடு!

'இசையரசி'- முதலாம் X தெரு,
வவுனியா.

### மாறுபடும் நியாயங்கள்.

தெற்கில்
நாட்டுவளம் பெருக்கவென
வீட்டுக்கொரு மரம் வளர்ப்பு!
வடக்கில் 'வெற்றி நிச்சய' படைநகர
சுற்றிவர காடழிப்பு!


சி.மு.சுந்தரேசன்- அரசினர் வைத்தியசாலை, மஸ்கெலியா.

### தமிழினம்

காய்ந்து போன மரமென்று
கதை கட்டி விடாதீர்கள்!
இலையுதிர் காலம் இப்போ-
இதுதான் இன்றைய தமிழினம்!

சதா கணபதி- அதிகாரவத்தை,
உடபுஸ்ஸலாவ.

## கவிதைப் போட்டி இல.211



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 05.07.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.211
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

'ஒரு கன்னத்தில் அறைந்தால், மறு கன்னத்தைக் காட்டு' என்பதைவிட, 'மறு கன்னத்தில் காட்டு' என்பதுதான் மிகப் பொருத்தம்! அதாவது அடிக்கு, அடி! உதைக்கு, உதை! அதுதான் வதைக்கும் கொடியவர்களுக்குப் பாடம்! பூலானின் பொலிசியும் அதுதானே? பட்ட பெரும் துயருக்கு பழி வாங்கத் துடிக்கும் பூலானை மெருகேற்றும், 'முரசு ரசிகனே!' இப்படி கொடுங்கள் கையை....

எஸ்.இராஜேந்திரன், கொஸ்லாந்தை.

● ▢ ●

இனிய முரசே!

'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' என்ற பகுதியில் தந்த 'ஜலண்ட் காட்டூன்' எம்மைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது. அரசியல் தொடரும் அருமை. பூலான் தேவி தொடர் கதை, தொடரும் புதிய தொடர் கதை, கனவு மெய்ப்பட வேண்டும் தொடர்கதை அனைத்துமே பிரமாதம். அற்புதனிற்கும் ரசிகனிற்கும், பிரபஞ்சனிற்கும், ராஜேஸ்குமாரிற்கும் பாராட்டுக்கள்.

ச.நவேந்திரன், விவேகானந்தபுரம், வெல்லாவெளி.

● ▢ ●

இனிய முரசே!

காதில 'பூ கந்தசாமியார் கற்பனை தான் செய்வார் என எண்ணினேன் (கற்பனையில்). காதைக்கூட கூர்மையாகத்தான் வைத்திருக்கின்றார். நம்மவர்கள் விடும் ரீல்களை நம்பர் போட்டே நாசூக்காய் சொல்லிவிட்டார்.

செல்வன் அருமைத்துரை பரமேஸ்வரன், நவிண்டிலூர்.

● ▢ ●

அன்புக்கினிய முரசாரே!

அவுஸ்திரேலியாவிலிருந்து களுவாஞ்சிக்குடி யோகன் எழுதிய 'சொந்த மண்ணே சொர்க்கம்' என்னும் சிறுகதை அருமை. இன்றைய புலம் பெயர்ந்தோரின் உண்மை நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டிவிட்டார்.

இரா.வினோத்குமார், அன்பு நகர், அட்டன்.

● ▢ ●

கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் வழங்கும் 'உடைந்த இரவு' தொடர் ஆரம்பமே வெளுத்து வாங்கிவிட்டது. கதையில் வரும் நாயகின் பெயர் தான் வாயினுள் செல்வதற்கு கொஞ்சம் கஷ்டமாக உள்ளது.

எம்.சீ.எம்.சன்பராபாஹிர், தர்ஹா வீதி,
கொட்டாரமுல்லை.

● ▢ ●

முரசே! உன்னில் அடங்கி உள்ள பல்சுவை அம்சங்கள் அனைத்தும் புதுமை. சுவைக்க சுவைக்க திகட்டாதவை. ஒருவார எல்லைக்குள் ஓராயிரம் அம்சங்களை சீரான வரியில் பாகுபாடின்றி சுமந்து வருகிறாயே. வாழ்க தமிழ்! வளர்க உனது பணி.

செல்வன்.எ.நிசாந்தன், பெரிய நீலாவணை-01.





## சமரச சிந்தனைகள்

அன்பு முரசுக்கு!

ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் தமது அரசியல் நலன்கள்-கட்சி நலன்கள் என்ற வட்டத்துக்குள்ளேயே நிற்கின்றன. அதனைவிட்டு வெளியேவர முடியாது என்பதை 'முரசு' மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டி வந்திருக்கிறது.

அதே சமயம் ஜனநாயக அரசியல் பாதையில் நடைபோடுவதாகச் சொல்லும் தமிழ்க் கட்சிகளும் 'குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டம்' நடத்திவருகின்றன. இக் கட்சிகளினால் தம்மை தக்கவைத்துக்கொள்ளும் சமரசங்களுக்கு அப்பால் சிந்திக்க முடிகிறதா? இக் கட்சிகள் தாமும் குழம்பி மக்களையும் குழப்புகின்றன. இவர்களை அவர்கள் குழப்புகிறார்கள். இவர்கள் தமிழ் மக்கள் முதுகில் சவாரி செய்கிறார்கள். அவர்கள் இவர்கள் முதுகில் சவாரி செய்கிறார்கள்.

தமிழ்க் கட்சிகளின் பலவீனம் நன்கு மறுதரப் பால் எடை போடப்பட்டுவிட்ட நிலையில், அதே பல வீனங்களோடு இக் கட்சிகள் சாதிக்கப்போவது பூச்சியமே!

ஜெ.கனகசுந்தரம், கொழும்பு-05.

## ●●●● அவசரம் ஏன்? ●●●●

முரசுக்கு!

தானே ஒரு தமிழ்க்கட்சிபோலவும், தனிப்பிரதிநிதி போலவும் தமிழர் விடுதலைக் கூட்டணி தனியாக ஓடி முஸ்லிம் காங்கிரசுடன் உடன்பாடு செய்துகொண்டது. இதனால் ஏனைய தமிழ்க் கட்சிகள் தம் கருத்தைக் கூறும் போது அவை முஸ்லிம் மக்களுக்கு எதிரான விரோதமாகக் கொள்ளப்படுமே தவிர, கருத்து மாறுபாடுகளாக கருதப் படப்போவதில்லை.

கூட்டணியின் அவசரம் தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கு வேட்டு வைக்கும் விதமாக அமைந்துவிட்டது. ஏனைய தமிழ் அணிகள் இந்த உடன்பாட்டை ஏற்காதபோது சமூக முரண்பாடுகள் தீவிரமாகலாம்.

முதலில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் பேசி கருத்தறிந்தோ அல்லது, அவற்றை சரியான நிலைப் பாடு காணச்செய்துவிட்டோ முஸ்லிம் மக்கள் தொடர் பான கருத்தை கூட்டு- அணி முன்வைத்திருக்கலாம்; தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்த்திருக்கலாம்.

எம்.மில்டன், திருகோணமலை.

## அத்திவாரம் தேவை

அத்திவாரம் இல்லாத நிலையில் மேற்கட்டு மானம் பற்றிய விவாதங்களில் தமிழ்க் கட்சிகள் ஆழ்ந்திருப்பது தொடர்பாக இராஜதந்திரி கூறிய கருத்துக்கள் சரியே. அத்திவாரம் உறுதியாகப் போடப்பட்டுவிட்டால், பின்னர் மேற்கட்டுமானத்தில் குறைகள் இருந்தால்கூட திருத்திக்கொள்ளலாம். அடிப்படை உரிமைகள் கிடைத்தால் பின்னர் ஏனைய அதிகாரப் பகிர்வு விடயங்களில் உள்ள குறைகளை எக்காலத்திலும் ஈடுசெய்து கொள்ளலாம் அல்லவா? இதனை நம் அரசியல் கட்சிகள் தெரிந்தும் தெரியாதது போல நாடகமாடி காலதாமதங்களுக்கு கைகொடுப்பதுதான் வேதனையாக உள்ளது.

கி.கருணாகரன், மட்டக்களப்பு.

## காலத்தின் தேவை

'விதியே விதியே என்ன செய்ய நினைத்தாய் தமிழ்ச் சாதியை?' பகடைக்காய்களாக மாறி நிற்கின்றன எம்மவர் கட்சிகள். தமிழ்-முஸ்லிம் மக்கள் பிரித்தாளும் வலைக்குள் சிக்கிக்கொள்ளப் போகின்றனரா? முஸ்லிம் காங்கிரஸ் இன்றைய நிலையில் கிழக்கு முஸ்லிம்களின் ஜனநாயக பிரதிநிதித்துவ கட்சி என்பதை முதலில் தமிழ்க் கட்சிகள் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதனடிப்படையில் ஒருமித்த செயற்பாட்டுக்குள் தமிழ்-முஸ்லிம் கட்சிகள் கைகோர்த்து நிற்பது காலத்தின் தேவை. இல்லையானால், பிரித்தாளும் சூழ்ச்சிக்கு பலியாக நேரும்.

எஸ்.செல்வேந்திரன், மட்டக்களப்பு.

## மாகாணம் தேவை

முஸ்லிம்களுக்கு தனிமாகாணம் தேவை என்பதை தம் அத்துமீறல்களால் உணர்த்தியது யார்? சிங்கள மக்களின் தலைமைகள் தமிழ் மக்களுக்குச் செய்த அதே தவறை மாகாணசபை காலத்தில் தமிழ்க் கட்சிகளும், பின்னர் புலிகளும் செய்யவில்லையா? படுகொலைகள், வெளியேற்றி துரத்திய கொடுமைகள் நியாயம் சொல்லக்கூடியவையா? தமிழ் மக்கள் தங்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதமான தீர்வை நாடுதல் எத்தனை நியாயமானதோ அதேயளவு நியாயம் முஸ்லிம் மக்கள் தமது பாதுகாப்புக்குத் தமக்கான தீர்வைக் கோருவதும்.

எம்.எச்.பாரூக், கல்முனை.



படிப்பகம்

www.padippakam.com

# "திலகர் எங்கே?" செய்தி நிறுவனங்கள் தேடல்!

## புலிகளுக்கு மேற்கு நாட்டு உதவி?

விடுதலைப் புலிகளின் பாரிஸ் பிரதிநிதியான லோரன்ஸ் திலகர் தற்போது எங்கிருக்கிறார் என்னும் விபரம் மர்மமாக உள்ளது.

சில மாதங்களுக்கு முன்பாக கடல் மார்க்கமாக வன்னி சென்ற திலகர், புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனை சந்தித்தார். பின்னர் கடல்மார்க்கமாக திலகர் திரும்பிச் சென்றிருந்தார்.

பாரிசில் திலகருடன் தொடர்புகொள்ள செய்தி நிறுவனங்கள் பல முயன்றபோதும் திலகர் அங்கு இல்லை என்று புலிகளின் பாரிஸ் கிளையினரால் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இதனையடுத்து திலகர் எங்கிருக்கிறார் என்பது மர்மமாக இருந்து வருகிறது.

சமீபத்தில் ஜெர்மனியில் மரணச்சடங்கு ஒன்று நடைபெற்றது. லோரன்ஸ் திலகரின் பாரியாரின் சகோதரி கணவரின் மரணச் சடங்கே அதுவாகும். அந்த மரணச்சடங்கில் கலந்துகொள்வதற்காக லோரன்ஸ் திலகரின் பாரியார் பாரிசில் இருந்து சென்றிருந்தார். லோறன்ஸ் திலகர் அங்கு காணப்படவில்லை.

மிக நெருங்கிய குடும்ப உறவினரின் மரணச்சடங்கில் கலந்துகொள்ள திலகர் செல்லாமையால் 'திலகர் ஏன் வரவில்லை?' என்று பாரியாரிடம் உறவினர்கள் பலர் கேட்டனராம். மிக நெருக்கமான உறவினர்களிடம் மட்டும், திலகர் மீண்டும் வன்னிக்குச் சென்றுவிட்டதாகவும், எப்போது திரும்புவார் என அறியமுடியாது உள்ளதாகவும் பாரியார் கூறியதாகத் தெரிகிறது.

திலகர் மீண்டும் வன்னிக்கு அழைக்கப்பட்டாரா? அல்லது வெளிநாடொன்றில் தங்கியிருந்து தன் நடவடிக்கைகளை இரகசியமாக மேற்கொண்டு வருகிறாரா என்பது மர்மமாக உள்ளது.

இதற்கிடையே இந்த விடயத்தில் பல்வேறு ஊகங்கள் சொல்லப்படுகின்றன. பிரபாகரனின் முக்கிய செய்தி ஒன்றுடன் சென்ற திலகர் வெளிநாடொன்றின் சாதகமான பதிலுடன் மீண்டும் வன்னிக்குத் திரும்பியுள்ளார். இராணுவ ரீதியான இரகசிய உதவிகளை புலிகளுக்கு வழங்க மேற்கு நாடொன்றும், இன்னொரு தீவிரவாத இயக்கமும் சம்மதம் தெரிவித்துள்ளன என்றும் ஒரு தகவல் கூறுகிறது.

மற்றொரு தகவலின்படி திலகரின் செயற்பாடுகள் திருப்தியளிக்காமையால் அவரை வன்னியிலேயே பிரபாகரன் இருக்கச் சொல்லிவிட்டார். சர்வதேச ஆதரவை போதியளவு திரட்டவும், இலங்கை அரசுக்கு எதிரான பிரசாரங்களை முடுக்கிவிடவும் போதிய முயற்சிகளை செய்யவில்லை. அதுதவிர புலிகளின் முக்கியஸ்தர் என்று இனம் காணப்பட்ட திலகரை இலங்கை அரசின் பிரமுகர்கள் பலரும், அரசுடன் தொடர்புடையவர்களும் பலமுறை சந்தித்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிக்காவும் மேல்மாகாண சபை முதல்வராக இருந்தபோது வெளிநாடு சென்ற நேரத்தில் திலகரை சந்தித்திருக்கிறார்.

இத்தகைய சந்திப்புக்கள் தொடர்பாக முழுமையான விபரங்களை தலைமைக்கு அறிவிக்க திலகர் தவறியிருந்தார். இவ்வாறான நிகழ்வுகளின் பின்னணியிலேயே திலகர் சர்வதேச பொறுப்புக்களில் இருந்து பிரபாகரனால் சமீபத்தில் நீக்கப்பட்டுள்ளார், என்று அத்தகவல் கூறுகிறது. வெளிநாடொன்றுக்கு பிரபாவின் செய்தியுடன் சென்று அந்த நாட்டு இராஜதந்திரிகளோடும், தீவிரவாத இயக்கமொன்றுடனும் பேசிவிட்டு திரும்பியதே திலகருக்கு வழங்கப்பட்ட கடைசிப்பணியாகும். இனிமேல் வன்னியில் பிரபாகரனுடன் அவர் தங்கியிருப்பார் எனவும் அத் தகவல் தெரிவிக்கிறது.

எவ்வாறிருப்பினும் இவையெல்லாம் ஊகங்கள் மாத்திரமே. திலகர் தற்போது எங்கிருக்கிறார்? வன்னிக்கு மீண்டும் சென்றிருந்தால் அதன் நோக்கம் என்ன? இவை போன்ற உண்மை விபரங்களை உடனடியாக எம்மால் பெறமுடியவில்லை. ஆயினும் திலகர் பாரிசில் தற்போது இல்லையென்பதை மட்டும் 'முரசு' நம்பகமாக ஊர்ஜிதம் செய்கிறது.

# பாரிய ஊடறுப்புக்கு ஒத்திகை!

# பெண்கள் படையணி முன்னணியில்

## இரு தரப்பும் கடும் சமர்

### முதல் நாள் சமர்

புளியங்குளத்தை கைப்பற்ற படையினர் மேற்கொண்ட தரைநகர்வு நடவடிக்கையின் போது கடும் மோதல் மூண்டது.

டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் விமானப்படை உதவியுடன் படையினர் முன்னேறத் தொடங்கினர்.

ஓமந்தையில் இருந்து சில கிலோமீட்டர் முன்பாக உள்ள பெரியமடுவில் இருந்து ஒரு முனையிலும், நெடுங்கேணியில் இருந்து மற்றொரு முனையிலும் படையினர் இரு முனைகளால் முன்னேறினர்.

பெரியமடுவில் இருந்து புறப்பட்ட படையணியினரை புலிகளின் மகளிர் படையணி எதிர்கொண்டு தாக்கியது. இத் தாக்குதலில் ஒரு டாங்கி அழிக்கப்பட்டதாகவும், இரண்டு டாங்கிகள் சேதமாக்கப்பட்டதாகவும் புலிகள் விடுத்த செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

முதல்நாள் சண்டையில் பத்துப் பெண் புலிகள் உட்பட 11 புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலியானதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். 23.06.97 அன்று பனித்த புளியங்குளம் பகுதியில் நடைபெற்ற மோதலில் ஐந்து புலிகள் பலியானார்கள்.

நெடுங்கேணியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட படை நகர்வு புலிகளின் எதிர்த் தாக்குதல் காரணமாக பின்னடைந்துள்ளதாக தெரிகிறது.

### ஊடறுப்பு

வவுனியா பாதுகாப்பு நிலைகளை நோக்கி 24.06.97 அன்று புலிகள் ஆட்டிலெறித் தாக்குதல்களை மேற்கொண்டதையடுத்து, புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாவின் வடமேற்குப் பகுதி நோக்கி படையினரும் ஆட்டிலெறித் தாக்குதல்களை நடத்தினார்கள்.

24.06.97 செவ்வாய்க்கிழமை புலிகளின் ஆட்டிலெறித்தாக்குதல் ஆரம்பமானது. இதனையடுத்து வவுனியா நோக்கி புலிகளின் மற்றுமொரு ஊடறுப்பு நிகழக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அந்த எதிர்பார்ப்பில் படையினர் இருக்கக்கூடியதாக திசைதிருப்பிவிட்டு, புலிகளின் தாக்குதல் அணியொன்று ஓமந்தைக்குள் ஊடறுத்தது.

வவுனியாவில் இருந்து வவுனியா-கிளிநொச்சி சாலையில் முன்னேறிய படையினரின் பின்னரங்கத்தில்- அதாவது வால்பகுதியில்- நடைபெற்ற தாக்குதலே தாண்டிக்குள தாக்குதலாகும்.

24.06.97 அன்று நடைபெற்ற ஊடறுப்பு தாக்குதல் ஜயசிக்குறுய் படையினரின் இதயப் பகுதியில் நடைபெற்ற தாக்குதலாகும்.

### எப்படி நடந்தது?

தாண்டிக்குள சமரில் பெற்றிருந்த ஊடறுப்பு அனுபவத்தைக் கொண்டு உற்சாகமடைந்திருந்த புலிகளின் தாக்குதல் பிரிவுகள் ஓமந்தை ஊடறுப்பில் உக்கிரமாக ஈடுபட்டன.

23.06.97 திங்கட்கிழமை பெரியமடுவில் இருந்து புறப்பட்ட படையினர் அங்கிருந்து சில கிலோமீட்டர் தூரம் முன்னேறியிருந்தனர். அவ்வாறு முன்னேறிய ஜயசிக்குறுய் படையினரின் தலைப்பகுதியில் புலிகளின் மகளிர் படையணி நடத்திய தாக்குதலால் படை முன்னேற்றம் தாமதப்பட்டிருந்தது.

இந்நிலையில் 24.06.97 அன்று வவுனியா பாதுகாப்பு நிலைகள் மீது ஆட்டிலெறித் தாக்குதலை நடத்திய புலிகள், ஓமந்தையில் இருந்து புளியங்குளம் நோக்கிய சாலையில் நிலைகொண்டிருந்த படையினர் மீதும் ஆட்டிலெறித் தாக்குதலை தொடுக்க ஆரம்பித்தனர்.

சரமாரியாக பொழியப்பட்ட ஆட்டிலெறித் தாக்குதல் சட்டென்று ஓய்ந்த கணத்தில் புலிகளின் படையணிகள் பெரிய மடுவுக்கும் ஓமந்தைக்கும் இடைப்பட்ட பகுதிக்குள் ஊடறுத்தன.

ஓமந்தைக்கும் பெரியமடுவுக்கும் மேற்குப் புறமாக இருந்து பெருமளவான புலிகளின் அணிகள் ஜயசிக்குறுய் படைத் தொடரின் இதயப்பகுதியில் தாக்கி ஊடறுத்தன. அதே நேரம் படையினரின் கவனத்தை திசை திருப்ப சிறு அளவிலான புலிகளின் அணியொன்று கிழக்குப் புறமிருந்து படையினரை தாக்கிக்கொண்டிருந்தது. படையினரின் முழுக் கவனமும் மேற்குப் புறமிருந்து ஊடறுக்கும் அணியை எதிர்கொள்வதில் திரும்பாமல் தடுக்கவே அவ்வாறு செய்யப்பட்டது. அதனால் பிரதான ஊடறுப்பு அணி எப்பக்கம் இருந்து வருகிறது என்று படையினர் கணிப்பிட இயலாமலும் போனது.

### ஆட்டிலெறிகள்?

வவுனியாவின் மடு மற்றும் பாலமோட்டை காட்டுப்பகுதிகளுக்குள் நிலைகொண்டிருந்த புலிகளின் அணிகளே இத்தாக்குதலில் பிரதான பாத்திரம் வகித்துள்ளன. முக்கியமாக பெண்கள் படைப்பிரிவே சண்டையில் அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டது.

முல்லைத்தீவில் இருந்து நெடுங்கேணிக்கும் புளியங்குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியால் புகுந்த மற்றொரு அணயே கிழக்குப் புறமிருந்து திசைதிரும்பும் தாக்குதலை நடத்தியது.

இத்தாக்குதலில் படையினர் தரப்பில் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியானதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பல நூற்றுக் கணக்கான படையினர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டதாக வவுனியா தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை இச் சண்டையில் ஆட்டிலெறிப் பீரங்கிகள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுவதை படைவட்டாரங்கள் மறுத்துள்ளன.

தாண்டிக்குளத்தில் இருந்து ஆட்டிலெறிகளை கொண்டுசெல்லக்கூடிய களநிலவரம் இருக்கவில்லை. ஆனால் ஓமந்தை- பெரிய மடுவுக்கு அருகே காட்டுப்பகுதிகள் இருப்பதால் ஆட்டிலெறிகளை கட்டி இழுத்து உருமறைத்துச் சென்றிருக்க முடியும். இவைபற்றி இரு தரப்பும் கூறும் தகவல்கள் தெளிவாக இல்லாமல் உள்ளன.

தம்மால் பெருந்தொகையான படைக்கலங்கள்-டாங்கிகள் உட்பட அழிக்கப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இரு தரப்பு இழப்புக்கள் மற்றும் சேத விபரங்கள் முன்னுக்குப் பின் முரணாகக் கிடைத்து வருகின்றன. அதனால் அடுத்த வாரம் மேலதிக விபரங்கள் தரப்படும்.

தாண்டிக்குளச் சமர் பரீட்சார்த்தத் தாக்குதல் என்றும் "விரைவில் எமது பலத்தை காட்டுவோம்!" என்றும் புலிகளின் துணைத் தளபதி பால்ராஜ் வன்னியில் தெரிவித்ததாக கடந்தவாரம் செய்தி வெளியிட்டிருந்தோம்.

தாண்டிக்குளச் சமரைவிட படையினரின் இதயப்பகுதியில் நடைபெற்ற இந்த ஊடறுப்பு பாரியதாகும்.

இதேவேளை இத்தகைய ஊடறுப்புக்களின் பின்னர் மேலும் பாரிய ஊடறுப்பு சமர் ஒன்றை புலிகள் நடத்தக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

## பண்டிகையால் தமிழ் - முஸ்லிம் பகுதி வாகனங்களுக்குத் தடை!

### அம்பாறையில் பொலிசாரின் நடவடிக்கை!

நாடளாவிய ரீதியில் பொசன் நோன்மதி தினப் பண்டிகை கடந்த 20.06.97 அன்று வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. பெரிய அளவிலான தோரணப் பந்தல்களும், அவற்றில் புத்தபகவானின் சாத்வீக, சமாதான சரித்திரக் கதைகளும் சித்தரிக்கப்பட்டிருந்தன.

இப்பண்டிகையை ஒட்டிய நிகழ்ச்சிகளின் காரணமாக அம்பாறை நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அம்பாறை பிரதான பஸ் நிலையத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட இடத்திலேயே இதுவரை காலமும் கல்முனை, அக்கரைப்பற்று மற்றும் இது போன்ற தமிழ்- முஸ்லிம் பகுதிகளிலிருந்து வரும் வாகனங்கள் நிறுத்தி வைக்கப் பணிக்கப்பட்டிருந்தன. ஆனால் கடந்த பொசன் பண்டிகைக்காக அப்பகுதியை விட்டும் வேறோர் பகுதியில் தமிழ்- முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து வரும் வாகனங்களைக் கொண்டு சென்று நிறுத்துமாறு பொலிஸாரால் கட்டளையிடப்பட்டு, அவைகள் தெருவோரத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. இதனிடையே சிங்களப் பிரதேச வாகனங்கள் எதுவித தடையுமின்றி வழமையான பஸ் நிலையத்தில் நிறுத்தித் தமது சேவையை நடத்தின.

முஸ்லிம்-தமிழ்ப் பகுதி வாகனங்கள் குண்டும் கொண்டு வரும் என்ற அச்சத்தினாலேயே அவர்கள் வாகனத்தை அப்புறப் படுத்துமாறு பணித்ததாகவும் ஆனால் வெசாக் பண்டிகைக்காகவோ பொசன் பண்டிகைக்காகவோ, வழமையாகவோ வாகனக் காரர்களிடம் பணமோ பொருளோ அறவிடும் பொழுது தமிழ்- முஸ்லிம் பிரதேச வாகனக் காரர்களிடமே பொலிசாரும் படையினரும் கண்டிப்பான அன்பளிப்புப் பெறுவதாகவும் முஸ்லிம்- தமிழ் பிரதேச வாகனக்காரர்கள் சலிப்புடன் தெரிவிக்கிறார்கள்.

## "உதவினால் தண்டனை"

### படையினர் எச்சரிக்கை!

யாழ் குடாநாட்டில் நீர்வேலி மாசிவன் சந்தியில் படையினர்மீது கைக்குண்டுத் தாக்குதல் ஒன்று புலிகளால் நடத்தப்பட்டது.

இச் சம்பவத்தில் இரண்டு படையினர் பலியாகி இருக்கலாம் என்று தெரிகிறது. இதனையடுத்து அச்செழு கிராமசேவையாளர் தவராசா என்பவர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரது கைது தொடர்பாக இராணுவத்தினர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். "விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு இவர் உடந்தையாக இருந்தார்.

மூன்று முறை எச்சரிக்கப்பட்டும்கூட அதனையும்மீறி புலிகளுக்கு உதவினார். அதன் காரணமாகவே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மூன்று தாக்குதல்கள் தொடர்பாக முன்கூட்டியே தெரிந்திருந்தும் தகவல்தர தவறியிருந்தார்" என்று இராணுவத்தினரின் அறிக்கை கூறுகிறது.

"விடுதலைப் புலிகளுக்கு யாழ் குடாநாட்டில் உதவி செய்பவர்கள் யாராக இருந்தாலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவார்கள்," என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## வவுனியாவில் 'திக்...திக்...திக்!'

### வெளியே நடமாட மக்கள் அச்சம்!

வவுனியா நகரில் புலிகளின் ஊடுருவல் அதிகமாயிருப்பதாக படை வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

படையினரின் நடவடிக்கைகள் வன்னியில் தொடரும்போது, வவுனியா நகரில் உள்ள பாதுகாப்பு நிலைகள் மீது புலிகள் குறிவைப்பதுடன், அங்கு படையினரின் பிடி தளரக்கூடிய நடவடிக்கைகளிலும் ஈடுபடுவர் என்று கருதப்படுகிறது.

இதேவேளை 16.06.97 அன்று வவுனியாவில் சைக்கிள் குண்டொன்று வெடித்தது. இக் குண்டுவெடிப்பு புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் குற்றம் சாட்டியிருந்தன.

இக் குற்றச்சாட்டை புலிகள் மறுத்துள்ளனர். தமக்கு ஏற்பட்டுவரும் தோல்வியை மூடிமறைக்க இவ்வாறான பிரசாரம் அரசால் செய்யப்படுவதாகக் கூறியுள்ள புலிகள், குறிப்பிட்ட நடவடிக்கைக்கு அரசுமீது குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பாக புலிகளின் சர்வதேச செயலகமும் மறுப்பறிக்கை வெளியிட்டுள்ளது.

வவுனியாவில் அசம்பாவித சம்பவம் ஏதாவது நடைபெற்றால் உடனடியாக கடைகள் மூடப்படுகின்றன; நகர் வெறிச்சோடுகிறது; எங்கு என்ன நடக்குமோ என்ற அச்சம் காணப்படுகிறது. தேடுதல் நடவடிக்கைகளும், கண்காணிப்புக்களும் தீவிரமாகியுள்ளன.

வவுனியாவில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியான பாவற்குளத்தில் தமிழ் அமைப்பொன்றின் உறுப்பினர்கள் சென்றபோது அவர்களை புலிகள் வழிமறித்தனர். "எங்கள் நடவடிக்கைகளில் குறுக்கிடவேண்டாம், உங்கள் வழியில் நாங்கள் குறுக்கிடமாட்டோம்" என்று புலிகள் கூறியதாகவும் தெரிய வருகிறது.

கடந்த சிலநாட்களாக படையினருக்கும் புலிகளுக்கும் இடையிலான ஷெல் பிரயோகங்களால் வவுனியாநகர் கிடுகிடுத்தது. மக்கள் வெளியே நடமாடவே அஞ்சுகின்றனர்.

## "ரவுண்டப்"பில் பெண் பொலிஸார்!

(நமது நிருபர்)

திருமலை நகரில் அடிக்கடி சுற்றிவளைப்புகளும் ஆள் பிடிப்புகளும் நடைபெறுகின்றன. ஆண் பொலிசாருக்கு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக இந்த நடவடிக்கைகளில் அண்மையில் ஆயுதந்தரித்த பெண் பொலிஸார்களே சோதனையில் ஈடுபடுவதைக் காண முடிந்தது.

நகரத்தில் வசிப்பவர்கள் பகுதி அடையாள அட்டைகளை கண்டிப்பாகக் காட்ட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறார்கள். வெளியூர்வாசிகளும்- குறிப்பாக கடும் சோதனைக்குட்படுத்தப்படுகிறார்கள்.

சந்தேகமுடையவர்கள் தலையாட்டி முன் நிறுத்தப்பட்டு பரிசோதிக்கப்படுகிறார்கள். சல்லி ஆலயத் திருவிழாவில் ஏற்பட்ட அசம்பாவிதத்திற்குப் பின்பு திருமலை நகரில் சுற்றி வளைப்புகளும் தேடுதல் நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

திருமலை மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்களையும் ஆயுதப் படையினர், புலிகளின் ஊடுருவல் பற்றிய அச்சமான கண்காணிப்புடனேயே அவதானித்து வருகின்றனர்.

## "கடவுள்களாக மதித்தால் கரிசனை காட்டுவோம்!"

### அதிரடிப்படையினர் கண்டிப்பான அறிவிப்பு!

மட்டக்களப்பு-புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாம் முன்னால் மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிச் சென்ற பயணிகள் பஸ்ஸை படையினர் வழிமறித்துச் சோதனை செய்தனர். பின்னர் பஸ்ஸுக்குள் பயணிகளோடு பயணிகளாக 15க்கு மேற்பட்ட படையினர் ஏறிக்கொண்டனர். ஏறியவர்கள் அங்கிருந்த பயணிகளிடம் பஸ் ஜன்னல் கண்ணாடிகளைத் திறக்கச் சொல்லிவிட்டு, "நீங்கள் எம்மைக் கடவுள்கள் போல் மதித்துக் கண்ணியம் செலுத்த வேண்டும்! அப்பொழுதுதான் உங்கள்மீது நாமும் கரிசனை காட்டுவோம். பொலிசாரையோ, இராணுவத்தினரையோ நீங்கள் எடைபோடுவது போன்று எம்மையும் கணிப்பிட்டால் விளைவு விபரீதமாயிருக்கும்!" என்றனர். பயணிகள் வாயே திறக்கவில்லை.

இச்சம்பவம் கடந்த 22.06.97 அன்று நடந்தது. சமீப சில காலங்களுக்கு முன்னரும் இவ்வாறு படையினர் பயணிகள் பஸ்களில் வருவதை அறிந்த புலிகள் இயக்கத்தினர் அதை வழிமறித்துச் சரமாரியாகச் சுட்டதில் பஸ்ஸிலிருந்த படையினர் அனைவருடன் பயணிகள் பலரும் பலியான விபரீத சம்பவம் இடம்பெற்றது நினைவிருக்கலாம்.

இதனிடையே மட்டக்களப்பு- கிரான் குளம் விசேட அதிரடிப்படை முகாமைச் சூழவுள்ள புதர் நிறைந்த காடுகளை வெட்டி அழிப்பதற்காக அப்பகுதியைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஆண்கள் அனைவரும் விசேட அதிரடிப்படையினரால் அழைக்கப்பட்டிருந்தனர். சுமார் 200 பேரளவில் காடழிக்கும் கட்டளைக்காக கத்தி, கோடரிகளுடன் நின்றிருந்தனர்.

## "நேருக்கு நேரே வாங்கடா!"

### அழைத்தனர்- வந்தனர்- சுட்டனர்!

மட்டக்களப்பில் ராசீக் குழுவினரின் உறுப்பினர் ஒருவர் புலிகள் இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: 24.06.97 அன்று நண்பகல் ராசீக் குழுவினர் ஆயுதங்கள் சகிதம் மட்டக்களப்பு கண்ணன் கிராமத்துக்குச் சென்றனர்.

கண்ணன் கிராமத்தில் புலிகள் இயக்கத்தினரைத் தேடியே அவர்கள் சென்றிருந்தனர். புலிகள் இயக்கத்தினர் எவரும் கண்ணில்படவில்லையென்பதால், "வீரமுள்ள தமிழர்களாக இருந்தால் நேருக்கு நேர் வாங்களடா!" என்று உரத்துக் குரல் கொடுத்துக்கொண்டிருந்தனர்.

இவ்விடயம் புலிகள் இயக்கத்தினரின் கவனத்துக்குச் சென்றது. அவ்விடத்துக்கு விரைந்துவந்த புலிகள் ராசீக் குழுவினரை நோக்கி சுடத்தொடங்கினர். உடனடியாக ராசீக் குழுவினர் அவ்விடத்தைவிட்டு தப்பிச் செல்கையில், புலிகளின் சூடுபட்டு ராசீக் குழு உறுப்பினர் ஒருவர் பலியானார். அவரது தலை சிதறி மூளை வெளியேவந்துவிட்டது. அதனை எடுத்து ஒரு கண்ணாடி அலுமாரிக்குள் வைத்து பொதுமக்களுக்கு காண்பித்தனர் புலிகள் இயக்கத்தினர்.

தமது குழுவில் பலியானவருக்காக மட்டக்களப்பில் அஞ்சலி தெரிவித்தனர் ராசீக் குழுவினர். அவர்களது அலுவலகத்தில் சோககீதமும் இசைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

## சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவு தாக்குதல்!

தாண்டிக்குளச் சமரின் பின்னர் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு மீண்டும் திருமலை திரும்பிவிட்டதாக செய்தி வெளியிட்டிருந்தோம் அல்லவா? 18.06.97 அன்று திருமலை புல்மோட்டையில் இராணுவ ரோந்து அணி மீது சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவே தாக்குதல் நடத்தியது. இத் தாக்குதலில் 27 இராணுவத்தினர் பலியாகினர். ஏழுபேர் காணாமல் போயினர்.

சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவைச் சேர்ந்த ஆறு புலிகள் பலியாகினர். சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவின் தாக்குதல் அணி தளபதிகளில் ஒருவரான கிளிநொச்சியைச் சேர்ந்த லெப்டினன்ட் கேணல் மாதவன் (சின்னையா விநாயக மூர்த்தி) உட்பட ஆறு பேர் பலியாகினர். பலியான ஆறுபேரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோராவர். சகல பகுதிகளிலும் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்களைக் கொண்டதே சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு.

ஏ.கே.எல்.எம்.ஜி-04, ரி.81-08, ரி.56-2 ரகம்-03, ரி.56- 3ரகம்-04, ரி.56- பட்மொடல்-03, தொலைத்தொடர்பு சாதனம்-03, நடுத்தர ரவைகள் இணைப்புடன் 603, கைக்குண்டுகள்-07, சப்பாத்துக்கள் 10 ஜோடி ஆகியன கைப்பற்றப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

## நியமனத்தை ஏற்காத ஆசிரியர்கள்!

(கண்டி நிருபர்)

தோட்டப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் பொருட்டு இரண்டு கட்டங்களில், போட்டிப்பரீட்சை முடிவுகளின் கீழ் வழங்கப் பட்ட 450 நியமனங்களில் சுமார் 100 பேர் மட்டில் இதுவரையும் நியமனத்தை ஏற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் பெருந் தோட்டப்புறங்களைச் சேர்ந்த தூரப்பாட சாலைகளுக்கு நியமிக்கப்பட்ட இவ்வாறான ஆசிரியர்களே இவ்வாறு கடமையை இதுவரையும் ஏற்கவில்லையாம். கடந்த 1.6.97 தொடக்கம் 326 ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. இவர்களில் பலர் ஜி.சி.ஈ. சாதாரண பத்திரத்தை உடையவர்களாவர். இவ்வாறு கடமையை ஏற்க முடியாத ஆசிரியர்களின் நிலைமையால் தோட்டப்புற மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்படைந்து வருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

போட்டிப்பரீட்சை முடிவுகளின் கீழ் முதற் கட்டத்தில் 124 பேரும் இரண்டாம் கட்டமாக 326 பேரும் நியமிக்கப்பட்டனர். மேலும் 137 பேருக்கு அதிவிரைவில், கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனையுடன் மத்திய மாகாணத்தில் நியமனங்கள் வழங்கப்பட உள்ளன.

இதே வேளையில், முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் 600 ஆசிரியர் பற்றாக்குறை இன்னும் தீர்க்கப்படவில்லை. இதனால் தேசிய பாடசாலைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

## அகதி முகாமில் புடவை வியாபாரம்

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து சுய விருப்பின் பேரில் யாழ் செல்ல விரும்பும் மக்கள் கடந்த சில தினங்களுக்கு முன்பு- தினமும் புகை வண்டியில், பஸ்களில் என்று நூற்றுக் கணக்கானவர்கள் திருமலை வந்தடைந்த வண்ணமிருந்தனர். அவர்களை உப்பு வெளி மூன்றாம் கட்டை அகதி முகாம் கட்டடத்தில் தற்காலிகமாகத் தங்க வைத்துப் பரிபாலித்து வந்தனர்.

இவ்வேளையில் இங்கு தங்க வைப்பவர்கள் யாரும் வெளியில் செல்லக்கூடாதெனத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தன.

வெளியில் சென்றாலும் யாழ் அடையாள அட்டைகளால் தேவையற்ற விசாரிப்புக்களுக்கும் உள்ளாக நேர்ந்தது.

இதனை அறிந்த சில வியாபாரிகள் தமது மூட்டை முடிச்சுக்களுடன் அகதி முகாம் பகுதிக்குள் வியாபாரத்தை முடுக்கி விட்டனர். யாழ் செல்லவிருக்கும் மக்கள் அதிகமாக உடு புடவைகளையே வாங்கினர். இதனால் புடவை வியாபாரிகளுக்கு அமோகமான விற்பனை, அகதி முகாமிற்குள்ளேயே நடந்தது.

இதனைக் கேள்வியுற்ற நடைபாதை வியாபாரிகள் எல்லாம் இங்கே படையெடுக்கத் தொடங்கினர். வியாபாரமும் நடந்தது.

தற்பொழுது வவுனியாவில் இருந்து அகதிகள் வருகை நிறுத்தப்பட்டிருக்கின்றது.

அடுத்த தடவை அகதிகள் வருகையை எதிர் பார்த்து வியாபாரிகள் காத்திருக்கின்றனர்.

மானுடபுத்ரன்.

## நேற்றுப்புலி....இன்று?

சில நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பு- வாகரைப்பகுதியில் புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினராக இருந்த நபரொருவர் தற்சமயம் படையினருடன் இணைந்து வாழைச் சேனைப் பகுதியில் செயற்பட்டு வருகிறாராம்.

ஏற்கனவே அவர் இயக்க நடவடிக்கையில் ஈடுபட்டபோது ஒத்துழைப்பு வழங்கிய- தனக்குப் பரிச்சயமானவர்களைக் கண்டால் இப்பொழுது விட்டு வைப்பதில்லை என்றும் கூறப்படுகிறது. அத்துடன் இவர் தன்னிச்சையான முறையில் அரச அதிகாரிகளையும் கூட அதிகார தோரணையில் மிரட்டுவதாகவும் சொல்லப்படுகிறது.

கிராமங்களில் ஆண்களை மாத்திரம் அழைப்பித்து தனக்குப் பரிச்சயமான நடவடிக்கைகளைக் காட்டுவதிலும் இவ்வாலிபர் ஆர்வம் காட்டுகிறாராம்.

## பிணக்குகளைத் தீர்க்க மத்தியஸ்த சபைகள்!
## நீதியமைச்சு ஏற்பாட்டில் பயிற்சி வகுப்புக்கள்!

மக்களுக்கிடையில் ஏற்படும் சிறு சிறு பிணக்குகளை சமாதான வழிகளில் பேசித் தீர்த்து வைப்பதற்கும், பிரச்சனைகள் பெரிதாகி அவை பொலிஸுக்கோ, நீதி மன்றத்திற்கோ செல்லாது தடுப்பதற்கும் நீதியமைச்சு 'மத்தியஸ்த சபைகளை' உருவாக்கி வருகிறது.

அவ்வப் பகுதிகளிலுள்ள சமூகங்களைச் சேர்ந்த பொதுமக்களும் இந்த சபைகளில் இடம் பெறுகிறார்கள். மத்தியஸ்த சபைகளை அமைக்கும் முதற் கட்டம் மட்டக்களப்பு- வாழைச்சேனைப் பிரதேச செயலகப் பிரிவில் கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. 16 பேரைக் கொண்ட மத்தியஸ்த சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு 5 நாள் பயிற்சி நெறி வழங்கப்பட்டது.

ஓய்வு பெற்ற சிறை அதிகாரியும், மத்தியஸ்த சபைக்கான கிழக்கு மாகாண இணைப்பு அலுவலருமான திரு.கணேசராஜா பயிற்சி நெறியை நடாத்தினார். வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் திரு.கே. கதிர்காமநாதனும் பயிற்சி நெறி துவக்க வைபவத்தின் போது கலந்து கொண்டார்.

இது ஒருபுறமிருக்க, புலிகள் இயக்கத்தினரும், தமது ஆளுகைக்குள் உட்பட பகுதிகளில் பொதுமக்கள் தமக்குள் ஏற்படும் சச்சரவுகளைத் தீர்க்க, அரசு நிர்வாகப் பொலிஸுக்குச் செல்லாது தமது காவல் துறையை நாடி வருவதாகவும், நாளாந்தம் ஏராளமான பொதுமக்களின் பிரச்சனைகளுக்குத்தாம் தீர்வு கண்டு வருவதாகவும் கூறுகிறார்கள்.

## எங்கே தமிழ் ஆசிரியர் சங்கம்?

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆசிரியர்கட்கு ஏற்படும் பிரச்சனைகட்டு தீர்வுகாண எந்தவொரு தொழிற்சங்கமும் சிறப்பாகச் செயற்படுவதாகத் தெரியவில்லை. 'இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்' என்ற அமைப்பு ஒன்று இருந்தது. அது இப்போது எங்கே? ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் பாடசாலைகட்கு தாய்ச்சங்க செயலாளர் திரு.மகாசிவம் அவர்கள் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டார். 'ஆசிரியர் சேவை' ஸ்தாபிதம் பற்றி அவர் பிரஸ்தாபித்ததுடன், தேர்தலுக்கு 'இன்னாருக்கு வாக்களியுங்கள்' என்ற மாதிரியும் கூறிவிட்டுச் சென்றார். 1995ம் ஆண்டிற்கான சந்தாப் பணம் சம்பளப்பட்டியலில் அறவிடப் பட்டது. அவ்வளவுதான்; வேறு எவ்வித நடவடிக்கைகளும் இல்லை.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக்குழுவினர் என்ன செய்கின்றார்கள்? தாங்கள் விரும்பிய இடங்கட்கு இடமாற்றம் பெறவும், தங்கள் வீட்டு விசேட வைபவங்கட்கு அதிகாரிகளைக் கூப்பிட்டு அவர்களை மகிழ்விக்கவும், க.பொ.த. பரீட்சைகட்கு நியமிக்கப்படும் மேற்பார்வையாளர்களின் நியமனங்களை ரத்துச்செய்யவும்தான் தங்கள் பதவிகளைப் பயன்படுத்துகிறார்களா?

கிழக்கு பல்கலைக்கழகம், காகித ஆலை ஊழியர் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்கட்கு 'இடர்காலக் கொடுப்பனவுகளை'ப் பெற்றுக் கொடுக்கமுடியும் எனின், தமிழர் ஆசிரியர் சங்கத்தால் அதனை ஏன் சாதிக்க முடியவில்லை? ஒருவருடத்திற்கும் மேற்பட்ட பாக்கி இன்னும் கொடுக்கப்படாமல் அப்படியே இருக்கின்றது.

அம்பாறை, கந்தளாய்ப் பகுதி சிங்கள ஆசிரியர்கள் எடுத்த நடவடிக்கை காரணமாகத்தான் கடந்த வருட இறுதியில் மூன்று மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன என்பதனை இவ்விடத்தில் வேதனையுடன் குறிப்பிடவேண்டியுள்ளது.

சில அதிகாரிகளின் எதேச்சாதிகாரமான நடவடிக்கைகளைக் கூட தட்டிக் கேட்க முடியாமல் ஆசிரியர்கள் அவதியுறுகின்றனர்.

இன்றைய இளம் ஆசிரியர்கள், சங்கத்தின் யாப்பு, அமைப்பு, பதவியில் உள்ள உறுப்பினர்கள் என்பனபற்றி எதுவும் தெரியாமல் வெறுப்புற்றுள்ளனர்.

எனவே 'இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்' உடன் நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். அல்லது புதியவர்கட்டு வழிவிட்டு ஒதுங்கவேண்டும். இது மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மட்டுமல்ல ஏனைய தமிழ் மாவட்டங்கட்கும் பொருந்தும்.

ஆர்.பாலன், அமிர்தகழி, மட்டக்களப்பு.

## மக்கள் தலைவரா?

மட்டக்களப்பு மண்ணில் பிறந்தவன் என்ற உரிமையோடும் வாக்களிக்கும் தகுதி உள்ளவன் என்பதோடும்- கடந்த தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கத்திற்கு எனது வாக்கைச் செலுத்தியவன் என்ற உணர்வோடும், இதனை எழுதுகிறேன்.

என்னால் 207வது முரசு வாசிக்கப் பட்டுக் கொண்டிருக்கும்போது "கச்சிதமான கட்டுக்கதை-சந்திரகாசன்-ஜோசப்= கூட்டணித் தலைமை" என்ற தலைப்பிட்டிருந்த கட்டுரை வாசித்தேன். அக் கட்டுரையில் "ஆக: கூட்டணிக்குள் இன்றுள்ள மக்கள் செல்வாக்குள்ள தலைவர் ஜோசப் பரராஜசிங்கம்தான்," எனக் குறிப்பிடப் பட்டிருந்தது.

இந்தக் கருத்து 1994ம் ஆண்டின் பொதுத் தேர்தலோடு முடிந்துவிட்டது. இனியும் அவ்வாறானதொரு பொதுத் தேர்தல் வருமாயின் ஜோசப் பரராஜசிங்கம் நிச்சயமாக மக்களிடம் வந்து வாக்குக் கேட்கும் தகுதியை இழந்துவிட்டார். என்றே கூறவேண்டும்.

காரணம்-1994ம் ஆண்டிற்கு முற்பட்ட காலங்களில்- இராணுவக் கெடுபிடிகள் நிறைந்த வேளையில் அவர் குரல் கொடுத்தார். அதுவே மக்களுக்கும் தேவையாக இருந்தது. இவற்றைவிட வேலைவாய்ப்பு, மற்றும் விடயங்களில் மக்கள் கவனம் செலுத்தாத காலகட்டம் அது. ஆனால், இன்று படித்தவர்களும், தொழில் இழந்தோரும் தொழில்தேடி அலையும் கால கட்டம். இது நிமித்தம் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.யிடம் சென்றால் அவரால் செய்யமுடியுமான உதவிகள்கூட செய்யப்படுவதில்லை. இது போன்றே ஏனைய இராணுவக்கெடுபிடி பற்றிய உதவிகள் கேட்டுச் சென்றாலும் வெறும் பத்திரிகை அறிக்கைகள் மாத்திரமே விட்டு விளம்பரம் தேடுவதுடன் நிறுத்திக் கொள்கிறார்.

எஸ்.எம். ரகு, கல்லடி, மட்டக்களப்பு.

## முத்தமிழ் விழா

கொழும்பு புனித சூசையப்பர் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் தனது 51வது முத்தமிழ் விழாவை கொண்டாடவுள்ளது.

எதிர்வரும் ஜூலை 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'முத்தமிழ் விழா' நடைபெறவுள்ளது.

கல்லூரி மாணவர்களின் பாடல், இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. 'பாசத்தின் போர்', 'எதிர் பாராதது' ஆகிய நாடகங்களும் நடை பெறவுள்ளன.

விளம்பரப் பகுதி


### மனோதத்துவ வைத்தியம்
### (GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயதினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரயின்மை என்று தன்னம்பிக்கை, இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும். 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில். தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள். மன நோய்கள் "ஹிஸ்ரீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா. தலையிடி. வாதம் பயோரியா. வெள்ளைபோதல். நீரிழிவு. கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேற்று இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

**கொழும்பில் ஜூன் 20 முதல் 30 வரை**

Dr. P. Arumugam. Ahamed Tourist inn. Bang Building No:10. Reclamation Road. (Entrance Baukshall St.. Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101. கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும்.

**ஓட்டமாவடி ஜூலை 12, 13ம் திகதிகளில்**

Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி.

**கல்முனையில் ஜூலை 5, 6, 7, 8, 9 திகதிகளில்**

T.M.M. பாமசியிலும் T.P. 065/29329
மற்ற நாட்களில் **Dr. P. Arumugam** No. 33, Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.



### தெய்வீக மருத்துவம்
**சர்வதேச சமூக தெய்வீக சேவை**

வாழ்க்கையில் ஏற்படும் காதல் (ஆண்-பெண்) பிரச்சினை, திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடை, தீய சக்திகளின் தொல்லை, கிரக தோஷம், வேண்டியவர்களை சேர்க்க, வேண்டாதவர்களை அகற்ற- இது போன்ற தீர்வு காணமுடியாத பிரச்சினைகள் எதுவானாலும் உடனுக்குடன் நிவர்த்தியளிக்கப்படும். கம்பியூட்டர் வடிவமைப்பில் ஜாதகம், காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப்பலனை அறிந்து கொள்ள-மட்டக்களப்பு பிரபல "பாலுசோதிட"ரை (வைத்தியர்) நேரில் சந்திக்கமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். பொருட்களை தபாலில் (V.P.P) அனுப்பிவைப்போம். விரும்பிய குருதட்சணை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றது. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

பாலு சோதிடர் S.A.M.P. தெய்வீக சக்தி நிலையம். கல்லடி அரசடிருதி வீதி. மட்டக்களப்பு.
BALU SOTHIDAR- S.A.M.P. THEYVIGA SAKTHY CENTRE BATTICALOA (P.O) SRI LANKA.

"வாழ்விலிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE GOVT. Regd. No: HA/04/BT/219



தேவை
**சாயா ஸ்ரூடியோ**

பெண்கள் வேலைக்குத் தேவைப்படுகிறார்கள். தகுந்த சம்பளம் வழங்கப்படும். பூரண விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**ஆண்கள்**

புகைப்படப்பிடிப்பில் (ஸ்டில்), வீடியோ படம் எடுப்பதில் அனுபவம் உள்ளவர்களும் ஓரளவு நாட்டம் உள்ளவர்களும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

T.Rabeshen
102/2, 42nd Lane,
Wellawatha,
colombo-06



**பழுது பார்த்தல்**

வீடியோ கமெரா,
போட்டோ கமெரா
திருத்திக்கொடுக்கப்படும்

**நியூ விக்ரேஸ்**
**New Victors**

40 1/3, Galle Road,
Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
T.P-594492



**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த தூரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை



**1997 G.C.E (A/L) புதிய பாடத்திட்ட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு BRIGHT ன் 10 மாதிரி வினாவிடை நூல்கள் வெளிவந்துவிட்டன**

★ கணக்கீடு
★ தமிழ்
★ இஸ்லாமிய நாகரிகம்
★ இரசாயனவியல்
★ வணிக புள்ளிவிபரவியல்
★ அரசியல் மூலதத்துவம்
★ பொருளியல்
★ இந்துநாகரிகம்
★ தூயகணிதம்
★ பிரயோக கணிதம்

விலை : 197.50

மாதிரி வினா விடைகளை V.P.P யில் பெற விரும்புவோர் 20/= முத்திரையுடன் தொடர்பு கொள்க

வெளிவரவுள்ளவை
★ தாவரவியல் ★ பௌதிகவியல் ★ இஸ்லாம்

1997 G.C.E (O/L) மாணவர்களுக்கு கடந்த 10 வருடகால வினாவிடை Bright வெளியீடுகள் வெளிவருகின்றன

**90 DAYS SPOKEN ENGLISH**
**POSTAL TUITION**

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்தில் நவீன உளவியல் அணுகு முறையின் கீழ் மாணவர்கள் உவந்து ஏற்கக்கூடிய முறையில் பாடத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

பாடநூல்கள் யாவும் இருபத்தோராம் நூற்றாண்டின் எதிர்பார்க்கைக்கு ஏற்ற வகையில் நவீன பாணியில் அச்சிடப்பட்டுள்ளன.

கட்டணம் இக்கல்வி நெறிக்கான கட்டணம் 350/- மாத்திரமே.

வெளிநாட்டு மாணவர்களுக்கு US$ 25.00

பாடக்கட்டணத்தை The Director - BBC எனும் பெயருக்கு Sea Street SPO மாற்றக் கூடிய தாகக் காசுக் கட்டளையுடன் உங்கள் பெயர், விலாசத்தையும் இணைத்து அனுப்பி வைக்கவும்.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27, First Floor, P. O. Box - 162,
Colombo Central Super Market Complex,
Colombo - 11. T.P. 434770, 074-718592



**Typesetting**
**பாடநெறி**

நவீன கணனி யுகத்தில் வேலை வாய்ப்பைப் பெற்றுத்தரும் DTPல் தற்போது பாவிக்கப்படும் package

**PageMaker 5.0**

ஆகும். இதை பயில்வதற்கான வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன.
மேலதிக விபரங்கட்கு:

BRIGHTON
414A, Galle Road, Wellawatte
Phone.: 597409



**ஓர்கன் வகுப்புகள்**

இசையமைப்பாளர்
ஸ்ரீ கணேஸ்ராஜ் அவர்களது
மேற்பார்வையில் புதிய
மாணவர்களுக்கான
தனி நபர் வகுப்புகள்
ஆரம்பமாகின்றன.
அனுமதிக்கு நேரில்
சமூகமளிக்கவும்.

SUPER SITHARAAS
MUSICAL GROUP
S. GANESHRAJ
322-B2 - SEA ST.
COLOMBO-11



**ரெறாசோ ஷிப்ஸ்**
**(TERRAZZO CHIPS)**

★ கலர்பவுடர் (Pigments)
(Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

'வெற்றி நிச்சயம்' படை நடவடிக்கை ஆரம்பமாகி 50 நாட்களாகிவிட்டன.

தாண்டிக்குளத்தில் புலிகளின் ஊடுருவும் தாக்குதலை அடுத்து இடைநிறுத்தப்பட்ட படை நகர்வு மீண்டும் ஆரம்பமாகியது.

நாம் ஏற்கனவே கணிப்பிட்டது போலவே புளியங்குளத்தை நோக்கி இரு முனைகளில் படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

தாண்டிக்குள தாக்குதலையடுத்து 'வெற்றி நிச்சயம்' படை நகர்வு நிறுத்தப்படலாம் என்று ஊகங்கள் வெளியாகின. படை நடவடிக்கை தொடரவே செய்யும் என்று நாம் கூறியிருந்தோம்.

புளியங்குளத்தைக் கைப்பற்றியதை பெரும் பிரசாரப் படுத்திவிட்டு படை நடவடிக்கைகளை தற்காலிமாக ஓய்வுக்கு கொண்டுவருவதா? அல்லது தொடர்ந்து முன்னேறிச் செல்வதா என்பதை படையினர் திர்மானித்தாக வேண்டியிருக்கும்.

**வவுனியாவில் இருந்து ஓமந்தை 10 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. அங்கிருந்து புளியங்குளம் 12.5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. வவுனியாவில் இருந்து பார்த்தால் புளியங்குளம் 22.5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது.**

புலிகள் தாண்டிக்குளத்தில் ஊடறுத்து தாக்கியபோது படையினர் வவுனியா வில் இருந்து கிட்டத்தட்ட 16 கிலோமீட்டர்

கனரக ஆயுதங்களும் தற்போது யாழில் உள்ள நடமாடும் கெரில்லா அணிகளிடம் கிடையாது. சுலபமாக ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு நகரக்கூடியதாக, பாரம் குறைந்த ஆயுதங்களையே நடமாடும் கெரில்லா அணிகள் பயன்படுத்தும்.

அதுதவிர புலிகள் பெருமளவில் அணி திரள்வதாக தகவல் கிடைத்தால் பாரிய பலத்துடன் திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளையும் யாழ் குடாநாட்டில் படையினரால் மேற்கொள்ள இயலும்.

அப்படியிருந்தும்கூட அங்கும் புலிகளின் அணிகள் பதுங்கியிருப்பதுடன், மினி முகாம்களை தாக்கும் அளவுக்கு ஒன்றுதிரள முடிகிறது.

ரசியப் படைகள் துவம்சம் செய்தன. பல இலட்சம் ஹிட்லரின் படைகளுக்கு ரசியா பொறிக்கிடங்கானது.

ஆனால் தொடர்ந்து முன்னேறுவது என்று முடிவு செய்தாலும் இலக்கை எட்டுவது அப்படி ஒன்றும் சுலபமல்ல.

வவுனியாவில் இருந்து புளியங்குளம் 22.5 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

வெற்றி நிச்சயம் படை நடவடிக்கை மே 13ம் திகதி ஆரம்பமானது. ஜூன் 24ம் திகதியுடன் 43 நாட்களாகின்றன. 43 நாட்களிலும் கிட்டத்தட்ட 20 கிலோமீட்டர் தூரம் வரைதான் படையினர் முன்னேறினர்.

இதிலும்கூட ஏற்கனவே படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளையும்,

கிழக்கில் இருந்தோ மேலும் விலக்கிக் கொள்ள புலிகளின் பரவலான தாக்குதல்கள் அனுமதிக்கப்போவதில்லை.

படையினர் தம் பலத்தில் பெரும் பகுதியை வன்னி நோக்கி நகர்த்தியபோது பிரபாகரனும் மற்றொரு உத்தியை வகுத்துக் கொண்டார்.


அதுதான் சிறுதுளி பெருவெள்ளம் என்ற அடிப்படையிலான கெரில்லா தாக்குதல் உத்தி.

அதாவது சிறு சிறு கெரில்லாக் குழுக்கள் இரைதேடி அலைந்து கொண்டிருக்கும். சிறு குழுக்களாக இருப்பதால் அவர்களால் விரைவாக தப்பிச் செல்லவும் முடியும். பதுங்கியிருக்கவும் இயலும்.

சிறு கெரில்லாக் குழுக்களால் பாரிய தாக்குதல்களை நடத்த முடியாமல் போகலாம். ஆனால் இக் குழுக்களின் தீராத தொல்லைகள் எதிரிக்கு நடமாட அச்சத்தையும், மனோவலிமையில் தாக்கத்தையும்

# 43 நாட்கள்-20 கிலோமீட்டர்கள்

# விலை அதிகமான போர்முனை!



## புலிகளின் சிறுதுளி பெருவெள்ளம்!

புலிகள் தாண்டிக்குளத்தில் அடித்தவுடன் படை நடவடிக்கையை நிறுத்தினால் அரசுக்கு அரசியல், இராணுவரீதியில் பலத்த நஷ்டமாகிவிடும்.

புலிகளிடம் தோல்வி கண்டுவிட்டது ஜனாதிபதி சந்திரிக்காவின் போர் நடவடிக்கை என்று பிரசாரம் எழுவது ஒருபுறமிருக்க, விவேகமில்லாத போர்த் திட்டம் மூலமாக பல நூறு படையினரை பலிகொடுத்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டும் பூதாகரமாக எழுந்திருக்கும். அரசியல் ரீதியில் ஆளும்தரப்பை ஆட்டம் காணச் செய்யக்கூடிய குற்றச்சாட்டாகியிருக்கும்.

இராணுவரீதியில் பார்த்தால், புலிகள் புகுந்து அடித்ததும் நடவடிக்கையை நிறுத்தினால் படையினரின் மனோவலுவை பாதிக்கப்படலாம். புலிகளை சந்திப்பது கடினம்தான் என்னும் நினைப்பு வலுவாகலாம். இராணுவம் தொடர்பான இமேஜும் பாதிக்கப்படும்.

அதுதவிர, புலிகளின் ஆட்டிலெறித் தாக்குதல்களில் இருந்து வவுனியா படை நிலைகளை பாதுகாக்க வேண்டுமானால் குறைந்தது புளியங்குளம்வரையாவது சென்றாகவேண்டும்.

... புளியங்குளத்துக்கும் நெடுங்கேணிக்கும் இடைப்பட்ட சாலையைக் கைப்பற்றினால் இராணுவரீதியில் இரண்டு அனுகூலங்கள் கிடைக்கும் என்பது படையினரின் கணக்கு.

ஒரு அனுகூலம்: அச் சாலைவழியாக புலிகளின் அணிகள் நகர்ந்து வவுனியா-யாழ் சாலையில் உள்ள படையினரை இடதுபுறமாக பக்கவாட்டில் தாக்கமுடியாமல் போகும்.

இரண்டாவது அனுகூலம், முல்லைத்தீவில் இருந்து திருமலைக்கு புலிகள் செல்லும் முக்கியமான தரைவழிப்பாதை தடைப்படும்.

எனவேதான் ஓமந்தையில் இருந்தும், நெடுங்கேணியில் இருந்தும் இரு முனைகளில் முன்னேறி புளியங்குளத்தை கைப்பற்றும் வியூகம் வகுக்கப்பட்டது.

ஆனால் நெடுங்கேணியில் இருந்து முன்னேறும் படைகளிற்கு புலிகள் பலத்த தாக்குதல்களைத் தொடுத்தனர். மோட்டார் ஷெல்களைப் பொழிந்தனர். அதனால் நெடுங்கேணிப் படைகள் ஆமை வேகத்தில் நகரவேண்டியதாகியது.

புளியங்குளத்தைக் கைப்பற்றிய பின்னர்தான் படையினர் தமது அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி திட்டவட்டமான சில முடிவுகளுக்கு வருவார் என்று தெரிகிறது.

தூரம்வரை முன்னேறியிருந்தனர்.

16 கிலோ மீட்டர் தூரத்தை முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடிய படை பலம் இல்லாமையால்தான் புலிகளின் ஊடுருப்பை படையினரால் தடுக்க முடியாமல் போனது.

ஏறக்குறைய 25 ஆயிரம் படையினரில் 20 ஆயிரம் படையினர் சண்டை நடைபெறும் முன்னரங்க முனையில் குவித்து நகர்த்த வேண்டிய கட்டாயத்தில் படையினர் உள்ளனர்.

**இதனால் கைப்பற்றிய பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் படைநிலைகளை பலமாக வைத்திருக்கக் படையினர் போதாமல் உள்ளனர். எனவே பின்னரங்க நிலைகளை பலவீனமாக விட்டுவைத்துவிட்டே படையினர் முன்நோக்கி செல்ல வேண்டியுள்ளது.**

இவ்வாறான நிலை போர்த்தந்திர ரீதியில் மரபுப்படைக்கு ஆபத்தானது. கெரில்லாக்களுக்கு சாதகமானது.

பாதுகாப்பு சவாலான (பண்ட்) அமைப்பதால் புலிகள் சிறு சிறு குழுக்களாக ஊடுருவதைத் தடுக்கலாமே தவிர, பாரிய அதிரடித் தாக்குதல் மூலமான ஊடறுப்புக்களை தடுக்க இயலாது.

மனித அலைத் தந்திரம், பாரிய படைக்கல பிரயோகம் என்பவற்றின் மூலமே படையினரின் முன்னேற்றம் சாத்தியமாகிறது. எனவே ஆட்பலத்தில் ஏற்படும் வெற்றிடங்கள் படையினருக்கும் நெருக்கடியைக் கொடுத்தேயாகும்.

**வன்னிக் களம் காடு சார்ந்த பகுதியாக இருப்பதால் கெரில்லாக்களின் தொடர்தாக்குதல்களுக்கு தினமும் முகங்கொடுத்தேயாக வேண்டும்.**

யாழ் குடாநாட்டில் நீண்ட நிலப்பரப்பில் படையினர் நிலைகொண்டுள்ளனர். ஆனால் யாழ் குடாநாட்டின் பூகோள நிலையில் இருந்து வன்னியின் பூகோளநிலை முற்றிலும் நேர்மாறானது.

மிக நீண்ட பரந்த நிலப்பகுதிகள், அவற்றைச் சூழ்ந்துள்ள காடுகள் என்பவற்றைக் கொண்ட வன்னி மண் கெரில்லாக்களுக்கே சாதகமானது.

வன்னியில் படையினர் முன்னேறும் பகுதி புலிகளுக்கு நன்கு பரிச்சயமானது. அங்குள்ள ஒவ்வொரு அங்குல நில அமைப்பும் வரைபடம் இன்றியே புலிகளுக்கு மனப்பாடமானது. அதனால் படையினர் நிலைகொண்டுள்ளனரோ துல்லியமான தாக்குதல்களை நடத்த புலிகளால் முடியும்.

யாழ் குடாநாட்டில் இருந்து புலிகளின் பிரதான அணிகள் வெளியேறிவிட்டன.

ஆனால் வன்னியில் நிலைமை நேர் எதிர். கனரக ஆயுதங்கள், ஆட்டிலெறிகள், கவச வாகனங்களுடன் காட்டுக்குள் புலிகள் உறைந்திருக்கிறார்கள்.

காட்டுக்குள் புலிகள் அணிதிரள்வதையோ, தயாராவதையோ படையினரால் தடுக்க இயலாது.

பரம விரோதிகளான இருதரப்பும் அருகருகே நிலைகொண்டிருக்கும் களம்தான் வன்னிக் களம்.

ஆனால் படையினரின் நகர்வுகள், நடமாட்டங்கள், பாதுகாப்பு நிலைகள் என்பவற்றை புலிகள் அவதானிக்க முடியும். அதனால் குறிவைத்துத் தாக்க முடியும். புலிகள் என்ன செய்கிறார்கள், தம்மைச் சுற்றியுள்ள அடர்ந்த காட்டுக்குள் புலிகள் எங்கே இருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள் என்பதை படையினர் அறிய இயலாது.

**முகம் தெரியாத, நடமாடும் தடம் தெரியாத எதிரியை எந்நேரமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கட்டாயத்தில் படையினரின் மன உறுதிக்கு பெரும் சவால் ஏற்படும்.**

தமது எதிரியை தெளிவாக காணமுடிவதால் புலிகள் தமக்கு சாதகமான நேரத்தை தெரிவு செய்யவும், தமக்கு சாதகமான தாக்குதல்களை இலக்குவைத்து நடத்தவும் கூடிய வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

ஆக, வன்னியின் பூகோள நிலை ஆட்பலம், படைக்கலம் என்பற்றில் மேலோங்கிய மரபுப்படை முன்னேற முடிந்தாலும், கெரில்லாக்களுக்கும் ஊடறுப்பு மற்றும் அதிரடித் தாக்குதல்களுக்கும் மிகச் சாதகமான களமாக இருக்கும்.

விரைவில் பருவமழையும் வன்னியில் ஆரம்பமாகப்போகிறது. மழைக்காலத்தில் முகாம்களுக்குள் இருக்காமல் களத்தில் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தந்திரத்தை பிரதிபாதுகாப்பு அமைச்சர் கொண்டுவந்திருந்தார்.

இத்தகைய தந்திரம் யாழ் குடாநாட்டில் ஓரளவு கைகொடுக்கும். ஆனால் வன்னியில் புலிகள் எங்கிருக்கிறார்கள் என்ற இலக்குத் தெரியாமல் தேடுதல் நடத்த முடியாது. கெரில்லாக்கள் காடுகளுக்குள் தயாராகி வந்து பாய்ச்சல் நடத்துவதையும் தடுக்க இயலாது.

**எனவே புளியங்குளத்தை கைப்பறிய பின்னர் அத்தோடு நின்று தமது நிலைகளை கெட்டிப்படுத்துவதா, அல்லது தொடர்ந்து முன்னேறிச் செல்வதா என்பதை பருவமழை தொடங்க முன்னர் படையினர் முடிவு செய்தாக வேண்டியுள்ளது.**

காலநிலை மாற்றமும் போரில் கணிசமான பாத்திரம் வகிக்கிறது. ஹிட்லரின் படைகள் ரசியாவில் தோல்வியைத் தழுவியதற்கு பனிகொட்டும் காலநிலையை கவனத்தில் கொள்ளாமல் முன்னேறியதும் ஒரு காரணம்.

வெட வெட குளிரில் நடுங்கிய ஹிட்லரின் படைகளை, அக் குளிருக்கு பழக்கப்பட்ட

புலிகளின் எதிர்ப்பு இல்லாத பகுதிகளையும் கழித்துப் பார்த்தால் 10 கிலோமீட்டர் தூரம் வரைதான் படையினர் சண்டையிட்டு முன்னேறிய தூரமாகும்.

இந்த பத்து கிலோமீட்டர் தூரத்தை கடக்க படையினர் கொடுத்த விலை லேசுப்பட்டதல்ல. பலியானோரும், படுகாயமடைந்தோருமாக கிட்டத்தட்ட ஆயிரம்பேர்வரையான படையினருக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. ஐநூறுபேர்வரை சிறுகாயங்களுக்கு உள்ளாகியிருக்கலாம்.

தாண்டிக்குளச் சமரில் டாங்கிகள், ஆட்டிலெறிகள், ஷெல்கள், மற்றும் வெடி மருந்துகள் நாசமாகின.

வன்னியில் பணியாற்ற மறுத்து 200க்கு மேற்பட்ட பொலிசார் அங்கிருந்து தலைமறைவாகியுள்ளனர்.

பத்துகிலோமீட்டர் தூரத்தை கடக்கவே இந்நிலை என்றால், மேலும் 50 கிலோ மீட்டர்தூரம் சென்றால்தான் கிளிநொச்சியை அடையலாம்.

எனவே-புளியங்குளத்தை கைப்பற்றியவுடன் அடுத்த கட்டமாக தொடர்ந்து முன்னேறும் முடிவை படையினர் மேற்கொள்வார்களேயானால் போர்த்தந்திர ரீதியில் அது புத்திசாலித்தனமாக இருக்கப்போவதில்லை.

தற்போது படையினரின் பலத்தில் ஏறக்குறைய 60 வீதமானவை வன்னியில் குவிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு முடக்கப்பட்டும் புலிகளை பலவீனமாக்கும் இலக்கில் ஒருவீதம்கூட எட்டப்படவில்லை. தமக்கு சாதகமான முனையில் புலிகளை சண்டைக்கு இழுத்து அழித்துவிடும் படையினரின் நினைப்பு ஈடேறவில்லை.

அதே நேரம் புலிகள் தமக்கு சாதகமான சண்டை முனையை தாண்டிக்குளத்தில் திறந்து அழித்தொழிப்பு நடத்தினார்கள்.

**நிலப்பரப்புக்களை கைப்பற்றல் என்பதை தவிர்த்துப்பார்த்தால் வன்னிக்களத்தில் இன்றுவரை கெரில்லாக்களின் பலமே முன்னிலையில் உள்ளது.**

எனவே மேலும் முன்னேறவேண்டுமானால் யாழ்ப்பாணத்தில் இருந்தும், நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் படையினரை வன்னிக்கு கொண்டு சென்றாக வேண்டும்.

ஆனால் அதுவும் பாதகம்தான். புலிகள் ஒரே இடத்தில் குவிந்திருக்கவில்லை. சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு உட்பட கிழக்கின் அணிகளும் வன்னிக்கு வெளியே உள்ளன.

**யாழ்ப்பாண குடாநாட்டில் நடமாடும் கெரில்லா அணிகளின் தாக்குதல்கள் மெல்ல மெல்ல உக்கிரம் பெறத் தொடங்கியுள்ளன. கண்ணிவெடித் தாக்குதலில் தொடங்கிய நடவடிக்கை சென்றி பொயின்டுக்களை தாக்கியழிக்கும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளன.**

கிழக்கில் சராசரியாக ஒவ்வொரு நாளும் ஒரு தாக்குதலாவது நடந்த வண்ண முள்ளன.

எனவே படையினரை யாழில் இருந்தோ,

ஏற்படுத்தும். அப்படி மனோவலிமை குன்றும்போது பல கெரில்லாக்களை ஒன்றுதிரட்டி எதிரிமீது பாரிய தாக்குதல் நடத்தி சிதறடிப்பது சுலபம்.

இக் கெரில்லா உத்தியைத்தான் கிழக்கில் புலிகள் கையாளத் தொடங்கியுள்ளனர். பெருமலையை சிறு உளிகள் கொண்டு படிப்படியாக சேதமாக்கும் வழி முறையைப் போன்றது இதுவாகும்.

**வன்னியில் படையினர் வெற்றி நிச்சயம் நடவடிக்கையை ஆரம்பித்த நாளான மே 13ல் இருந்து ஜுன் 24ம் திகதிவரை வன்னிக்கு வெளியே புலிகளின் கெரில்லாத் தாக்குதல்கள் மூலம் பலியான படையினரின் எண்ணிக்கை குறைவானதல்ல.**

சிறு சிறு தாக்குதல்களில் சிறு சிறு இழப்புக்களாக இருந்தமையால் பாரிய இழப்பின் தன்மை புரியவில்லை.

**13.05.97 செவ்வாய்கிழமை வன்னியில் வெற்றி நிச்சயம் ஆரம்பமான தினத்தில் மட்டக்களப்பில் பெரிய நீலாவணை தகவல் கோபுரம் தாக்கப்பட்டது. பொலிசார் ஒருவர் பலியானார். அன்றுமுதல் 24.06.97 அன்று யாழ்ப்பாணம் ஆவரங்காலில் காவல் அரண்மீதான தாக்குதல் வரை 122 படையினரும் பொலிசாரும் பலியாகியுள்ளனர். இதில் 73 பேர் இராணுவத்தினர், 30 பேர் பொலிசார், 19 பேர் விசேஷ அதிரடிப்படையினர்.**

இவர்கள் தவிர 60 இராணுவத்தினர், 24 பொலிசார், 2 விசேஷ அதிரடிப்படையினர், 2 கடற்படையினர் ஆகியோர் காயமடைந்தனர். ஏழு இராணுவத்தினரைக் காணவில்லை.

'சிறுதுளி பெருவெள்ளம்' என்னும் கெரில்லா தாக்குதல் இலக்கில் புலிகள் பெற்றுள்ள வெற்றியையே இவை காட்டுகின்றன.

**எனவே- வன்னியில் படைபலத்தை ஒரு வரையறைக்கு மேல் குவிப்பதோ, அல்லது அரசாங்கம் எதிர்பார்ப்பதுபோல புலிகளின் கெரில்லாப் போரை சுலபமாக முறியடிப்பதோ நடக்கக்கூடிய காரியமல்ல.**

ஒரு பகுதியில் இருந்து விரட்டினால் இன்னொரு பகுதியில் இருந்து வெளிப்படுவார்கள். அதுதான் கெரில்லாக்களின் திறமை. அதனை பலவீனமாக கருதுவது பிரசாரரீதியில் தற்காலிக பயன் கொடுத்தாலும், யுத்தத்தில் வெற்றி தோல்வியை ஒருபோதும் உத்தரவாதப்படுத்தப்போவதில்லை.

யுத்தம் இரு தரப்புக்கும் புதிய அனுபவங்களை கொடுத்துக் கொண்டிருக்கும். அதற்கேற்ப தந்திரங்களும் மாறுபட்டே கொண்டிருக்கும். ஆனாலும் வெளிப்படையான நிலைகளை கொண்டுள்ள மரபுப் படைகளுக்கு தலைமறைவாக நடமாடும் கெரில்லாக்களை எதிர்கொள்வதும், அவர்களது தந்திரங்களை ஊகிப்பதும் கடினமாக இருக்கும். ■

நாரதர்

## அதிரடி அப்பாத்துரை



**இந்த வாரமும்** சங்கரியாரின் சண்டித்தனச் செய்தி ஒன்று. நீலமானவர் நடத்திய விருந்துபசாரம் ஒன்றில் தமிழர் பணிக்குழு உறுப்பினரும் கலந்துகொண்டவராம். அங்கு வந்த சங்கரியார், பணிக்குழு உறுப்பினரைக் கண்டதும் வேட்டியை மடிச்சுக் கட்டாத குறையாகப் பாய்ந்தாராம். "பேப்பருக்கோடா செய்தி கொடுக்கிறாய்? ஐ வில் கில் யூ" எண்டு கத்தினாராம். உறுப்பினர் போய் நீலமானவரிடம் புகாரிட்டாராம். அங்கிருந்த கூட்டான கட்சியின் தலைவரிடம் அவரை அழைத்துப்போய் முறையிட்டாராம் நீலத்தார். "சங்கரி அப்படிப் பேசியது பிழைதான்" எண்டு ஒரே வார்த்தையில் சொல்லிப்போட்டு வெடுக்கென்று முகத்தைத் திருப்பிப் போட்டாராம் தலைவர். இதுதான்(டா) அகிம்சை!

**வவுனியாவில்** வெடித்த குண்டு பற்றிப் பலவாறான பேச்சுக்கள் உலாவுகிறதாம். ரெண்டு எழுத்தாரும் உரிமை கோரவில்லையாம். கொஞ்சம் பிந்தி வெடித்திருந்தால் சனம்தான் எக்கச்சக்கமாக பலியாகியிருக்குமாம். அதனால் சனத்தின் அபிப்பிராயம் வேறு கோணத்தில் போகுது. சனங்களும் இப்பவெல்லாம் எதையும் அலசி ஆராயாமல் நம்புறது கிடையாது. தேவையான முன்னேற்றம்தான்.

**'தீய சக்திகள்!'** தங்களை விமர்சிக்கும் ஆட்களை வசைபாட கூட்டான கட்சி புதிதாகக் கண்டுபிடித்துள்ள பட்டம். ஏன், பழைய மாதிரியே 'துரோகிகள்' எண்டு சொல்லலாமே பாருங்கோ. நல்ல சோக்காக இருக்குமல்லோ? பழக்கதோஷம் போகேல்லைப் பார்த்தியளோ! 'பூமராங்' எண்டு ஒரு ஆயுதம் இருக்குது தெரியுமோ? எறிந்தவரிடமே திரும்பிப் போகுமாம். முந்தித் துரோகிகள் பட்டமும் பூமராங் மாதிரி கூட்டான கட்சியிடமே திரும்பிப்போனதுங்கோ.

இப்போது 'தீயசக்திகள்' பட்டமும் 'பூமராங்'தான்! புரிஞ்சா சரிதான்.

**யாழ்ப்பாணத்தில்** மறுபடியும் முகஸ்துதி கலாசாரம் ஆரம்பமாகியிருக்குதாம். யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கிய சிவில் அதிகாரி ஒருவருக்கும் சமீபத்தில் பாராட்டுவிழா நடந்ததாம். கருட்டலில் முன்னணி வகிக்கும் மேற்படி அதிகாரிக்கு ஐஸ் மழையில் குளிப்பது எண்டால் கொண்டாட்டமாம். அங்கு குளித்துவிட்டு வந்து கொழும்பில் உள்ள அதிகார முள்ளவையை குளிப்பாட்டுவாராம். அவர் தனது 'கடமையை'த்தானே செய்கிறார்?

**குமாரர்மீது** கடும் காய்ச்சலில் இருக்கிறதாம் கூட்டான கட்சி வட்டாரம். முன்னர் ஒரு காலத்தில் குமாரர் தமிழீழக் கோரிக்கையை ஏற்கவில்லையென்று, அவருக்கு கொள்கை விளக்கம் சொன்னவர் கூட்டான கட்சித் தலைவர். "சுண்டைக்காய் நாடுகள் சுதந்திரம் பெறும் போது தமிழீழம் ஏன் சுதந்திரம் பெற முடியாது?" எண்டு குமாரரிடம் கேட்டவை. இப்ப என்னடாவென்றால், சுயநிர்ணய உரிமையென்று பேசிக் கொண்டிருந்தால் போதுமோ, சுண்டைக்காய் கிடைத்தாலும் சண்டை பிடிக்காமல் வாங்கிச் சாப்பிட்டுப் போட்டு இருப்பதுதான் சுயநிர்ணய உரிமை? எண்டமாதிரி கொழும்பு கூட்டத்தில் குமாரருக்கு விளக்கம் சொல்லியிருக்கிறார் தலைவர். காலம்மாறினால் கர்ஜனையும் மாறுமோ?

**தீர்வு** பற்றிப் பேச நேரம் கேட்டவையாம் ஐந்து தமிழ்க் கட்சிகள். நீதிக்குப் பொறுப்பானவர் நேரம் கொடுக்கவில்லை. இப்போது அன்றாடப் பிரச்சனைகள் பற்றிப்பேச தமிழ்க் கட்சிகளுக்கு நேரம் ஒதுக்கிக் கொடுத்துள்ளார். 'கேட்டது கிடைக்குதோ இல்லையோ கிடைப்பதை பெற்றுக்கொள்வது' எண்ட பொலிசியில் தமிழ்க் கட்சிகள் உறுதியாக நிற்பதால், அழைப்பை மறுக்காமல் ஆஜராகப் போகினமாம். பேசிப் போட்டுவந்து எல்லாம் ஓ.கே எண்டமாதிரி செய்தி கொடுப்பினம்.

இதனால் அதிகாரத் தரப்புக்கும் விளம்பரம். இவைக்கும் பெயர் பேப்பரில் வரும். இரு தரப்புக்கும் பிரசார இலாபமான சந்திப்புக்களாகத்தான் அன்றாடப் பிரச்சனை பற்றிய பேச்சுக்கள் முடியுது. பிரச்சனைகள் மட்டும் தீர்ந்தபாடில்லை. இதுதானுங்கோ அரசியல்.

**பெயர்** ரிப்பேராகிக்கொண்டிருப்பதால் வெளிநடப்பு நாடகமாடப் போகினம்- சாணக்கிய கூட்டான கட்சியினர். "நாங்கள் அடிக்கிறமாதிரி அடிப்போம், நீங்கள் அழுகிறமாதிரி அழுங்கோ, அப்பதான் சனம் எங்களை நம்பும். சனம் எங்களை நம்பினாத்தான் அடுத்த எலக்ஷனிலையும் வோட்டு வாங்கி உங்களை ஆதரிக்கலாம்" எண்டு சொல்லவேண்டிய இடத்தில் சொல்லிப்போட்டுத்தான் நாடகம் போடும் தீர்மானமே எடுக்கப்பட்டதாம். போர் வேண்டாம் எண்டால் போர் நடக்கும்போது பேச்சில் கலந்துகொள்ளாமல் இருக்கலாம். வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவை எண்ட கோரிக்கை உண்மையானதாக இருந்தால் மத்தியஸ்தம் இல்லாத பேச்சுக்களில் கலந்துகொள்ளக்கூடாது. அதைவிட்டுப்போட்டு நாடகமல்லோ போடுகினம்!.

**மணியிடம்** பதவியைப் பறித்தார் சக்தியானவர். மணியின் பதவியை பறிச்சது விவேகமோ? ஆபத்தல்லோ எண்டு விஷயம் தெரியாமல் சிலர் பேசுகினம். மணியின் அணியிலும் பலர் சக்தியான மேடம் பக்கம்தானாம். கிழக்கு தனித்துவ கட்சியிலும் சிலர் மேடம் பக்கம்தானாம். எல்லாம் கணக்குப் போட்டுத்தான் காய் நகர்த்தப்படுவதால் ஒரு ஆபத்தும் வரப்போறதில்லையாம்.

ஓர் அருமையான பொன்மொழி:

**"இப்பொழுது நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தல்ல; நீங்கள்-எங்கு சென்றடையப் போகிறீர்கள் என்பதைப் பொறுத்ததே வெற்றி!"** ■



படிப்பகம்

www.padippakam.com



அரசியல் தொடர்

# மாகாணசபைத் தேர்தலும் போர் நிறுத்தமும்!

அற்புதன் எழுதுவது

## தேர்தலும்-இந்தியாவும்

1988 நவம்பரில் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவது என்று இந்திய அரசு முடிவு செய்தது. இலங்கை ஜனாதிபதியின் ஒப்புதலுடன் இந்தியா செய்த முடிவு அது.

வடக்கு-கிழக்கில் அவலங்கள் தலை விரித்தாடும் நிலையில் அங்கொரு தேர்தலை நடத்தும் அறிவிப்பு கேலிக்குரிய ஒன்றாகவே கருதப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரும், ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கமும் தாங்கள் போட்டியிடத் தயார் என்று கூறிவிட்டால் இந்திய அரசுக்கு தேர்தலை எப்படியாவது நடத்திவிடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கில் ஜனநாயக சூழல் ஏற்பட்டுவிட்டதாக பிரசாரம் செய்வதற்கும், தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப செயற்படக்கூடிய மாகாண அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதும் இந்திய அரசுக்கு தேவையாக இருந்தது.

இல்லாவிட்டால் இலங்கைப் பிரச்சனையில் ராஜீவ்காந்தி சாதித்தது என்ன? என்று இந்தியாவில் எழும் கேள்விகளுக்கு பதில் சொல்வது சிரமமாக இருக்கும்.

ராஜீவ்காந்தியையும், இந்திரா காங்கிரசையும் தேர்தலில் தோல்வியடையச் செய்வதற்கு கங்கணம் கட்டிக்கொண்டிருந்த எதிர்க்கட்சிகள் இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்பியதையும், இலங்கைப் பிரச்சனையில் ராஜீவ் காந்தியின் கொள்கையையும் குறைகூறத் தொடங்கியிருந்தன.

இந்தியத் தேர்தலும், தமிழக சட்டசபைத் தேர்தலும் நெருங்கிக்கொண்டிருந்தன.

ஆகவே காலதாமதம் செய்யாமல் வடக்கு-கிழக்கில் தமக்கு சார்பான அரசாங்கத்தை, சுருக்கமாகச் சொன்னால் ஒரு பொம்மை அரசாங்கத்தை உருவாக்கும் அவசரத்தில் இருந்தது இந்திய மத்திய அரசு.

## விரைவான ஏற்பாடுகள்

யார் வேண்டுமானாலும் தேர்தலில் போட்டியிடலாம் என்று கூறப்பட்ட போதும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். பதவிக்கு

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

வருவதையும், குறிப்பாக அக் கட்சியில் இருந்து வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக வேண்டும் என்பதும் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தில் முன்கூட்டியே செய்யப்பட்ட முடிவாகும்.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக பரவலான கண்டனங்கள் எழுந்தமையால் இந்தியத் தூதர் திக்ஷித் யாழ்ப்பாணம் சென்றார்.

அங்கு பலதரப்பட்டவர்களையும் சந்தித்து தமது முடிவுக்கு ஆதரவு தேடுவது தான் அவரது விஜயத்தின் நோக்கமாகும்.

1988, செப்டம்பர்-17ம் திகதி யாழ்ப்பாணம் கச்சேரியில் தூதர் திக்ஷித் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கு ஏற்ற சூழல் காணப்படவில்லை என்றே திக்ஷித்தை சந்தித்த பலர் கருத்துக் கூறியிருந்தனர்.

திக்ஷித்தின் யாழ் விஜயமும் அவரது நோக்கமும் குறித்து, வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகவும் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டனர்.

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஐம்பதுபேர் அந்த அறிக்கையில் கையொப்பம் இட்டிருந்தனர்.

அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

இந்தியத் தூதர் ஜே.என்.திக்ஷித் யாழ்ப்பாணம் பொதுமக்களின் பல்வேறு தரப்பினருடனும் யாழ் கச்சேரியில் கூட்டங்களை நடத்தினார்.

அவருடைய செய்தியின் சாரம்சம் இதுதான்; தமிழ் மக்களுக்கு இப்போதுள்ள நடைமுறைச்சாத்தியமான புத்திபூர்வமான ஒரேவழி, தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணத்திற்காக நடைபெறவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் பங்கு கொள்வதாகும்.

அரசியல் வெற்றிடத்தை இட்டு நிரப்பவும், சிக்கல் மிகுந்த குடியேற்றத்திட்டம் போன்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் இது வழிவகுக்கும். தெரிவு செய்யப்படும் மாகாணசபை அதிகார பரவலாக்கத்தை யதார்த்த நடைமுறையாக்கி, சமாதானத்தையும் சாத்தியமாக்கும்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது அவர் கூறுவது சரிபோலத் தோன்றக் கூடும். ஆனால் இது நடைமுறை யதார்த்தத்தோடு ஒத்துப்போகக்கூடியதா?

இவர்கள் கூறுகிற தேர்தல் நடைமுறைகளில் மக்கள் பங்கு கொள்வது என்பது இன்று சாத்தியம்தானா?

சுதந்திரமான நேர்மையான தேர்தல் என்பது யார் துப்பாக்கியை வைத்திருந்தாலும் சரி, துப்பாக்கி முனையில் மக்களை நெருக்குதலுக்கு உள்ளாக்கி அவர்

கள் தாமே சிந்தித்து முடிவு மேற்கொள்கிற ஒரு சூழ்நிலை அமைந்திருக்க வேண்டும் என்பதை முன் அனுமானம் செய்கிறது.

## இன்றைய நிலை?

இன்றைய உண்மை நிலை என்ன? தனி நபர்களோ அல்லது சமூக அமைப்புக்களோ இன்று தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் பல மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தங்களின் குரலைச் சரியாக உயர்த்தமுடியாத நிலையில் உள்ளதை நாமறிவோம்.

.... இந்திய அமைதிப்படை மற்றும் பல்வேறு ஆயுதம் தாங்கிய விடுதலைக்



அமைதிப் படை-வீதிச்சோதனை

குழுக்களின் புண்ணியத்தில் மக்கள் எதிர்காலம் குறித்து எவ்விதமான நிச்சயமுமற்ற பயங்கரத்தால் மௌனிக்கப்பட்ட நிலையில் தான் வாழ்ந்து வருகின்றனர்.

தேர்தல் நியமன காலத்தின்போது நிலமை மேலும் மோசமாகிவிட்டது. அநேகமாக ஒவ்வொரு நாளும் பழிவாங்கும் கொலைகள் நடந்த வண்ணமே உள்ளன. ஒரு பாவமும் அறியாத மத்திய வயது ஆண், பெண்கள்தான் இவ்வாறு பலியாகிறார்

கள். பல சந்தர்ப்பங்களில் இந்திய அமைதிப் படையும் இந்த அநியாயங்களுக்குத் துணை போயிருக்கிறது.

பெரும்பாலான தமிழர்கள் இந்தியாவை ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துத்தான் பார்க்கிறார்கள் என்பதை சொல்லித்தானாக வேண்டும். இரு சாராருக்கும் சமய, கலாசார பிணைப்புக்கள் உள்ளன. இந்தியச் சுதந்திர போராட்டத் தலைவர்களை விசுவாசத்தோடு பின்பற்றுவோர் இங்கு உள்ளனர்.

அண்மைக்காலத்தில் அரச உதவியுடன் இலங்கையில் நடைபெற்ற வன்முறைகளின் போது நாட்டைவிட்டு ஓடிய தமிழர்களை அரவணைத்து புகலிடம் கொடுத்தவர்கள் இந்தியர்கள் என்ற நன்றியுணர்வும் தமிழருக்கு உண்டு.

இலங்கை அரசின் இனத்துவேசத்தை சர்வதேசரீதியில் அம்பலப்படுத்தியதில் இந்தியா அதிக பங்கேற்றிருக்கிறது. ஆனால் 1987 அக்டோபருக்குப் பின்னர் நிலமைகள் துரிதமாக மாறத் தொடங்கின.

ஆண்கள், பெண்கள், குழந்தைகளைக் கொலை செய்ததும், காணாமல் போவோரின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே செல்வதும், இன்றுவரை தடுப்புக்காவல்களில் சித்திரவதைகளும், சாவுகளும் தொடர்வதும் தான் இந்தியாமீது தமிழருக்கு இருந்த நம்பிக்கையில் விரிசல் ஏற்படக் காரணமாக இருந்தது.

இந்த குரூரமான உண்மைகளை ஒரு பக்கம் தள்ளிவைத்துவிட்டு தந்தையின் தோரணையிலும், அச்சுறுத்தும் தொனியிலும் இந்தியா பேச முயலும்போது, எமது சொந்த பலவீனங்கள்தான் இவற்றையெல்லாம் அனுமதிக்கின்றன என்பதை சமூகம் உணர வேண்டும்.

.... இலங்கை இந்தியா அரசுகளுடனான நமது உறவுகளை மட்டுமல்ல, எம்மையே நாம் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.

நம் சமூகத்திற்குள்ளேயே பயங்கரவாதத்திற்கு நாம் வந்தனை செய்து நிற்பதும், எமது சந்தர்ப்பவாதமும், பெருவாரியான உட்கொலைகளின்போது கொள்கைப் பிடிப்புக்களை இழந்து நின்றதும்போன்ற அதே ஆயுதங்களை வைத்தே வெளிச்சக்திகள் நம்மை இலகுவாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தன.

## என்ன செய்யலாம்?

எம் சமூகத்திற்குள்ளேயே ஜனநாயக விரோதப் போக்குக்களை ஆட்சேபனை எதுவுமின்றி நாம் ஏற்றுக்கொண்டுவிட்ட நிலையில், ஜனநாயகத்திற்காக நாம் கூக்குரலிடுவது அர்த்தமற்றதாகப் போய்விட்டது.

ஆகவே மக்கள் இழந்துபோன தமது சுயநம்பிக்கை, பெருமைகளை மீண்டும் பெறுவதாயின் கொள்கை அடிப்படையிலான கூட்டு நடவடிக்கை என்ற வழியில் இயங்க ஆரம்பிக்க வேண்டும்.

.... அழுத்திக் கொண்டிருக்கும் பல பிரச்சனைகள் குறித்து யாருமே துணிவுடன் ஒரு நிலைப்பாட்டை எடுக்காத நிலையில் நாம் நம்மை மக்களாக வலியுறுத்துவது எவ்வாறு? எங்கள் அயலில் பணிமனைகளில், தொழிற்சங்கங்களில், சங்கங்களில் தனிநபர்களாகவும், சிறு சிறு குழுக்களாகவும் இருக்கும் நாம் நமது கடந்தகாலங்களைப் பற்றி கேள்விகள் எழுப்பி எங்கே தவறிழைத்திருக்கிறோம் என்பதை புரிந்துகொண்டு, நமது கொள்கைகளை மீட்டெடுக்க முனைய வேண்டும்.

மற்றவர்களுக்காகப் போராடும்போது நாம் நமக்கே போராடுகிறோம் என்ற கடந்த கால அனுபவம் வழங்கியிருக்கும் செய்தியினை நாம் எப்போதும் நினைவில் கொண்டிருக்க வேண்டும்.

இந்தப் பாதை துணிச்சலை வேண்டி நிற்கிறது. வேறு பாதை எதுவும் திறந்திருப்பதாகத் தெரியவில்லை. கடந்த காலங்களில் எதிலும் பட்டுக்கொள்ளாமல் கவனமாக வாழப்பழகிக் கொண்டிருக்கிறோம். இதன் விளைவுதான் பல்வேறு திசைகளிலும் இருந்து வந்த பெருந்தொகைப் படுகொலைகள்.

.... தயாரற்ற நிலையில் நாம் தொடர்ந்து இருந்துகொண்டிருக்க முடியாது. இன்னொருவர் நமக்கு விடுதலை வாங்கித்தருவார் என்று நம்பிக்கொண்டு இருக்காது நாம் நம்மைப் பார்த்துக்கொள்ளவேண்டும்"

யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் வெளியிட்ட கூட்டறிக்கையில் காணப்பட்ட பல விடயங்கள் அக் காலகட்டத்தின் தேவையை உணர்த்தியிருந்தன.

தேர்தல் தொடர்பாக எத்தகைய கண்டனங்கள் எழுந்தாலும் நடத்தியே தீருவது என்று இந்திய-இலங்கை அரசுகள் பிடிவாதமாக இருந்தன.

## போர் நிறுத்தம்

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை ஜனநாயகரீதியில் நடத்துவதாக காட்டுவதற்கு இந்திய அரசும், இந்தியப்படையினரும் செய்யாத முயற்சிகள் இல்லை.

திடீரென்று இந்தியப்படையினர் யுத்த நிறுத்த அறிவித்தலை வெளியிட்டனர்.

1988 செப்டம்பர் 15ம் திகதி காலை 7 மணிமுதல் ஆரம்பமாகும் யுத்த நிறுத்தம் தொடர்ந்து ஐந்து நாட்கள் அமுலில் இருக்கும் என்று இந்தியப் படையினரால் அறிவிக்கப்பட்டது.

யுத்த நிறுத்தத்தை முன்னிட்டு இந்தியப் படை தளபதி கல்கட் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது இதுதான்:

"சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு உத்தரவிடுமாறு இந்திய அரசாங்கம் எனக்குப் பணித்திருக்கிறது.

அந்தப் பணிப்பின் பிரகாரம் செப்டம்பர் 15ம் திகதி (1988) முதல் இலங்கை நேரப்படி காலை 7 மணியில் இருந்து ஐந்து நாட்களுக்கு களத்திலுள்ள எமது துருப்புக்கள் போர் நிறுத்தம் செய்துள்ளனர்.

இப்போர் நிறுத்தம் செப்டம்பர் 20ம் திகதி வரையிலும் அமுலில் இருக்கும்.

சகல போராளிக் குழுக்களும் தம் ஆயுதங்களை முன்வந்து ஒப்படைக்குமாறு நான் அழைப்பு விடுகிறேன்.

இது தொடர்பாக அவர்கள் தம் அருகிலுள்ள அமைதிப்படை, முகாம்களின் கொமாண்டரோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். கொமாண்டர்கள் போராளிகளின் ஆயுதங்களைக் கையளிக்க உதவுவார்கள். அது சம்பந்தமாக வழி நடத்தவும் செய்வார்கள்.

போர் நிறுத்தத்தை துஷ்பிரயோகம் செய்யும் போராளிகள் எவரினதும் நிலைகுறித்து விழிப்பாக இருக்க வேண்டுமென நான் துருப்புக்களுக்கு உத்தரவிடுகிறேன்.

போராளிகள் அல்லது அவர்களின் தலைவர்களுக்கு உதவிகள் தேவைப்படின் அருகிலுள்ள இந்திய அமைதிப்படை கொமாண்டோவுடன் தொடர்பு கொள்ளவும், இத்தகைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சகல போராளிகள் குழுக்களும் தேசிய நீரோட்டத்தில் சேர்ந்து, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் எதிர்காலத்தையும், நல்வாழ்வையும் கருத்தில் கொண்டு ஒத்துழைக்க வேண்டுமென்று இந்தியா எதிர்பார்க்கிறது.

ஆயுதங்களைப் பாவித்து தேசிய நீரோட்டத்தில் இருந்து விலகிச் சென்றவர்களை, மீண்டும் அமைதி வழிக்கு திரும்புமாறு வற்புறுத்த வேண்டுமென்று சமுதாயத்தின் சகல தரப்பினரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்களை நாங்கள் பகைமை உணர்வு ஏதுமின்றி வரவேற்போம்."

அமைதிப்படைத் தளபதி விடுத்த அறிக்கையில் சகல போராளிக் குழுக்களும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

தனது ஆதரவு இயக்கங்களுக்கு பெட்டி பெட்டியாக ஆயுதங்களை வழங்கிக்கொண்டிருந்து இந்தியப்படை.

அதே இந்தியப் படையின் தளபதிதான் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு போராளிகளுக்கு சமூகம் புத்தி சொல்ல வேண்டும் என்று கோரியிருந்தார்.

சகல போராளிகளுடனும் தாம் ஒரேவிதமாக நடந்துகொள்கிறோம் என்று காட்டுவதற்கு கல்கட்டின் அறிக்கை முயற்சித்தது. உண்மையில் புலிகளை நோக்கி மட்டுமே அப்போது ஆயுத ஒப்படைப்புக் கோரிக்கை விடப்பட்டது.

## பயனற்ற போர் நிறுத்தம்

"போர்நிறுத்தம் செய்யுமாறு வடக்கு-கிழக்கில் உள்ள பொது அமைப்புக்கள் பல வேண்டுகோள் விடுத்தபோது செவிமடுக்காமல் இருந்தது இந்திய அரசு.

அதே இந்தியா தானாக முன்வந்து போர்நிறுத்தம் செய்தது ஏன்?

மாகாணசபைத் தேர்தல் நாடகத்தை அரங்கேற்றவும், புலிகளை நெருக்கடிக்கு உள்ளாக்கவுமே போர் நிறுத்தம் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. புலிகளை பேச்சுக்கு அழைக்க செய்யப்பட்ட போர் நிறுத்தம் என்றால் வரவேற்கலாம். ஆனால் இதுவோ புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையை மட்டுமே கொண்டிருக்கிறது. அதன்மூலம் பேச்சுக்கான கதவுகளை மூடுகிறது." என்று பிரஜைகள் குழுவினர் அறிக்கைவிட்டனர்.

இந்திய அரசின் உள்நோக்கம் புரியாமல் போர்நிறுத்தத்தை வரவேற்றவர்களும் இருந்தனர். அவர்களில் ஒருவர் தொண்டமான்.

'இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கு அதிகளவில் மதிப்பளிக்கும் நடவடிக்கை' என்று போர் நிறுத்தத்தை புகழ்ந்திருந்தார் இ.தொ.கா. தலைவர் தொண்டமான்.

## தந்திர அறிக்கை

அப்போது புலிகள் இயக்கத்துடன் தொடர்பாக இருந்தது ஈரோஸ். புலிகளையும் பகைக்காது, இந்தியாவையும் ஒரு வரையறைக்குமேல் பகைக்காமல் ஈரோஸ் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டது.

போர்நிறுத்தம் தொடர்பாக ஈரோஸ் விடுத்த அறிக்கை கழுவிய நீரில் நழுவும் மீனைப்போன்ற அதன் நிலைப்பாட்டுக்கு ஒரு சான்று.

ஈரோஸ் சார்பாக அதன் தலைவர் வே.பாலகுமார் விடுத்த அறிக்கை இதுதான்.

"யுத்த நிறுத்த அறிவிப்பை நாம் வரவேற்கிறோம். காலம் தாழ்த்திய இந்த யுத்தநிறுத்த நடவடிக்கை இனிமேலாவது தமிழ்பேசும் மக்களின் அடிப்படை பிரச்சனைகளை புரிந்துகொள்ளும் நிலைக்கு இட்டுச் செல்லவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்திய அரசாங்கம் எவ்வித நிபந்தனையும் இன்றி பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். அதேவேளை தமிழ்பேசும் மக்களின் நலன்கருதி இச் சந்தர்ப்பத்தை பொருத்தமான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தமிழீழ விடுதலைப் புலிகளையும் கேட்டுக்கொள்கிறோம்."

இந்தியா அறிவித்த போர்நிறுத்தம் கண்துடைப்பு என்று தெரிந்தும்கூட விடப்பட்ட அரசியல் தந்திர அறிக்கையே அதுவாகும்.

"விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் பட்சத்தில்தான் போர் நிறுத்தம் முழுமைபெறக்கூடியதாக இருக்கும்" என்று யாழ் மாநகர ஆணையாளர் சிவஞானம் கருத்து வெளியிட்டிருந்தார்.

இக் கட்டத்தில்தான் சென்னையில் கிட்டுவையும் அவருடன் இருந்த புலிகளையும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்தது தமிழக அரசு.

அதுவரை வீட்டுக்காவலில் இருந்த கிட்டுவும், புலிகள் இயக்க உறுப்பினர்களும் சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிறைக்குள் புலிகள் முரண்டு பிடிக்க ஆரம்பித்தனர். (தொடர்ந்து வரும்)

## கலைஞர் அன்றும்-இன்றும்

சமீபத்தில் ஜெயின் கமிஷன் முன்பாக தி.மு.க.சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியத்தில் தமிழக அரசு கைதுசெய்த புலிகளை இந்திய மத்திய அரசு விடுவித்தது என்று கூறப்பட்டுள்ளது. புலிகளுக்கு இந்திய மத்திய அரசு ஆதரவாக இருந்தது. தி.மு.க. புலிகளுக்கு விசேஷ சலுகை காட்டவில்லை என்று நிரூபிப்பதில் இப்போது தி.மு.க. அக்கறை செலுத்துவதின் பிரதிபலிப்பே அச்சாட்சியமாகும்.

ஆனால் 1988 ஆகஸ்ட் மாதம் தமிழக அரசு (அப்போது தமிழ் நாட்டில் கவர்னர் ஆட்சி நடந்தது. கவர்னராக இருந்தவர் அலெக்சாண்டர்) கிட்டு உட்பட புலிகளை கைது செய்தபோது அதனைக் கண்டித்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியது தி.மு.க. 'கவர்னர் ஆட்சியின் மனிதாபிமானமற்ற செயல்' என்று காட்டமாகக் கண்டித்திருந்தார் கலைஞர் கருணாநிதி.

அன்று வெளியான பத்திரிகைச் செய்தியின் நகல் இது.

காஷ்மீர் இந்தியாவின் பகுதி என்பதைக்காட்ட தேர்தல் நடத்தினோமா?

## வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தை நிரூபிக்க சர்வசன வாக்கெடுப்புத் தேவையில்லை

### கருணாநிதி பேட்டி

சென்னை, ஆக. 29

"காஷ்மீர் இந்தியாவைச் சேர்ந்தது என்பதற்கு எப்படி சர்வசன வாக்கெடுப்பை நடத்தத் தேவையில்லையோ - அதைப் போல இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 'தமிழர் தாயகம்' என்று முடிவெடுக்க, மக்கள் வாக்கெடுப்பை நடத்தத் தேவையில்லை" என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கருத்து தெரிவித்தார்.

கட்சியின் தலைமை நிர்வாகக்குழுவின் அவசரக் கூட்டம் அண்மையில் சென்னையில் நடைபெற்றது. அக்கூட்டத்தின் முடிவில் அவர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

"இலங்கைப் பிரச்சினையைப் பிரதமர் ராஜீவ் காந்தி தனது கௌரவப் பிரச்சினையாகக் கருதாமல், இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து விடுதலைப் புலிகளுடனும் மற்றவர்களுடனும் பேச்சுவார்த்தைக்கு வழிகோல வேண்டுமென்று கோரும் தீர்மானம் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது" என அவர் கூறினார்.

"தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள நூற்றுக்கணக்கான ஈழத் தமிழர்களைத் தமிழக அரசு கைது செய்து சிறையில் அடைத்திருப்பதைக் கண்டிக்கும் தீர்மானத்தில் மனிதாபிமான அடிப்படையில் உடனடியாக இவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று மத்திய மாநில அரசுகள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன" என்றும் அவர் சொன்னார்.

"தேவையில்லாமல் தனது அதிகாரத்தைக் காட்டுவதற்காக தமிழக அரசு இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும், கடுமையான காயங்களுடன் படுக்கையில் ஒய்வெடுத்துக்கொண்டிருந்த ஈழத் தமிழர்களும், தீவிர சிகிச்சை பெற்றுவந்தோரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளது 'அலெக்சாண்டர் அரசின் இதயமற்ற நிலையையும், மத்திய அரசின் இதயமற்ற நிலையையும் காட்டுவதாக இருக்கிறது' என்றும்' அத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது– இராஜதந்திரி

# சிரிசேன குரே விவகாரம்: 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுக்கும்' முயற்சி!

முன்னாள் கொழும்பு மா நகரமேயரும், அமைச்சருமான சிரிசேன குரே பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழேயே திரு. சிரிசேன குரே காவலில் வைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் எக்குற்றத்திற்காகக் கைதானார்? எவ்வகையில் பொதுஜனப் பாதுகாப்புச்சட்டத்தை மீறியிருந்தார்? என்பதுபற்றி எதுவுமே தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.



தற்போது சிரிசேன குரே கைது செய்யப்பட்டதின் பின்னணி தொடர்பாக பல்வேறு ஊகங்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி- மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் தலைமையின்கீழ் வந்ததன் பின்னர் அக்கட்சிக்குள் சக்திமிக்க ஒருவராகவும், பிரேமதாசாவின் வலதுகரமாகவும் விளங்கினார் சிரிசேன குரே. திரு. சிரிசேன குரே பிரேமதாசாவின் இளம் பிராயகால நண்பருமாவார்.

அரசியல் கட்சிகள் அடியாட்களை வைத்திருப்பதும் தம் அரசியல் எதிரிகளுக்கு எதிராக அவர்களைப் பயன்படுத்துவம் வழக்கமாகியிருக்கிறது. கொழும்பில் ஐ.தே.கட்சி அடியாட்கள் பலத்தில் முன்னணி வகித்துவந்தது. தொண்டர்களைவிட அக் கட்சியின் குண்டர்கள் பலம்கண்டே அதன் அரசியல் எதிரிகள் ஒருகாலத்தில் அஞ்சி நடுங்கினார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சிக்காலத்தில் கொழும்பில் குண்டர்கள் கலாசாரம் ஒன்றை அக் கட்சி கட்டியெழுப்பியிருந்தது. அக் குண்டர்கள் படையின் பிரதான தளபதியாக இருந்தவர் சிரிசேன குரே.

சொத்தி உப்பாலி போன்றவர்கள் சிரிசேன குரேயின் செல்வாக்கில் பாதாள உலகத்தில் கொடிகட்டிப் பறந்ததுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் எதிரிகளுக்கும் சிம்ம

### அரசியல் ரீதியாக ஐ.தே.க.வையும் இராணுவ ரீதியாக எல்.ரி.ரி.ஈ.யையும் சந்திக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி

சொப்பனமாகத் திகழ்ந்து வந்தனர்.

பொலிஸ் டி.ஐ.ஜி. ஒருவருக்கு சமமான அதிகாரத்துடன் சொத்தி உப்பாலி பொலிசாரையே ஆட்டிப்படைத்தவர் என்று கூறப்படுகிறது.

பிரேமதாசாவின் மறைவின்பின்னர் ஐக்கிய தேசியக்கட்சிக்குள் சிரிசேன குரேயின் பிடி படிப்படியாகத் தளரத்தொடங்கியது. முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்காவுடன் குரேக்கு விரிசல் ஏற்பட்டது. சிரிசேன குரேயை பலவீனப்படுத்த நினைத்த விஜேதுங்கா அவரது அடியாட்கள் படைமீது பொலிஸ் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருந்தார்.

இதனால் கடந்த பொதுத்தேர்தலில் கொழும்பில் சிரிசேன குரேயின் ஆட்கள் உற்சாகமாக செயற்படாததோடு, பொதுஜன முன்னணி வட்டாரங்களோடும் இரகசியத் தொடர்பு கொண்டனர்.

சிரிசேன குரே புத்திசாலி. எப்படியும் பொதுஜன முன்னணிதான் பதவிக்குவரப்போகிறது என்று தெரிந்துகொண்டு அதனுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டதற்கு காரணம் இருக்கவே செய்தது.

பொதுஜன முன்னணி பதவிக்கு வந்ததும் அதன் முதல் குறியாக இருந்திருக்கவேண்டிய அரசியல்வாதி சிரிசேன குரேதான். ஆனால் நேரடியாக விசாரணைகளில் இருந்தும், நடவடிக்கைகளில் இருந்தும் சிரிசேன குரே தப்பிக்கொண்டார். முன்கூட்டியே பொதுஜன முன்னணியுடன் ஏற்படுத்திக்கொண்ட உறவுதான் அவரைக் காப்பாற்றியிருந்தது.

ஐக்கிய. தேசியக் கட்சியை பலவீனப்படுத்துவதே பொதுஜன முன்னணியின் பிரதான அரசியல் இலட்சியமாகும். கடந்தகால அரசியல் படுகொலைகள், அரசியல் காரணங்களுக்கான வன்முறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் உள்ள அக்கறையைவிட அந்தச் சம்பவங்களை கிளறுவது மூலம் ஐக்கிய தேசியக் கட்சியை அரசியல் ரீதியில் பலவீனப்படுத்துவதுதான் பொதுஜன முன்னணியின் பிரதான குறிக்கோளாக காணப்படுகிறது.

அதன் காரணமாகவே சிரிசேன குரேயில் உடனடியாகக் கைவைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ரணிலின் தலைமைக்கு வெளியே இருந்து தலையிடி கொடுக்கக்கூடியவரான குரேயுடன் 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற ரீதியில் நட்புக்கொண்டிருந்தது பொதுஜன முன்னணி.

அதேநேரம், சிரிசேன குரே மறுபடியும் ஓர் அரசியல் சக்தியாக வளர்ந்துவிடக்கூடாது என்பதிலும் கவனம் செலுத்தப்பட்டது. அதனால்தான் விசாரணைக் கமிஷன்களில் குரேக்கு எதிரான கடுமையான சாட்சியங்கள் முன்னிறுத்தப்பட்டன. அதேசமயம் குரே நாட்டைவிட்டு வெளியேறவும் அரசு



தடைசெய்யாமல் இருந்தது.

விசாரணைக் கமிஷன் முடிவடைந்தபின்னர் அவுஸ்திரேலியாவில் இருந்து மறுபடி நாடு திரும்பினார் குரே. அரச தரப்பில் இருந்து கிடைத்த சிக்னலை அடுத்தே அவர் நாடு திரும்பினார் என்று கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சி மறுபடி பலமடைந்து வருவதுபோலத் தெரிவதால் சிரிசேன குரே நாடு திரும்புவது ரணிலுக்கு தலையிடியாக மாறலாம் என்று கருதியே குரேயின் வருகைக்கு பச்சைக்கொடி காட்டப்பட்டது. அவர் கைதுசெய்யப்படமாட்டார் என்ற இரகசிய உத்தரவாதமும் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் நாடுதிரும்பிய சிரிசேன குரே, ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைக்கு போட்டியாக பகிரங்க அரசியலில் ஈடுபட எத்தனித்ததும், பிரேமதாசாவின் விசுவாசிகளைத் திரட்டி பெரும் சக்தியாக உருவெடுக்க நினைத்ததும் பொதுஜன முன்னணிக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணிலைவிட சிரிசேன குரே கட்சியை ஒழுங்கமைத்துக் கொண்டு செல்வதிலும், திட்டமிட்டு செயற்படுவதிலும் கெட்டிக்காரர். ஏனவே சிரிசேன குரே பெரும் சக்தியாக வளர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியை கைப்பற்றினாரேயானால் பொ.ஜ.முன்னணிக்கு தலைவலிபோய் திருகுவலி வந்த கதையாகிவிடும்.

அதனால்தான் சிரிசேன குரேயின் சுறுசுறுப்பு தன் பிடரிக்கு சேதம் என்ற நிலையில் திடீர் நடவடிக்கையில் இறங்கியது அரசு.

அதுமட்டுமல்ல, முஸ்லிம் காங்கிரஸ் உட்பட தமிழ்க் கட்சிகளுடனும், மற்றும் ஐக்கிய தேசிய கட்சி எம்.பிகளுடனும் சமீபகாலமாக சிரிசேன குரே நடத்திய சந்திப்புக்களும் ஜனாதிபதிவரை போயிருக்கின்றன, புருவம் உயர்த்தச் செய்திருக்கின்றன. ஆளும் தரப்பு எம்.பிகள் சிலரும் குரேயுடன் தொடர்பு கொண்டதாகவும் தெரியவந்ததாம்.

எதிரிக்கு எதிரியாக இருக்கச் சொன்னால், இந்த மனிதர் எமது நண்பர்களையே எதிரியாக்கிவிடுவாரோ என்று பொதுஜன முன்னணி உயர் மட்டம் உஷாரானதாம்.

எம்.பிகளைத் திரட்டி அரசுக்கு எதிரான திடீர் நெருக்கடியைக் கொண்டுவரக்கூடியவர் சிரிசேன குரே, என்ற சந்தேகமும் பூதாகரமாக எழுந்ததாகத் தகவல்.

இவற்றின் பின்னணியில்தான் சிரிசேன குரேமீது பொதுஜன பாதுகாப்புச் சட்டம் பாய்ந்திருக்கிறது. பின்னணியாக இருப்பது அரசியல் நோக்கம் என்பதால் குரே கைது செய்யப்பட்டதற்கு கூறப்பட்ட சட்டக்காரணங்கள் வலுவில்லாமல் காணப்படுகின்றன.

சிரிசேன குரே கைது விவகாரம் ஐக்கிய தேசியக் கட்சியைப் பலவீனப்படுத்தும் தொடர் நடவடிக்கைகளில் ஒன்றாகவே விளங்குகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியினர் அவர்களது ஆட்சிக்காலத்தில் விட்ட தவறுகளை அம்பலப்படுத்தும் விதத்திலேயே சந்திரிகா அரசு பல்வேறு ஆணைக்குழுக்களையும் நியமித்திருந்தது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பலத்தை முறியடிப்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணி விழிப்பாகவே இருந்து வருகின்றது.

எது எப்படியிருந்தபோதிலும், பொதுஜன ஐக்கிய முன்னணியைப் போலன்றி பாராளுமன்றில் தனி ஒரு கட்சியாகவே ஐ.தே.க. தனது பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருந்தது. தற்போது எதிர்க்கட்சியான போதிலும், தனி ஒரு கட்சியாகவே தனது பலத்தைப் பேணிவருகின்றது. எக்கட்சியுடனும் அது கூட்டுச் சேர்ந்திருக்கவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை பொதுஜன ஐக்கிய முன்னணி கடுமையாக விமர்சித்திருந்தது. ஆனால் இன்று அக்கட்சியின் பலம் என்பது பாராளுமன்ற ஆட்சியை விட ஜனாதிபதி ஆட்சியிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி ஆட்சியை தொடர்ந்து பேணும் வழிவகைகளையே பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொள்ளும். அதில் ஒன்றே புலிகளுடனான போர் என்பதும் தற்போது தெளிவாகிவிடுகின்றது!

சந்திரிகா அரசைப் பொறுத்தவரை இருவேறு எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. ஐ.தே.க. மூலமான அரசியல் ரீதியான எதிர்ப்பு. மற்றது எல்.ரி.ரி.ஈ. மூலமான இராணுவரீதியிலான எதிர்ப்பாகும்.

இவற்றில் ஐ.தே.க.வின் அரசியல் நிலைப்பாடுகள் நலிவுற்றிருக்கலாம். ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினருடன் பாறையில் தலையை மோதுவது போலவே சந்திரிகா அரசு இருந்துவருகிறது.

எனவே வன்னியில் இராணுவ ரீதியாக சங்கட நிலைக்குள்ளாகியுள்ளதையடுத்தே தற்போது நாட்டின் கவனத்தை திசைதிருப்ப ஐ.தே.கவைக் குழப்பிவிடும் நடவடிக்கைகளை பொதுஜன ஐக்கிய முன்னணி முடுக்கி விட்டுள்ளது.

பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் எவ்வித காரணமுமின்றி திரு.சிரிசேன குரே கைதாகியிருந்தார்.

ஆனால் சிலவாரங்களுக்கு முன்னர் கொழும்பில் பெரும்பரபரப்பை ஏற்படுத்திய- பப்புவா நியூகினி ரகர் ஆட்டக்காரர் ஜோயல் பெராவை சுட்டுக்கொன்றது தொடர்பாக முக்கிய சந்தேக நபராகக் கருதப்பட்ட லொஹான் ரத்வத்தையைக் கைது செய்வதில் தாமதம் நிலவியிருந்தது!

அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவின் புதல்வரே லொஹான் ரத்வத்த. இவர்மீதான விசாரணைகளை சி.ஐ.டி.. பொலிஸார் ஒரு மூடுமந்திரமாகவே நடத்தியிருந்தனர். இறுதியில் லொஹான் ரத்வத்த மீது குற்றஞ்சுமத்துவதற்கான காரணங்கள் எதுவுமில்லை எனக்குறிப்பிட்டே சட்டமா அதிபர் அவரை ஜோயல் பெரா கொலைச் சம்பவத்திலிருந்து விடுதலை செய்திருந்தார்.

திரு. சிரிசேன குரே மீதான நடவடிக்கையை ஆட்சியாளர்கள் பெரிதுபடுத்த முற்படலாம். ஆனால் அதுவே மறுபுறத்தில் ஐ.தே.க. பலமடைவதற்கு ஏதுவான சூழ்நிலைகளையும் ஏற்படுத்தி விடலாம். எனவே திரு குரே விவகாரம் 'சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்த'தாகவே இருக்கின்றது.

## கூட்டணித் தலைவருக்கு இன்னொரு மடல்

ஐயா சிவா அவர்களுக்கு,

பணிவன்புடன் முத்தமிழன் எழுதிக்கொள்வது,

தாங்கள் ஒரு தலைசிறந்த சட்டத்தரணி என்பதை முன்னரே நானும் அறிவேன். நாடும் அறியும்!

ஆனால் தாங்கள் எப்போது அரச சட்டத்தரணியானீர்கள் என்பதுதான் நானும் அறியாத, நாடும் அறியாத இரகசியம்.

கொழும்பில் நடைபெற்ற தந்தை செல்வா நினைவுக் கூட்டத்தில் தாங்கள் ஆற்றிய உரை அரச சட்டத்தரணியாக நிகழ்த்திய தொகுப்புரைபோல அமைந்ததையிட்டு ஆழ்ந்த வருத்தமடையவோ, அதிர்ச்சியடையவோ ஒரு காரணமும் இல்லை.

இப்போதாவது உண்மையைச் சொல்லிமிருக்கிறீர்கள் உள்ளதை சொல்லியிருக்கிறீர்கள் என்பது எத்தனை சந்தோசமாக இருக்கிறது தெரியுமா?

இன்னும் சில உண்மைகளை நீங்கள் சொல்லியிருக்கலாம். அரசியல் தீர்வு யோசனைக்கு ஆலோசனை வழங்கிய உங்கள் சகா யார்?

அரசியல் தீர்வு யோசனையை விமர்சிப்பதில்லை என்று நீங்கள் வழங்கிய உறுதிமொழிகள்.

அவசரகால சட்டத்தை மட்டும் எதிர்ப்போம், அது எமது அரசியலுக்காக. அதேசமயம் அரசுக்கு எப்போதும் பாராளுமன்றத்தில் கைகொடுத்து நிற்போம் என்று வழங்கியுள்ள உத்தரவாதம்.

தனியான சந்திப்புக்களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான உங்கள் கடும் போக்கான நிலைப்பாடு. பொது அறிக்கைகளில் புலிகளுடன் பேசலாம் என்று விடப்படும் சாணக்கிய அறிக்கைகள்... இப்படி எத்தனையோ உண்மைகளை நீங்கள் இன்னமும் சொல்லவில்லை.

நீங்கள் நாகரிகமானவர். அதனால் உங்கள் சகாக்களின் சம்மதம் இல்லாமல் அவர்கள் சம்பந்தப்பட்ட காரியங்களை வெளியே சொல்லமாட்டீர்கள்.

ஐயா! அரசியல் தீர்வை குழப்பியடிக்காதீர்கள் என்றும் ஆலோசனை சொல்லியிருக்கிறீர்கள்.

எந்தத் தீர்வை ஐயா சொல்கிறீர்கள்? இதோ பாருங்கள், இதுதான் தீர்வு. இதனைக் குழப்பாதீர்கள் என்று ஒரு தீர்வை பெற்றுத் தந்துவிட்டு பேசியிருந்தீர்கள் என்றால் அது நியாயம்.

எது தீர்வென்றே தெரியாதபோது உங்களுக்கு மட்டும் இதுதான் தீர்வு என்று எப்படித் தெரியும்? அதிலே நல்ல நல்ல அம்சங்கள் கொட்டிக்கிடக்கின்றன என்று எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?

மன்னியுங்கள் ஐயா, சந்தேகமாக இருக்கிறது, திரைமறைவில் உங்களுக்கும் அரசுக்கும் இடையே எத்தகைய தீர்வு என்பதில் இணக்கம் காணப் பட்டுவிட்டதோ என்று.

தான் முன்வைத்த தீர்வு யோசனையில் இன்னமும் எதனை வெட்டுவது, எதனை ஓரம் கட்டுவது என்று அரசே ஒரு முடிவுக்கு வர முடியாமல் தவிக்கிறது.

வடக்கு-கிழக்கு இணைப்பா? இடையிலே ஒரு நறுக்கா? கடைசியாகக் கிடைப்பது ஒரு ஓலை நறுக்குப்போல சின்ன நிலப்பரப்பா? என்பது எவருக்கும் தெரியாத மூடுமந்திரம்! எல்லை மறுசீரமைப்பு என்ற அம்சம் பெரிய கத்தியாக மாறி 'கேக்' வெட்டுவதுபோல தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பூமியை சரக் சரக் என்று நறுக்காது என்று உங்களால் உத்தரவாதம் தரமுடியுமா ஐயா?

குழப்பாதீர்கள் என்று கொழும்பு கொட்டாஞ்சேனையில் நின்று தமிழ் மக்களுக்கு கூறி இருக்கிறீர்கள்? பாவம், தமிழ் மக்கள் ஏற்கனவே குழம்பிப்போய் இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றையும் குழப்பமாட்டார்கள்.

நீங்கள் உங்கள் கோரிக்கையை நியாயமாகச் சொல்லவேண்டியது யாரிடம் தெரியுமா?

'வடக்கு-கிழக்கில் எல்லை மறுசீரமைப்பு' என்று பொடி போட்டுவிட்டு விளக்கமாய் சொல்ல மறுக்கிறதே அரசாங்கம் அதனிடம் சொல்ல வேண்டும்.

வடக்கு-கிழக்கு இணைப்பா நறுக்கா என்று இதுவரையும் சொல்லாமல் இருக்கின்றனவே ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் அவற்றிடம் சொல்ல வேண்டும்.

தீர்வு யோசனையில் முதலில் பிராந்திய சபையைக் கலைக்க முடியாது என்று கூறிவிட்டு பின்னர் சிங்கள பேரினவாதத்தின் எதிர்ப்புக் காரணமாக கலைக்கும் அதிகாரத்தை யோசனையில் சேர்த்தாரே கௌரவ நீதியமைச்சர், அவரிடம் சொல்லவேண்டும்.

தினமும் தீர்வுக்கு எதிராக விஷம் கக்கும் சிங்களக் கமிஷனிடம் சொல்லியிருக்கவேண்டும். நச்சுப்புகையை நாட்டிலே பரப்பும் அக் கமிஷனை கண்டும் காணாமல் இருக்கும் அரசிடம் சொல்லியிருக்க வேண்டும்.

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிரிசேன குரேயை கைதுசெய்ய முடிகிறபோது, சிங்களக் கமிஷனை தடைசெய்ய முடியாது என்று சட்டம் அறிந்த நீங்கள் நினைக்கமாட்டீர்கள்.

சிங்களக் கமிஷன் முன்பாகத் தோன்றி பொதுஜன முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களே தீர்வு யோசனையை கிறிக்கிழித்தார்களே, அவர்களிடம் போய் சொல்லியிருக்க வேண்டும்.



தீர்வு யோசனைக்கு எதிராக கௌரவ அமைச்சர் நிமால் சிரிபால் டி சில்வாவே கருத்துக் கூறியிருக்கிறாரே. அது உங்கள் காதில் விழவில்லையா?

தான் முன்வைத்த தீர்வு யோசனை சகல தரப்பினரதும் கருத்துக்கள் அறியப்பட்டபின்னரே இறுதியானதாக மாறும் என்று ஜனாதிபதியே சொன்னதுகூட தங்கள் கவனத்திற்கு தப்பியது எப்படி?

எல்லோரும் கருத்துச் சொல்லலாம் என்கிறது அரசாங்கம். தொலைக்காட்சிகளில் விவாதம் சூடு பறக்கிறது. அத்தனை விவாதங்களிலும் பேரினவாத நிலைப்பாடே மேலோங்குகிறது.

தமிழ்பேசும் மக்கள் மட்டும் மௌனமாக இருக்கவேண்டும் என்று தாங்கள் கூறுகிறீர்கள். அவர்கள் குழப்பிவிட்டு கொடுப்பதை கொடுக்கட்டும், நாங்கள் மௌனமாக இருந்து தருவதை வாங்குவோம் என்று சொல்லவா நீங்கள் தலைவராக இருக்கிறீர்கள்?

இளமைத் துடிப்பில் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தேன் என்று கூறுகிறீர்கள். உங்கள் சுயவிமர்சனத்துக்கு நன்றி.

ஆனால் நீங்கள் எதிர்த்ததால்தான் அந்த ஒப்பந்தம் காற்றில் பறந்தது என்று கற்பனை செய்யக்கூட வரலாறு நம்மை அனுமதிக்கப் போவதில்லை.

பேரினவாதத்தின் பேரெதிர்ப்பால் கிழித்து வீசப்பட்ட குறைந்தபட்ச ஒப்பந்தம் அது. தமிழ் பேசும் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாற்றின் ஒரு அத்தியாயம் அது. அந்த கறைபடிந்த வரலாற்றுக்கு நீங்கள் கூறும் வியாக்கியானம் விசித்திரமாக இருக்கிறது.

பண்டா-செல்வா ஒப்பந்தம்தான் பிரச்சனைக்கு தீர்வு என்று ஒருநாள்கூட தந்தை செல்வா சொன்னதில்லையே. அதனை ஒரு ஆரம்பமாகக் கொள்ள நினைத்ததாகத்தானே சொல்லியிருக்கிறார்.

உங்களால்தான் பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டது என்று நீங்கள் நினைப்பீர்களேயானால், அன்று உங்களுக்கு இருந்த அரசியல் தகுதிக்கு மீறிய கணிப்பு என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

வெந்ததைத் தின்றுவிட்டு திண்ணையில் அமர்ந்திருந்தும் இளமைத்துடிப்புக் காலங்களை சற்று மிகைப்படுத்தியே அசைபோடும் மூத்தோர்கள் போல உங்கள் நிலை மாறிவிடக்கூடாது என்பதுதான் என் விருப்பம்.

ஐயா! இளமைத் துடிப்பில் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தீர்கள் என்கிறீர்கள். தமிழீழம் கேட்டு நீங்கள் முழக்கமிட்டபோது, அப்படி ஒன்றும் நீங்கள் இளைஞர் அல்ல என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

ஐயா! தமிழ் ஈழமே முடிந்த முடிபு. இனிமேல் சமஷ்டி கோரிக்கை சரிப்பட்டுவராது என்று தந்தை செல்வா கூறியபோது அவருக்கு என்ன ஒரு 70 வயது இருக்குமா? அனுபவம் பெற்று, இளமைத்துடிப்பு எல்லாம் அடங்கி முதிர்ந்து கனிந்த பக்குவமான பருவத்தில்தானே தந்தை செல்வா தமிழீழம் கேட்டார்.

அவரது நினைவுக் கூட்டத்திலேயே அவரை கேலி செய்வதுபோல பேசிவிட்டீர்களே.

மரணப்படுக்கைக்கு செல்லும் வயதிலும் சமஷ்டிகூட இனிவேண்டாம் என்று தந்தை செல்வா சொன்னதை இளமைத் துடிப்பில் செய்த தவறு என்று எவரும் ஏற்கமாட்டார்கள் ஐயா. அனுபவத்தில் இருந்து கற்ற பாடம் என்றுதான் சொல்வார்கள்.

நீங்கள் இளமைத்துடிப்பில் ஒன்று சொல்வீர்கள். முதுமைச் சலிப்பில் இன்னொன்று சொல்வீர்கள். நாளை முழுவதுமே வெறுத்து இன்னொன்று சொல்வீர்கள்? நாங்கள் எதனை நம்புவது?

நீங்கள் சொன்னதை வேதம் என்றெண்ணி ஆயிரமாயிரம் இளைஞர்கள் இன்னுயிர் இழந்தனர். இரத்தம் கொட்டினர். உங்களுக்கென்ன வெகு சுலபமாக அதெல்லாம் 'இளமைத்துடிப்பில் பேசியவை' என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டுப் போய்விட்டீர்களே?

தயவு செய்து நான் பயன்படுத்தும் இந்த வார்த்தைக்காக மன்னியுங்கள்; மாபெரும் வரலாற்றுத் துரோகம் செய்திருப்பதற்கான ஆதார வாக்குமூலம்போல தங்கள் பேச்சு அமைந்துவிட்டது.

இறுதியாக ஒன்று: அன்று உங்களுக்கு இரத்தப் பொட்டு வைத்தவர்களில் நானும் ஒருவன் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்காது. ஒருவரா.... இருவரா...நீண்ட வரிசையில் நின்று எத்தனை நூறுபேர் உங்கள் நெற்றிக்கு இரத்த திலகமிட்டனர். எங்கள் இளமைத் துடிப்பை அன்றாவது நீங்கள் தடுத்திருக்கலாம். தடுக்காதுபோனால் எனக்கு ஏற்பட்ட இரத்த நஷ்டத்திற்கு பரிகாரமாக கொஞ்சம் இரத்தம் அனுப்பிவையுங்கள்.

முடியாவிட்டால் பரவாயில்லை, உங்கள் கர்ஜனைகளைக் கேட்டு நம்பிப் பலியான ஆயிரமாயிரம் இளைஞர்களின் இரத்தத்துடன் ஒப்பிடும் போது அது ஒரு பொருட்டேயல்ல.

நெல்சன் மண்டேலா ஆயுதமேந்திப் போராடி அமைதிப்பாதைக்கு திரும்பிப் பேச்சு நடத்தவில்லையா? என்று கேட்டுள்ளீர்கள். நல்லது, இங்கும் நெல்சன் மண்டேலாக்கள் பேசட்டும் நீங்கள் ஏன் குறுக்கே நிற்கிறீர்கள் என்றும் கேள்வி எழுமே, என்ன சொல்கிறீர்கள்?

அன்புள்ள ஐயா, தயவு செய்து தமிழ்பேசும் மக்களுக்கு புத்தி சொல்வதைவிடுத்து தீர்வை தரமறுப்பவர்களுக்கும், தடையாய் சுவர் எழுப்புபவர்களுக்கும் புத்தி சொல்ல புறப்படுங்கள். அப்படியானால் உங்களை அனைவரும் வாழ்த்துவார்கள். வரவேற்பார்கள்.

அன்புடன்,
உங்கள் முன்னாள் சிஷ்யன்,
முத்தமிழன்.



படிப்பகம்

www.padippakam.com

**கடந்த வாரம்**

ஸ்ரீ ராமின் கொலை முயற்சியால் காயம் அடைந்த மல்லாவை பூலானும், வேராவும் சிகிச்சைக்காக கொண்டுசெல்கின்றனர். மல்லாவின் சகோதரர் ராம் லாலின் உதவியுடன் ஒரு டாக்டர் மூலம் சத்திர சிகிச்சை நடக்கிறது. மல்லாவும், பூலானும் விபத்தில் பலியானதாக பத்திரிகையில் செய்தி வருகிறது. அதனைப்படித்த டாக்டருக்கு இருவர்மீதும் சந்தேகம் வருகிறது. டாக்டரை மயக்க நினைக்கிறாள் பூலான்.

இனி...

# கொள்ளை ராணி பூலான்தேவி



பூலான்

50

தருவது ரசிகன்

பூலானை முதலில் கண்டதிலிருந்தே டாக்டருக்கு அவள்மீது ஆசைவந்துவிட்டது. கிசிச்சைக்காக அதிகபணம் கேட்டதும் உள்நோக்கத்தோடுதான். அவ்வளவு பணம் அவர்களிடம் இருக்கப் போவதில்லை; பணத்துக்குப் பதிலாக பூலானை வளைக்கலாம் என்றுதான் டாக்டர் நினைத்தார்.

கேட்ட பணத்தை பூலான் கொடுத்தபோது டாக்டருக்கு ஏமாற்றமாகிவிட்டது. இத்தனை பணம் இவர்களிடம் ஏது? என்று மனதின் ஓரத்தில் சந்தேகமும் முளைவிட்டது.

'பத்திரிகையில்' மல்லாவும் அவன் காதலி பூலானும் விபத்தில் பலியானதாகச் செய்தியைப் பார்த்ததும் அந்தச் சந்தேகம் வலுத்துவிட்டது.

பூலானின் படமோ, மல்லாவின் படமோ பொலிசாரிடம் இல்லையென்பதால் அவர்களது பெயர்கள் மட்டும்தான் செய்தியில் இருந்தது.

என்றாலும் ஒரு குருட்டு நம்பிக்கையுடன், மல்லாவையும், பூலானையும் தான் இனம் கண்டுவிட்டதுபோல கதையைப் போட்டுப்பார்த்தார் டாக்டர்.

அவர்கள்தான் மல்லாவும், பூலானும் என்று நிரூபிக்க டாக்டரிடம் எந்த ஆதாரமும் இல்லைத்தான். ஆனால் பொலிசில் போய் சொல்லிவிட்டாரானால் தங்கள் கதி அதோகதிதான் என்று நினைத்தாள் பூலான்.

டாக்டரின் கண்கள் தன்மீது மேய்ந்த விதத்தில் இருந்தே அவரது சபலபுத்தியை முன்னரே புரிந்துகொண்டாள் பூலான்.

டாக்டரின் பலவீனத்தைப் பயன்படுத்தி மல்லாவைக் காப்பாற்ற நினைத்தாள் பூலான்.

மார்புச்சேலை விலகியிருந்ததால் விம்மிக் கொண்டிருந்த பூலானின் எழுச்சிகள், டாக்டரை நிலைகுலையச் செய்தன.

பார்வை அங்கேயே குத்திட்டு நின்றது. தன் தந்திரம் பலித்துக் கொண்டிருப்பது பூலானுக்குச் சிரிப்பாக இருந்தது. தேன் குடித்த நரிபோல தெரிந்தார் டாக்டர்.

பூலானின் அருகில் வந்து அவள் கையைப் பிடித்துக்கொண்டார். பூலான் தலையை இடதுபுறம் சரித்து ஒரு பார்வை வீசினாள். அவள் கையைப் பிடித்துக் கொண்டிருந்த டாக்டரின் கை நடுங்கியது. 'இவன் பலவீனமானவன். பயந்து பயந்து தப்புச் செய்பவன்.' பூலான் மனதில் குறித்துக்கொண்டாள்.

பூலானின் கையைப் பிடித்துக் கொண்டிருந்த டாக்டர் சட்டென்று அவளை தன்னைநோக்கி இழுத்து மூச்சு திணறும்போல அணைத்தான். கைகளை அலையவிட்டான். பூலானின் முதுகிலும், முதுகுக்குக் கீழேயும் அவன் கைகள் அவசரமாய் அலைந்தன.

பூலானுக்கு வெறுப்பாக இருந்தது. அப்படியே அணைத்தபடி கழுத்தை திருகிவிடலாமா என்று நினைத்தாள்.

அது சுலபம்தான். ஆனால் பொலிசார் உஷாராகிவிட்டால் மல்லாவின் காயம் குணமாகும்வரை ஜான்சியிலோ கான்பூரிலோ தலைமறைவாக இருப்பது ஆபத்தாகிவிடலாம்.

"ஆசையா டாக்டர்?" என்றாள் வருவித்துக்கொண்ட மயக்கமான குரலில்.

"பின்னே இல்லையா?" கைகள் தொடர்ந்து அங்குமிங்கும் அலைந்து அவசர அலசல் நடத்திக் கொண்டிருந்தன.

இப்போது முன்புறமாய் கைகள் வர பூலான் நாசூக்காய்த் தடுத்தாள்.

"ஏன்?" தடையையும்மீறி டாக்டரின் கை ஒன்று மிக அவசரமாய்.... பூலான் கையைப் பிடித்துக்கொண்டாள்.

"இன்று வேண்டாம்-சரியா?"

"நாளை....நாளைக்கு?"

"ம்!"

"உண்மையாகவா? ஏமாற்றமாட்டாயே, நீதான் பூலான் தேவியா?"

"யார் அது பூலான் தேவி?" நம்பும்படியாக நடித்தாள். டாக்டர் சந்தேகம் தடவிய பார்வையோடு,

"அப்படியானால் ஏன் பயந்தாய்?"

"யார் பயந்ததாம்?"

"இல்லையா, அப்படியானால் என்னை ஏன் இதற்கு அனுமதிக்கிறாய்?" பூலான் எதிர்பாராத தருணத்தில் அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.

கன்னத்தை துடைத்தபடி பூலான்; "உங்களைப் பார்த்ததில் இருந்தே..." என்று நிறுத்தி, வேண்டுமென்றே வெட்கப்பட்டாள்.

"பார்த்ததில் இருந்து...?" டாக்டர் இளித்தபடி அவசரக் குறுக்கீடு செய்தான்.

பூலான் இன்னமும் வெட்கத்தை அடர்த்தியாகக் காட்டியபடி, "பார்த்ததில் இருந்து ஆசை!" என்றுசொல்லிவிட்டு அவனிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு கதவைத்திறந்து ஓட, டாக்டர் தன்னை மறந்து நின்றுகொண்டிருந்தான்.

டாக்டர் அங்கிருந்து போனதும் பூலானின் யோசனைப்படி உடனடியாக அந்த இடத்திலிருந்து வெளியேறினார்கள்.

மல்லாவின் சகோதரர் ராம்லால் வண்டியொன்றை வாடகைக்கு அமர்த்த தேடிப் போனார். ஒரு வண்டியும் கிடைக்கவில்லை. ஏமாற்றத்தோடு திரும்பிவந்தார்.

தன்னுடன் வேராவை அழைத்துக்கொண்டு புறப்பட்டாள் பூலான். செல்லும்போது மறக்காமல் கைத்துப்பாக்கியை தன் இடுப்புச் சேலையில் செருகிக்கொண்டாள்.

ஒரு உழவு இயந்திரம் தான் எதிர்ப்பட்டது. அதனைச் செலுத்தி வந்தவன் இளைஞனாக இருந்தான்.

"முதலில் உதவி கேட்கலாம். மறுத்தால் உதைத்துக் கேட்கலாம்," என்றாள் பூலான். வேரா பணிவாகச் சிரித்தான்.

"கான்பூருக்குச் செல்லவேண்டும். அவசரம். உன்னால் உதவமுடியுமா? பணம் தருகிறோம்," என்ற பூலானை அப்போதுதான் மீசை துளிர்விட ஆரம்பித்திருந்த அந்தப் பையன் பார்த்த பார்வையில் வயதுக் கோளாறு இருந்தது.

"நீங்கள் மட்டும்தானே?" என்றான். பூலானுக்கு சிரிப்பாக இருந்தது.

"இல்லையப்பா. இவரும் இன்னொருவரும் என்கூட வருவார்கள். உனக்கு என்ன தேவையானாலும் கேள்!" இறுதி வாக்கியத்தை அழுத்திச்சொல்லி சட்டென்று பூலான் கண் சிமிட்டினாள். கான்பூருக்கு மட்டுமல்ல, இந்தியாவின் எந்த மூலைக்கு கூப்பிட்டாலும் போகத்தயாராக இருந்தான்.

"வருகிறேன்!"

"வா!" கிறக்கமாய் சிரித்தாள். பெண் என்பதால் இப்படியும் சில சௌகரியங்கள் இருக்கத்தான் செய்கின்றன என்று நினைத்தாள்.

மல்லாவையும் ஏற்றிக்கொண்டு கான்பூருக்குப் புறப்பட்டார்கள்.

தொழிற்சாலைகளும், அந்த தொழிற்சாலைகள் விடும் புகையாலும் தூசுபடிந்த நகரம் கான்பூர். எப்போதுமே வீதிகளில் மசமசவென்று சனநெரிசல்.

சிலகாலம் தலைமறைவாக இருக்க கான்பூர்தான் உபயோகம். அதன் சனசந்தடிக்குள் கரைந்துபோகலாம். யாரும் கண்டுபிடிக்க முடியாது. மல்லாதான் கான்பூரை தலைமறைவாக இருக்கத் தகுந்த இடமாக தெரிவு செய்திருந்தான்.

கான்பூரில் இறங்கியதும் உழவு இயந்திரக்காரப் பையனுக்கு பணம் கொடுத்தாள் பூலான். அவன் கண்களில் ஏமாற்றம் அப்பட்டமாகத் தெரிந்தது. பூலானுக்குப்பாவமாக இருந்தது.

கான்பூரில் ஒரு சிறிய அறையை வாடகைக்குப் பிடித்துக்கொடுத்தார் ராம்லால்.

நீண்டகாலத்தின் பின்னர் மக்கள் செறிந்த நகருக்குள் வாழ்வது மல்லாவுக்கு ஒரு மாற்றமாக இருந்தது. பூலானுக்கு மல்லாவுடன் குடித்தனம் நடத்துவது சந்தோசமாக இருந்தது.

காய்கறிகளை பேரம்பேசி வாங்குவதில் பூலானுக்கு தனி உற்சாகம். பூலானுக்கு முதன்முதலாக பல சிநேகிதிகள் கிடைத்ததும்

## பாகம் 02

கான்பூரில்தான்.

மல்லாவும், பூலானும் விபத்தில் பலியானதாகச் செய்தி வெளியிட்ட அதே பத்திரிகைகள், மல்லாவும் பூலானும் உயிரோடிருப்பதாக பின்னர் செய்திகள் போட்டதோடு, சம்பல்பள்ளத்தாக்கில் நடைபெற்ற சில கொள்ளைகளோடும் அவர்கள் இருவரையும் சம்பந்தப்படுத்தி செய்திகள் வெளியிட்டன.

பூலானைப்பற்றி பத்திரிகைகள் தங்கள் கற்பனையையும் சேர்த்து செய்திகள் வெளியிடத்தொடங்கின. அதனால் பூலானின் பெயர் வெகு பிரபலமானது.

"ஏன் இப்படி எழுதுகிறார்கள்? நாங்கள் செய்யாததை எல்லாம் எங்கள் தலையில் கட்டுகிறார்களே?" என்று பூலான் கேட்டாள். மல்லாவிடம் இருந்து சிரிப்புத்தான் பதிலாக வரும்.

பூலான் தன் சிநேகிதிகளுடன் அரட்டை அடிப்பதில் பொழுதைப் போக்குவாள். ஒருநாள் பூலானின் சிநேகிதிகள் பூலானைப் பற்றிய பேச்சை எடுத்தார்கள். தன்னை யாரென்று தெரியாமல் அவர்கள் தன்முன்னாலேயே தன்னைப் பற்றிப் பேசுவதைக் கேட்க பூலானுக்கு சிரிப்புச் சிரிப்பாகவந்தது.

ஒருநாள் பூலானின் சிநேகிதி ஒருத்தி பூலானிடம் கேட்டாள்: "பூலான் எப்படியிருப்பாள்?"

பூலான் சிரித்துக்கொண்டே சொன்னாள்: "என்னைப் போலத்தான் இருப்பாள்!"

அவள் சொன்னதைக் கேட்டதும் சிநேகிதிகள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். கண்களில் நீர்வரும்வரைக்கும் சிரித்தார்கள்.

"நீ....நீ...பூலான்போல இருக்கிறாயா?" தொடர்ந்து சிரிப்பு.

"ஏனடி கண்ணாடியில் உன்முகத்தையே பார்ப்பது கிடையாதடி?"

அவர்களின் அறியாமையை நினைத்து பூலானும் சிரிக்க, "பார்த்தாயா உனக்கே சிரிப்பாக இருக்கிறது, பூலானாம்... இவள் மாதிரியாம்...எண்ணம்தான்!"

"ஏன் பூலானுக்கு கொம்பு முளைத்திருக்குமா?" என்றாள் பூலான். சிரிப்பினூடே.

"கொம்புதான். எங்களுக்கும் இருக்கிறதே!" என்று குலுங்கினார்கள்.

மல்லாவுடன் சீட்டாட வருவான் பக்கத்து வீட்டு இளைஞன். அவனும் பூலான்-மல்லா ஆகியோரைப் பற்றிப் பேசுவான்.

"கொள்ளைக்காரர்களைப் பற்றி உனக்கென்ன பேச்சு? அவர்கள் கெட்டவர்கள்." என்பான் மல்லா.

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். பூலான்தேவியும், மல்லாவும் ரொம்ப நல்லவர்களாம் தெரியுமா?"

"உனக்கெப்படித் தெரியும்?"

"ஒரு பொம்பிளை துப்பாக்கியை ஏந்தத் துணிகிறாள் என்றால் அவள் எத்தனை துயரங்களைச் சந்தித்திருக்கவேண்டும் தெரியுமா? எனக்கென்னவோ பூலான் ஒரு தேவதைக்கு சமமானவள் என்றுதான் தோன்றுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் அக்கா?"

"அவள் என்ன நினைப்பது, ரொம்பவும் சந்தோசப்படுவாள்."

"ஏன்?"

"அவள்தானே நீ சொல்லும் பூலான் தேவி." என்றான் சீட்டுக்கட்டை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த மல்லா.

பையன் இடியாகச் சிரித்தான்.

"ஏனடா சிரிக்கிறாய்?"

"இந்த அக்காவை பூலான்தேவியாக கற்பனை செய்துபார்த்தேன்! சிரிப்பை அடக்க முடியவில்லைப் போங்கள்."

"எப்படி கற்பனை செய்தாய்?"

"பூலானைப்போல கையில் துப்பாக்கியுடன் குதிரையில் சவாரிசெய்தபடி, குறுக்கே யார் வந்தாலும் டுமீல் டுமீல் என்று சுட்டபடி, முகத்தில் காளிமாதிரி கனல்தெறிக்கும் தோற்றத்துடன்.... ம்ஹும் கற்பனைக்கே இலாயக்கில்லை, பசுமாதிரி அப்பாவியாக இருக்கிறார்கள்... இவரைப்போய்..." சிரித்தான்... மல்லாவும் சேர்ந்து சிரிக்க, பூலானும் சிரிப்பில் கலந்துகொண்டாள்.

மல்லாவின் உடல்நிலை தேறிவிட்டது. கான்பூரைவிட்டுப் புறப்படத் தயாரானார்கள்.

அப்போதுதான் பத்திரிகைகள் இடியாக தாங்கிவந்தன அச் செய்தியை.

மல்லா முதலில் நம்பவில்லை.

"மல்லாவின் தளபதிகளான லெப்டினன்டுகள் மாது சிங்கும், பாரத் சிங்கும் பொலிசாருடன் நடைபெற்ற சண்டையொன்றில் சுட்டுக்கொல்லப்பட்டனர். பொலிசார் மல்லாவையும், பூலானையும் தேடி வலை விரித்துள்ளனர்."

செய்தியை உறுதிப்படுத்த வேராவை அனுப்பி விசாரித்தான்.

"உண்மைதான்!" என்ற தகவலுடன் வந்தான் வேரா.

இடிந்துபோனார்கள் மல்லாவும் பூலானும். மல்லா சொன்னான்:

"நாம் பாபாவிடம் செல்லுவோம். ஆனால் வெறுங்கையுடன் அல்ல....."

(தொடர்ந்து வரும்)

## விபரீதக் காதல்



நம்புவதற்கு கொஞ்சம் கஷ்டமான விவகாரம்தான். அவர்கள் இருவரும் காதலர்கள். காதலர்களாக இருந்திருந்தால் தப்பில்லை. அபாயகரமான காதலர்களாக மாறியதுதான் மகா தப்பு.

அமெரிக்காவில் இருக்கிறது நியூஜெர்ஸி மாநிலம். அங்கே உள்ள கல்லூரி ஒன்றில்தான் படித்தனர் ப்ரயனும், அமியும். இருவருக்கும் ஒரே வயது. இனிய 18.

இருவரும் காதலித்தனர். அத்தோடு நிறுத்தாமல் ஹோட்டல் ஒன்றில் தனியறையில் சந்தித்து எல்லை மீறினர். விளைவு, அமி கர்ப்பமானாள்.

அதன்பின்னர்தான் ஆரம்பமானது விபரீதம். கர்ப்பத்தை மறைக்க இருவருமே திட்டம் போட்டனர்.

தன் சிநேகிதியுடன் வெளியூர் செல்வதாகக் கூறிவிட்டுப்போன அமி தன் காதலனுடன் ஹோட்டலில் தங்கினாள். சரியாக பத்தாவது மாதம் குழந்தை பிறந்தது.

பிறந்த குழந்தையை குப்பை போடும் கறுப்பு பிளாஸ்டிக் பையில் போட்டு குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு போய்விட்டனர்.

வீட்டுக்குப்போன அமி திடீரென்று மயக்கமடைந்தாள். டாக்டர்களிடம் அழைத்துப் போனார்கள். டாக்டர்கள் அவள் குழந்தை பிரசவித்ததைக் கண்டுபிடித்தனர்.

விவகாரம் பெரிதாகியது. பொலிசார் விசாரணையை முடுக்கிவிட்டனர். உண்மை அம்பலமானது. குப்பைத் தொட்டியில் போடப்பட்ட குழந்தை பிணமாகக் கண்டெடுக்கப்பட்டது.

தற்போது காதலர்கள் இருவரும் தனித்தனிச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். வழக்கு நடக்கிறது. குற்றம் உறுதியானால் மரணதண்டனை சர்வ நிச்சயம்.

ப்ரயன் கல்லூரியில் துடிப்பான மாணவன். கால்பந்து அணியின் உதவிக் கப்டன். அமி ஓவியம் வரைவதில் கெட்டிக்காரி. இவர்கள் புத்தி இப்படியா போக வேண்டும்? என்று கல்லூரி ஆழ்ந்த கவலையில் இருக்கிறது.

## சுவையான இரத்தம்! -வெறிபிடித்த தம்பதி!



இப்படியும் நடக்குமா? என்று நெஞ்சை உலுக்கும் சேதிதான். ஆனால் நடந்துதான் இருக்கிறது-இந்தக் காட்டுமிராண்டித்தனம்.

தமிழ்நாட்டில் பரமத்தி என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள் கனகசுந்தம் (வயது 35) கண்ணகி (22) தம்பதியினர். அவர்களுக்கு மூன்று குழந்தைகள். பரணி (வயது 8), பத்மாவதி (வயது 7), மதன்குமார் (2).

இருவரும் காளிபக்தர்கள். மனித இரத்தத்தைக் குடித்துக்கொண்டு நள்ளிரவு பூஜை செய்தால் காளியின் கடாட்சம் கிடைக்கும் என்று யார் சொன்னார்களோ தெரியாது. இருவரும் நம்பிவிட்டனர்.

வீட்டில் நள்ளிரவில் பூஜை ஆரம்பமாகும். கணவரின் கை, கால் மற்றும் உடல் பகுதியில் கத்தியால் கிழித்து இரத்தத்தை உறிஞ்சுவாள் மனைவி. கணவரும் அதே போலச் செய்வார். அப்படிச் செய்யும்போது தெய்வம் தம்மீது இருப்பதாக நம்புவார்கள்.

இந்தக் காட்டுமிராண்டித்தனம் அவர்கள் உறவினர்களுக்கு தெரியவந்தது. இருவரும் மனநிலை பாதிக்கப்பட்டுத்தான் அப்படிச் செய்கிறார்கள் என்று கருதினார்கள். இருவரையும் பூஜைநேரத்தில் பிடித்து மனநல மருத்துவரிடம் ஒப்படைக்க நினைத்தனர்.

குறிப்பிட்ட ஒருநாள் நள்ளிரவு உறவினர்கள் சென்றனர். வீடு பூட்டிக்கிடந்தது. கதவைத் தட்டியபோது வந்து திறந்தார் கண்ணகி. முகம் முழுக்க இரத்தம் பூசப்பட்ட கண்ணகியைக் கண்ட உறவினர்களுக்கு திகீர் என்று பயம் பிடித்துக்கொண்டது. அப்போதுதான் கணவரின் இரத்தத்தை சுவைத்துவிட்டு வந்திருந்தார் கண்ணகி.

"யாரும் உள்ளே வரக்கூடாது. இது காளி குடியிருக்கும் இடம்!" என்றனர் கண்ணகியும், கனகசுந்தரமும். உறவினர்கள் நேராகப் பொலிசில் போய் முறையிட்டனர்.

பொலிசார் வந்தனர். கதவைத் திறக்க மறுக்க, உடைத்துத் திறந்தனர்.

மற்றொரு பயங்கரம்.

மூன்று பிள்ளைகளும் கழுத்திலும், உடலிலும் இரத்தக் காயங்களோடு அழுதபடி காணப்பட்டனர். பாவிகள்! பெற்ற பிள்ளைகளையே கத்தியால் கீறி இரத்தம் குடித்திருக்கிறார்கள்.

பதறிப்போன பொலிசார் கணவன் மனைவியைக் கைது செய்ததுடன், பிள்ளைகள் மூவரையும் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

இதற்கிடையே சிறப்பு சோதனைக்காக கணவனையும் மனைவியையும் மருத்துவமனையில் சேர்த்தனர். எப்படியோ அவர்கள் இருவரும் அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள். பொலிசார் தேடிவருகிறார்கள். தமிழ்நாட்டையே உலுக்கியிருக்கிறது இச் சம்பவம்.

## அந்தப் பதினொருபேர்



இலண்டனில் உள்ள இந்துக்கோவிலுக்குச் சென்றார் டயானா. அவர் கோவிலுக்குச் சென்றது அல்ல செய்தி; அங்கே நடந்த சம்பவம்தான் சுவாரசியம்.

டயானாவைக் காண பக்தர்கள்கூட முண்டியடித்தபோது பதினொருபேர் மட்டும் கட்டாயமாகக் கண்களை மூடித் தியானத்தில் இருந்தனராம்.

யார் அந்தப் பதினொரு பேர்?

அத்தனைபேரும் துறவிகள். சிற்றின்பம் நாடாத மன உறுதியை டயானாவின் அழகு கெடுத்துவிடுமோ என்று நினைத்தோ என்னவோ, பதினொருபேரும் டயானா இடத்தைக் காலிசெய்யும்வரை கண்களைத் திறக்கவே இல்லையாம்.

விசுவாமித்திரரும் அப்படித்தான்; கண்களை இறுக மூடிக்கொண்டார். ஆனால் சலங்கை ஒலியும், குலுங்கும் நடனமும் அவர் கண்களை திறக்கச் செய்தன. நல்லவேளை டயானா சலங்கை கட்டவில்லை.

## வயது 63 இல்



அதிசயம்-ஆனால் உண்மை!

63 வயதில் குழந்தை பெற்று சாதனை படைத்த பெண்மணி அர்செலி சேக். அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

அவரிடம் பேட்டி எடுக்க பத்திரிகைகளுக்குள் கடும் போட்டா போட்டி. அவரோ எல்லோருக்கும் அல்வா கொடுத்துவிட்டு, 'நஷனல் என்குயிர்' என்ற பத்திரிகைக்கு மட்டும் பேட்டியோடு போசும் கொடுத்தார்.

விஷயம் என்ன? அம்மணிக்கு சில இலட்சங்களை கொடுத்து பேட்டி எடுத்துவிட்டார்கள். 65 வது வயதில் இன்னொரு குழந்தை பெறும் ஐடியாவும் இருக்கிறது என்றும் சொல்லி அசத்தியிருக்கிறார் அம்மணி.







படிப்பகம்

www.padippakam.com

# அரியது அரியது



வேலியில் போன ஓணானைப் பிடித்து மடியில் வைத்துக்கொள்ளலாமா? என்று பழமொழி இருக்கிறது. ஓணானை மடியில் வைத்திருந்தால் தாங்கவே முடியாத தொல்லை. அதன் உடம்பு சொர சொரவென்று இருக்கும். அது ஊர ஊர மடியில் வைத்துக்கொண்டவர் பாடு அம்பேல். அதனால்தான் தேவையற்ற காரியத்தில் மூக்கை நுழைத்து அவதிப்படுபவர்களுக்கு அப் பழமொழியை உதாரணமாகச் சொல்வார்கள்.

அதுசரி, இந்த அம்மணி ஓணானைப் பிடித்து தலையிலே வைத்திருக்கிறாரே. கில்லாடிதான். இது நம்நாட்டு ஓணான் மாதிரியானது அல்ல. அரியரக ஓணான். பிஜி நாட்டில்தான் இந்த ரக ஓணான்கள் உள்ளன. அதனால்தான் இதனைப் பத்திரமாக கொண்டுபோய் கண்ணே கண்ணு என்று செல்லம் பாராட்டி நியூசிலாந்து மிருகக் காட்சிச் சாலையில் வளர்க்கிறார்கள். இந்த அம்மணியும் ஓணான் ஊர்ந்து செய்யும் குறும்பை மெய்மறந்து ரசிக்கிறார். புதுமையாய் இருந்தால் ஓணானுக்கும் மரியாதைதான்.



## சின்னத் தம்பதிகள்

→ இந்தியாவிலே எத்தனையோ கோடி கோடியாகத் தம்பதிகள் இருந்தும், அவர்கள் யாருக்குமே கிடைக்காத பிரபலம் ஷமீக்-பீனா தம்பதிகளுக்கு கிடைத்திருக்கிறது.

காரணம் என்ன? இந்தியாவிலேயே மிக மிக சின்னத்தம்பதிகள் இவர்கள் தான். அதாகப்பட்டது உயரத்தில். உள்ளத்தில் அல்ல.

இந்தியாவில் கேரள மாநிலத்தில் உள்ள கொச்சியைச் சேர்ந்தவர் ஷமீக்- வயது 28. உயரம் மூன்று அடி. அதே ஊரைச் சேர்ந்த பீனாதான் ஷமீக்கின் மனம் கவர்ந்து மணம் செய்துகொண்ட இராஜகுமாரி. பீனாவுக்கு 21 வயது . உயரம் இரண்டரை அடி. பாருங்கள் ஜோடிப் பொருத்தம் கச்சிதமாக இருக்கிறதல்லவா?



## விஷம் உண்ட கண்டன்

↑ மனிதரில்தான் எத்தனை ரகத்தினர்? பாருங்கள். பாம்புக்கு என்னமாய் முத்தம் கொடுக்கிறார்! இன்னொரு விஷயம் சொன்னால் என்னாவீர்களோ தெரியாது, நாகப்பாம்பின் விஷத்தை குடித்து சாதனை படைத்துவருகிறார் இவர். பயங்கர விஷத்தை பால்போல ருசித்து குடிக்கிறார் இந்த மனிதர். இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் கூர்ஜ்மாவட்டத்திலுள்ள சோம்வார் பேட்டையைச் சேர்ந்தவர். பெயர்; ஹம்ஸா.

நஞ்சுண்ட கண்டன் பரமசிவன் என்பது இந்துக்களின் நம்பிக்கை. இந்த ஹம்ஸா அந்த பரமசிவனுக்கே அல்வா கொடுத்துவிடுவாரோ?!

## தகவல் பெட்டி



## சிங்கம் வளர்க்கும் ஆத்தா!

↑ ஆத்தா ஆடு வளத்தா, கோழி வளத்தா இறுதியில் ஒன்றும் மிஞ்சவில்லை. பெத்த பிள்ளை வெளிநாட்டிலே, வளத்த ஆடும் கோழியும் சண்டையிலே இடம்பெயர்ந்து ஓடும்போது தொலைந்தது தொலைந்ததுதான். இது வடக்கு-கிழக்கு நிலவரம். படத்தில் ஒரு ஆத்தா சிங்கம் வளர்க்கிறார் பாருங்கள். இதுவும் ஒரு போரால் சீரழிந்த நாட்டில் காணப்பட்ட காட்சிதான். உள் நாட்டுப் போரால் உருக்குலைந்த சோமாலியாவில் சிங்கம், புலிபோன்ற மிருகங்களும் அழிந்து வருகின்றனவாம். அதனால்தான் மிருகாபிமானத்துடன் இரண்டு சிங்கக் குட்டிகளைப் பிடித்துவந்து புட்டியில் பால் கொடுத்து வளர்க்கிறார் இந்த ஆத்தா.



## சொல்லாமலேயே தெரிந்துவிடும்!

↑ 'எங்களிடம் துருவித் துருவிக் கேட்கிறாரே, டாக்டர்தானே, என்ன நோய் என்று எங்களைக் கேட்டாகமலேயே கண்டுபிடிக்க வேண்டியது தானே' என்று சிலர் முணுமுணுப்பது உண்டு.

அப்படியானால் முணு முணுப்பாளர்களுக்கு ஒரு நல்ல சேதி. அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் புதிய கருவி ஒன்றை கண்டு பிடித்திருக்கிறார்கள். டாக்டர் முன்னால் நீங்கள் போய் அமர்ந்ததும் இந்தக் கருவியை வைத்து உங்களை பரிசோதிப்பார் டாக்டர். உங்களுக்குள்ள நோய் என்னவென்று டாண் டாண் என்று கண்டு பிடித்துச் சொல்லிவிடுமாம். இக் கருவியை கண்டுபிடித்தவர் டாக்டர் புருஸ் கோர்னல். படத்தில் இருப்பவர் அவர்தான். அவர் கையிலிருப்பதுதான் நோய் கண்டுபிடிப்புக் கருவி. அப்படியானால் இனி டாக்டர்கள் எதற்கு என்று கேட்பது அதிகப்பிரசங்கித்தனம். மருந்து டாக்டர்தானே தரவேண்டும்.



## கண்ணிவெடி அபாயம்!

← கண்ணிவெடியை தடைசெய்ய வேண்டும் என்று மனிதாபிமானிகள் தொண்டை வரள வரளக் கத்தியதுதான் மிச்சம். போரில் ஈடுபடும் யாரும் அதனைக் காதில் போட்டுக் கொள்வதில்லை. உயிரைத் தின்னும் ஆயுதங்களைவிட உடல் உறுப்புக்களை விழுங்கும் கண்ணிவெடி மோசமானது. படத்தில் டயானாவுக்கு இரு பக்கமும் சோகத்துடன் காட்சி தருபவர்கள் அங்கோலா நாட்டு படைவீரர்கள். கண்ணிவெடி அபாயத்தை கண்டித்து குரல் கொடுக்கும் டயானா அங்கோலா சென்றிருந்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

உலகில் கண்ணிவெடிகளால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களைக் கொண்ட நாடு அங்கோலா என்கிறார்கள். இங்கும் புள்ளிவிபரம் எடுத்தால் நம்நாடு இந்த விடயத்திலாவது முன்னணி வகிக்கும் சாத்தியங்கள் உண்டுதான். இங்கே படையினர் மட்டுமல்ல பொதுமக்களும் கண்ணிவெடிகளால் கால்களை இழந்து கொண்டிருக்கிறார்கள். யாழ் குடாநாடு இதில் முன்னணியில் நிற்கிறது. வெளியே கால்வைக்கவே மக்கள் அஞ்சுகிறார்கள்.

www.padippakam.com

## "அவர் பெரியப்பா மாதிரி"

நடிகை சங்கவி தெலுங்குப் படங்களில் நடித்துவருகிறார். தமிழில் ஒரு கால், தெலுங்கில் ஒரு கால். எங்கே அதிக சம்பாத்தியம் கிடைக்குமோ அங்கே இரண்டு கால்களையும் வைத்துவிடுவாராம். இன்னும் அதற்கான நேரம் வரவில்லையாம்.

நிற்க, தெலுங்கில் படஅதிபர் ஒருவருடன் சங்கவியை முடிச்சுப்போட்டு செய்திகள் கிளம்பியிருக்கின்றன. எங்கு சென்றாலும் அங்கு சர்ச்சைகிளப்புதல் சங்கவியின் ராசி.

புதிய கிசுகிசு பற்றி சங்கவி சொல்லியிருப்பவை யாவை? அறிய ஆவலா? இதோ கேளுங்கள்:

"இந்தக் கிசுகிசு என் காதுக்கும் வந்தது. என் வயது என்ன, அவர் வயது என்ன? என்னுடன் இணைத்துப் பேசப்படும் அந்தப் பட அதிபர் எனக்கு பெரியப்பா மாதிரி. அவரைப்போய் என்னுடன் இணைத்துப்பேச எப்படி மனம் வருகிறதோ தெரியவில்லையே!"

## தேவதையின் இரண்டாம் படம்

'உல்லாசம்' படம் தமிழகத்தில் திரைக்கு வந்துவிட்டது. அஜித்துடன் போட்டி போட்டு நடித்திருக்கிறார் விக்ரம். நடிப்பில் மட்டுமல்ல மகேஸ்வரியுடன் டூயட் பிடிப்புக்களிலும் வெளுத்துக்கட்டியிருக்கிறார். (ஆனாலும் மகேஸ்வரியின் தெரிவு அஜித்தான்) 'உல்லாசம்' படத்தின் பின்னர் விக்கிரம் புதிய படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார். அதில் ஒரு படம் 'சேது'. முக்கிய வேடத்தில் சிவகுமார் நடிக்கிறார்.

'தேவதை' படத்தில் நாசரின் கண்டுபிடிப்பான கீர்த்தி ரெட்டிதான் 'சேது' படத்திலும் கதாநாயகி. கீர்த்திரெட்டிக்கு இது இரண்டாவது படம். பாலுமகேந்திராவின் உதவியாளராக இருந்த பாலா இயக்குநராக அறிமுகமாகிறார். இசை: இளையராஜா.

## மறுபடியும் பிரபு–குஷ்பு?

இயக்குநர் பி.வாசு மேற்கொண்ட மகத்தான முயற்சி ஒன்று முளையிலேயே கருகிவிட்டது. பிரபுவையும் குஷ்புவையும் மறுபடி ஜோடியாக்கி நடிக்கவைக்க முடிவுசெய்தார் வாசு. குஷ்பு மறுக்கவில்லை. ஏற்கவும் இல்லை. பிரபுவிடம் முதலில் கேளுங்கள் என்றாராம். பிரபுவிடம் கேட்டார் வாசு. பிரபுவும் மகிழ்ச்சியோடு ஓ.கே. சொன்னாராம். ஆனால் சிவபூசைக்குள் கரடியாக பிரபு குடும்பத்தினர் தலையிட்டு காரியத்தைக் கெடுத்துவிட்டனர். இப்போது பிரபுவுக்கு பதிலாக ஜெயராமை குஷ்புவின் ஜோடியாக்கி இருக்கிறார் வாசு. படத்தின் பெயர் 'பத்தினி'.பி.வாசு இயக்கிய 'சின்னத்தம்பி' படம் முலம் தான் குஷ்பு- பிரபு நெருக்கம் வலுத்தது. மறுபடி துளிர் விடச் செய்யவும் முயன்று தோற்றுப் போனார் வாசு.

திரையுலக மறுபக்கம்

# முன்னணி நடிகரை மயக்கிய நடிகை
## காதல் தோல்வியும்–தற்கொலை முயற்சியும்

தமிழ் இலக்கியம் ஒன்றில் கணையாழியை தொலைத்துவிட்டு திண்டாடும் நாயகியின் பெயர் கொண்ட நடிகை அவர். கவர்ச்சி நடனங்கள் ஆடியிருக்கிறார். அன்றைய முன்னணி நடிகர்கள் பலருக்கு அவர்மீது கண். அதிலே வெற்றிகண்டார் அன்றைய மூவேந்தர் நடிகர்களில் ஒருவர். அந்த முன்னணி நடிகரின் சகோதரர் கண்டிப்பானவர். அவர் உயிரோடு இருந்தவரைக்கும் நடிகரின் வீட்டு நிர்வாகம் முதல் நடிகரின் சம்பளத்தை நிர்ணயிப்பதுவரை அவர்தான் பார்த்துக்கொண்டார்.

மூவேந்தர்களில் ஒருவரான அந்த நடிகருக்கும் நடிகைகளுக்கும் இடையேயுள்ள நெருக்கம் ஒரு கட்டத்திற்குமேல் செல்லாமல் பார்த்துக்கொள்வதும் சகோதரர்தான். கவர்ச்சி நடிகைக்கும் முன்னணி நடிகருக்கும் இடையே உள்ள தொடர்பு மெல்லமெல்ல வெளிப்படையாகிக் கொண்டிருந்தது. நடிகர் படப்பிடிப்பை முடித்துக்கொண்டு வீடு திரும்புவதற்கு பதிலாக நடிகையிடம் சென்றுவிடுவார். தான் நடிக்கும் படங்களிலும் நடிகைக்காக சிபாரிசு செய்தார் நடிகர். பெரும் வெற்றிபெற்ற வசந்தமான படத்திலும், நடிகருடன் நடனமாடினார் நடிகை. பெரும் 'குடிமகளான' நடிகை கொஞ்சம் கொஞ்சமாக நடிகர்மீது ஆதிக்கம் செய்யத் தொடங்குவதை கவனித்தார் சகோதரர். அதற்குமேல் பொறுக்க முடியாமல் அடியாட்களை அனுப்பி மிரட்டிய மிரட்டலில் நடிகை ஆடிப்போனார். ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுத்து நடிகையை நடிகரின் பாதையில் இருந்து விலகச் செய்தார் சகோதரர்.

### தற்கொலை முயற்சி

இன்றைய ஏழு முன்னணி நடிகர்களில் ஒருவர் அவர். நடிக்கவந்த புதிதில் ஸ்ரீ நடிகையின் இளமை ஊஞ்சலாடும் அழகில் ப்ரியமானார். இருவரும் நகமும் சதையும்போல பழகத் தொடங்கினார்கள். முன்னரே வேறு சில முன்னணி ஹீரோக்களுடன் நட்பாக இருந்தவர் ஸ்ரீ நடிகை. தனது வித்தையால் முன்னாள் மூவேந்தர் நடிகர்களில் ஒருவரையே கவர்ந்தவர் நடிகை. அந்த நடிகருடன் ஜோடியாகவும் நடித்தவர். அப்படி நடிக்கும்போதுதான் தன் வயதையும் மறந்து நடிகையிடம் சரளமானார் மூவேந்தர் நடிகர்களில் ஒருவர். அதன் பின்னர் மற்றொரு பிரபல நடிகருடனும் நட்பாக இருந்தவர் நடிகை. அதனால் புதியவரவான நடிகரை மயக்குவதில் அவருக்கு சிரமம் எதுவும் இருக்கவில்லை.

முன்னர் சில தேவைகளுக்காகவும், திருப்திகளுக்காகவுமே நடிகர்களுடன் நட்பாக இருந்த நடிகைக்கு புதிய நடிகருடன் மட்டும் நட்பு மட்டுமல்ல காதலும் ஏற்பட்டது. நடிகரும் அவரைக் கல்யாணம் செய்வதாக உறுதியளித்தார். அதனால் நடிகரின் விருப்பம்போல எல்லாம் நடந்துகொண்டார் நடிகை. ஒரு கட்டத்தில் நடிகருக்கு திகட்டி விட்டது. புதிய நடிகைகள் பக்கம் தாவத் தொடங்கினார். நடிகையால் தன் காதல் தோல்வியை தாங்க முடியவில்லை. தற்கொலை முயற்சியில் இறங்கி தூக்கமாத்திரைகளை விழுங்கினார். உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டதால் உயிர் பிழைத்தார். நடிகர் கவலையேபடவில்லை. வேறொரு நடிகையை மணந்து கொண்டார். இப்போதும் அந்த விவகாரங்களில் 'பிஸ்தா'வாகவே இருக்கிறார் நடிகர். ஸ்ரீ நடிகையும் பின்னர் வேறொருவரை மணந்து கொண்டார்.

### உடற்பயிற்சி நடிகை

கோவலனை மயக்கிய நாயகியின் பெயர் கொண்ட நடிகை அவர். இன்றுவரை முன்னணியில் உள்ள மூன்றெழுத்தால் சுருக்கமாக அழைக்கப்படும் சிறந்த நடிகரும் நடிகையும் நல்ல நண்பர்கள். உடலை கெட்டியாக வைத்திருப்பதில் நடிகருக்குள்ள ஆர்வத்தையும், நடிகரின் நடனத் திறமையையும் கண்டு வியந்தார் நடிகை. இருவரும் இணைந்து பல படங்களில் நடித்தனர். அப்போதெல்லாம் நடிகரின் உடல் வலிமையைக் கண்டு வியப்பின் உச்சிக்கே போனார் நடிகை.

நடிகையின் ஆர்வத்தைக் கண்டு மகிழ்ந்த நடிகரும் நடிகையின் விருப்பத்தை மதித்து சில உடற்பயிற்சிகளை சொல்லிக்கொடுக்க சம்மதித்தார். நடனப்பயிற்சியும் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார் நடிகை. ஒருநாள் பயிற்சியோடு பயிற்சியாக நடிகரை கட்டியணைத்து அவர் கட்டுப்பாட்டையே உடைத்துவிட்டார் நடிகை. இந்த விடயங்களில் நடிகரும் சுதந்திர சிந்தனை உடையவர் என்பதால் அவர்களது நட்பு தொடர்ந்தது. இந்த விடயம் நடிகரின் மனைவிக்கு தெரியவந்தது. அதனால் மனைவி நடிகரைவிட்டு விலகத் தொடங்கினார். பிரபல எழுத்தாளர் ஒருவர் தலையிட்டும்கூட நடிகரின் சுதந்திரமான கருத்துக்களோடு மனைவியால் ஒத்துப் போக முடியவில்லை. எப்படியோ மேலும் சில வருடங்கள் தொடர்ந்த குடும்ப வாழ்க்கை பின்னர் விவாகரத்தில் முடிந்தது. பின்னர் நடிகர் வேறு ஒருவரை மணந்து கொண்டார்.



ராம்ஜி–சோனியா
படம்: வீரபாண்டிக் கோட்டையிலே

## அப்பா பெயரைக் காப்பாற்றுவாரா?

சிவகுமாரின் வாரிசு சூர்யாவுக்கு திருஷ்டிபட்டால் ஆச்சரியமில்லை. அந்தளவுக்கு தமிழக சினிமா இதழ்களில் பாராட்டுக்கள். பாராட்டுக்கள். பாராட்டுக்கள்.

அப்பா சிவகுமார் நடித்து சம்பாதித்ததில் பொருள் சேர்த்ததைவிட நல்லபெயர் நிறைய சேர்த்து வைத்திருக்கிறார். அதுதான் சூர்யாவுக்கு கைகொடுக்கிறது. இதனால் ஒரு சங்கடமும் இருக்கிறது. துருதுரு வென்றிருக்கும் சூர்யா வயதுக்கோளாறு காரணமாக குறுகுறுவென்றிருக்கும் தன் ஜோடிகளில் விழுந்துவிட்டால் அம்போ. சிவகுமாரின் பெயரும் சேர்ந்துகெடும். அதனால் அப்பா பெயரைக்காக்கும் மாபெரும் பொறுப்பை தோளில் சுமந்தபடிதான் குறுகுறு ஜோடிகளை சமாளித்தாகவேண்டும்.

'நேருக்கு நேர்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் சூர்யாவுக்கு பல புதிய படவாய்ப்புக்கள் வந்து கதவைத்தட்டின. சூர்யா ஒத்துக் கொள்ளவில்லை. ஒரே ஒரு புதிய படத்தை மட்டுமே தெரிவு செய்துள்ளார். படத்தின் பெயர் 'காதலே நிம்மதி'. 'காதல் கோட்டை', 'காலமெல்லாம் காதல் வாழ்க' படங்களை தயாரித்த சிவசக்தி பாண்டியன் தயாரிக்கும் படம் இது.

'காதலே நிம்மதி'யில் இரசிகர்களின் இதயத்தை திருடக்கூடிய புதுமுகம் ஒருவரை அறிமுகம் செய்யப்போகிறார்கள். மணிவண்ணன், நாசர், பாண்டு, விவேக், கீதா, தலைவாசல் விஜய், வடிவுக்கரசி ஆகியோரும் நடிக்கவுள்ளனர். திரைக்கதை, இயக்கம்: இந்திரன். இசை: தேவா. ஒளிப்பதிவு: தங்கர்பச்சான்.

## மினி சினி

- ஆர்.வி. உதயகுமாரின் உதவியாளர் செய்யாறு ரவி இயக்கத்தில் 'தர்மசீலன்' படத்தில் நடித்த பிரபு, தற்போது ஆர்.வி.உதயகுமாரின் மற்றொரு உதவியாளர் ரமணி இயக்கும் படமொன்றில் ஹீரோவாக நடிக்கவுள்ளார்.
- 'காதல் பள்ளி' படத்திற்குப் பின்னர் ஆர். தனபால் தயாரிக்க, பவித்ரன் இயக்கும் படத்தில் நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்தில் நெப்போலியனுக்கு ஜோடியாக ரோஜா நடிக்கிறார்.
- பிரியதர்ஷன் இயக்கத்தில் மோகன்லால் கதாநாயகனாக நடிக்கும் 'சந்திரலேகா' என்ற மலையாளப்படத்தில் இந்தி நடிகர் அனில் கபூர் கௌரவ வேடமொன்றில் நடிக்கிறார்.
- பாரதிராஜா தயாரிப்பில் மனோஜ்குமார் இயக்கும் 'குருபார்வை' படத்தில் பிரகாஷ்ராஜும் குஷ்புவும் முதன் முறையாக ஜோடி சேர்ந்து நடிக்கிறார்கள். இதில் குஷ்பு பொலிஸ் அதிகாரி வேடத்தில் நடிக்கிறார்.
- பிரபுதேவா-அப்பாஸ் நடிக்கும் 'வி.ஐ.பி' படத்தை இயக்கி வரும் எஸ்.டி. சபாபதி, அடுத்து நாகர்ஜுன் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார். இது தமிழ்-தெலுங்கு ஆகிய இருமொழிகளில் உருவாகவுள்ளது.
- 'உள்ளத்தை அள்ளித்தா' தெலுங்குப் பதிப்பான 'வீடு எவிடன்ட் பாபு' படத்திற்கும் சிற்பிதான் இசையமைத்தார். பாடல்கள் சுப்பர் ஹிட்டாகி விட, சிற்பிக்கு தெலுங்கில் 5 படங்கள் ஒப்பந்தமாகியுள்ளன.
- 'நேசம்' படத்தை இயக்கித் தயாரித்த கே. சுபாஷ், தனது அடுத்த படமான 'காதலிசம்' படத்தையும் அஜித்குமாரைக் கதாநாயகனாக வைத்தே பூஜை போட்டார். 'நேசம்' படுதோல்வியடைந்ததால் 'காதலிசம்' படத்தை நிறுத்திவிட்டார் சுபாஷ்.
- 'அவ்வை சண்முகி' படத்தில் ஒரு குழந்தைக்குத் தாயாக நடித்துள்ள மீனா, இப்போது விஜயகாந்த்துடன் ஜோடி சேர்ந்து நடித்து வரும் 'உளவுத்துறை' படத்திலும் ஒரு குழந்தைக்குத் தாயாக நடித்து வருகிறார்.
- 'உதிரிப்பூக்கள்', 'நிறம்மாறாத பூக்கள்', 'தனிமரம்' போன்ற படங்களின் மூலம் பிரபலமான கதாநாயக நடிகர் விஜயன், விரைவில் தமிழ்ப்படமொன்றை இயக்கி, முக்கிய வேடத்தில் நடிக்கவுள்ளார்.
- விஜயசாந்தி தெலுங்கில் நடித்த 'ஒசேராமுலம்மா' (தமிழில் 'அடிமைப் பெண்') என்ற படத்தை இயக்கிய தாசரி நாராயணராவ், அடுத்து இயக்கும் 'கிரிக் விருடு' என்ற படத்தை விஜயசாந்தியை வைத்து இயக்குகிறார்.



நக்மா
படம்: ஞானகிராமன்

## நக்மா தயக்கம்

'பிஸ்தா' நன்றாக ஓடுவத[...] கார்த்திக்–நக்மா ஜோடிக்கு [...] கூடியிருக்கிறது. அதே ஜோடியை வைத்து படமெடுக்க பணக்கட்[...] படையெடுத் தார்கள் தயாரிப்பாளர்கள். நக்மா தயங்குகிறா[...] 'பிஸ்தா' படத்தில் நக்மா- கார்த்திக் நெருக்கத்தை பார்[...] முகம் சுளித்ததாகவும், கார்த்திக் பற்றி நன்கு அறிந்தவர் என்பதால் நக்மாமீதும் சிறிது சந்தேகம் கொள்வதா[...] கோடம்பாக்கம் வட்டாரம் அரசல் புரசலாகப் பேசு[...] கார்த்திக்கின்மீது நக்மாவுக்கு கோபம் எது[...] இல்லையானாலும், குமாரர் விலகிவிடுவாரோ என்று பயப்படுகிறார். அதனால் தான் கார்த்திக்கை தவிர்க்கிறாராம்.



"சேலைக்கு வேலைதர
மறந்தது மேனி
சிட்டுப்போல் கட்டுவிட்டு
பறக்கின்ற தேனீ"

## சிம்ரான் ஒரு சிம்பன்சி

சிம்ரானை அப்பாஸ் சிம்பன்ஸி என்றுதான் செல்லமாக அழைப்பார். இது பிரபு தேவாவுக்கும் தெரிந்துபோனதால் அவரும் சிம்பன்ஸி என்று அழைத்தாராம். உடனே சிம்ரான் செல்லக் கோபத்துடன்; அப்பாஸ் மட்டு[...] அப்படி அழைக்கலாம். நீங்கள் வேண்டுமானால் வேறு பெயரில் கூப்பிட்டுக் கொள்ளுங்கள் என்று விட்டார். சிம்ர[...] எப்படி செல்லமாக அழைப்பது என்று மூளையைக் க[...] கொண்டிருக்கிறார் பிரபுதேவா.

அப்பாசுடன் நெருக்கமாகப் பேசப்பட்டாலும் ஏனைய ஹீரோ[...] மற்றும் இயக்குநர்களோடும் தாராளமாக பழகுகிறார் சிம்[...] அவர்களும் தொட்டு தொட்டு பேசுகிறார்கள். தொட்டுப் பேசுவது மொடலிங் உலகில் சர்வசாதாரணம் என்றுவேறு சொல்லிவிட்டார் சிம் ரான். சந்தர்ப்பத்தை யார்தான் விடுவார்கள் சொல்லுங்கள்.

முகப்[...]
மீனா
படம்: பாசமுள்ள பாண்டி[...]

ரகுமான்
படம்: போர்முழக்க[...]



படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசிட்



விஜய்-சிம்ரான்
படம்: ஒன்ஸ்மோர்

## போனவன் போனானடி தேவயாணி சந்தித்த அதிர்ச்சி!

'காதல் கோட்டை' படம் மூலம் புகழேணியில் ஏறியிருப்பவர் தேவயாணி. தற்போது ஒரு மகா பிரச்சனையில் சிக்கி இருக்கிறார்.

தேவயாணியின் மனேஜராக இருந்தவர் ஒரு நடுத்தரவயதுக்காரர். தேவயாணியும் அவரும் ஒருவரை ஒருவர் விரும்பியிருக்கிறார்கள். இந்த விடயம் தேவயாணியின் அம்மாவுக்கு தெரியாதாம். வஞ்சகமில்லாத பழக்கம் என்று நினைத்திருந்தாராம்.

சமீபத்தில்தான் அந்த அதிர்ச்சியான விவகாரம் தெரியவந்ததாம். தேவயாணி தனது மனேஜரிடம் பறிகொடுத்தது மனதை மட்டுமல்லவாம். விவகாரம் பெரிதாகிக் கொண்டிருந்தது. உடனடியாக டாக்டரிடம் தேவயாணியை அழைத்துப்போய் உரிய பரிகாரம் செய்து கொண்டார் தாய்க்குலம்.

"சண்டாளன் என் பெண்ணின் எதிர்காலத்தையே கெடுத்துவிட்டானே" என்று புலம்பிக் கொண்டு தாய்க்குலம் மகளுடன் வீடுதிரும்பியபோது மற்றொரு அதிர்ச்சி. மனேஜர் கம்பிநீட்டி விட்டார். போனவர் பெருந்தொகையுடன்தான் போயிருக்கிறாராம்.

தயாரிப்பாளர்கள் நிம்மதிப் பெருமூச்சுவிடுகிறார்கள். தேவயாணி வேறு முடிவு எடுத்திருந்தால் அவர்கள் தானே தங்கள் தலையில் துண்டு போட்டிருக்க வேண்டும்.

## மறுபடி ஆசை!

சிவாஜி சரோஜாதேவி இருவரும் 'ஒன்ஸ்மோர்' படத்தில் இணைந்து நடித்துள்ளனர். இதனை அடுத்து கனகாவின் அம்மா தேவிகாவும் சிவாஜியுடன் நடிக்க விருப்பம் தெரிவித்துள்ளாராம். வேறு முன்னாள் 'பெரிசுகளும்' "அண்ணலுடன் நடிக்க எங்களுக்கும்தான் ஆசை" என்று சொல்லியிருக்கிறார்கள். கேட்கத்தான் ஆளில்லை.

## வேட்டிய மடிச்சுக்கட்டு

பாக்யராஜ் தாக்குப்பிடிப்பாரா என்பதை நிரூபிக்கத்தான் 'வேட்டிய மடிச்சுக்கட்டு'. தொடராக ஏற்பட்ட தோல்விகளால் சற்றே இடிந்துபோனாலும் நம்பிக்கை தளரவில்லை. தமிழ், இந்தி ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் படம் தயாராகிறது.

படப்பிடிப்பில் ஒரு சிறு தகராறு. பாடல் காட்சி ஒன்றில் நக்மாவின் நெஞ்சின்மீது பாக்யராஜ் தன் கன்னத்தை சாத்துவதுபோல காட்சி. நக்மா முதலில் மறுத்துவிட்டாராம். பின்னர் காட்சிப் பொருத்தம் பற்றி பாக்யராஜ் எடுத்து விளக்கிய பின்னர்தான் மார்பில் சாய அனுமதித்தாராம் நக்மா.

"மக்களின் குறிப்பிட்ட பிரிவினரை மட்டும் மனதில் கொள்ளாமல், எல்லாவகையான மக்களையும் மனதில் வைத்தே படம் பண்ணுகிறேன். படத்தின் தலைப்பை வைத்து செக்ஸியாக அர்த்தம் செய்யாதீர்கள். வேட்டிய மடிச்சுக்கட்டு என்றால் போராடு என்று அர்த்தம்." என்கிறார் பாக்யராஜ். படத்தில் பிரதான பாத்திரத்தில் நடிப்பவர் பாக்யராஜின் வாரிசு. பெயர் சந்தனு. வயது 10.

## மந்த்ராவின் கோபம்

அருண்குமார் மறுபடி மந்த்ராவுடன் ராசியாக உதவியிருப்பது 'கங்கா கவுரி.' இரண்டு கதாநாயகிகள். ஒருவர் சங்கீதா, இன்னொருவர் மந்த்ரா.

தற்போது பிரபுவின் பிரியத்துக்குரியவராகவும் பெயர் எடுத்துள்ளார் மந்த்ரா. ஆனாலும் அருண்குமாருடனும் முன்புபோல பாகுபாடு இல்லாமல் பழகுகிறாராம்.

மந்த்ராவின் சமீபத்திய கோபம் பத்திரிகையாளர்கள்மீதுதான். "எனக்கு பிரபுவுடன் லவ்வாம். உடலில் சில பகுதிகளை எடுப்பாக்க ஊசி போடுகிறேனாம். இரவு விடுதியில் நடனம் ஆடினேனாம், இதெல்லாம் கடைந்தெடுத்த பொய்கள்." என்கிறார். அப்படியா?



அருண்குமார்-சங்கீதா
படம்: கங்காகவுரி

## சொர்ணமுகி

பரதநாட்டியம் ஆடும் பெண்ணை இரண்டுபேர் துரத்தித் துரத்திக் காதலிக்கிறார்கள். அவள் யாரைக் காதலிக்கிறாள்? என்பதுதான் 'சொர்ணமுகி' படத்தின் கதை

சொர்ணமுகியாக நடிப்பவர் தேவயாணி. அவரை காதலிக்கும் இரண்டு ஹீரோக்கள் ஒருவர் பார்த்திபன். இன்னொருவர் பிரகாஷ்ராஜ்.

'தொட்டாச்சிணுங்கி' படத்தை இயக்கிய கே.எஸ். அதியமான் இயக்கும் படம் இது.

## மூன்றாவது படம்

தமிழில் 'புதையல்', 'மின்சாரக் கனவு' இரண்டும் நன்கு ஓடியதால் அரவிந்தசாமிக்கு மார்க்கெட் ஓஹோ என்றிருக்கிறது. அரவிந்தசாமியை தமிழ்ப்பட தயாரிப்பாளர்கள் வலைபோட்டுத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவரோ காதும் காதும் வைத்ததுமாதிரி 'ராஜா கோ ராணி சே பியார் கோகயா' என்னும் இந்திப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இந்தப்படத்தை முடித்துவிட்டுத்தான் அடுத்த தமிழ்ப் படமாம். அரவிந்தசாமி நடிக்கும் மூன்றாவது இந்திப் படம் இது. அவருக்கு ஜோடி மனிஷா கொய்ராலா.

## நன்றிக் கடன்

பாசமுள்ள பாண்டியரே படத்தில் மீனா படு கவர்ச்சியாக நடித்திருக்கிறார். ராஜ்கிரண்தான் மீனாவை நடிகையாக அறிமுகம் செய்தவர். அதனால்தான் அப்படி நடித்து அவர் விருப்பத்தை பூர்த்தி செய்தேன் என்றுள்ளார் மீனா.

ராஜ்கிரணுக்கு இதைவிட பலவிதங்களில் தன் நன்றிக்கடனை தெரிவித்திருக்கிறார் மீனா. ஆரம்பத்தில் ராஜ்கிரணின் பிடியில் இருந்த மீனா பின்னர் பெரிய ஹீரோக்களுடன் நடித்து பிரபலமானதால் ராஜ்கிரணைவிட்டு விலகினார். பெரிய ஹீரோக்கள் சிலரின் பின்பலம் இருந்ததால் மீனாவை ராஜ்கிரண் தொந்தரவு செய்யவில்லை.

இப்போது மீனாவின் கையில் படங்கள் குறைவு. ரம்பா, நக்மா என்று ஏகப்பட்ட போட்டி. அதனால்தான் தன் முன்னாள் குருவை நாடிச் சென்றதுடன், மீண்டும் அவருக்கு நன்றிக் கடன் செலுத்திக் கொண்டிருக்கிறாராம்.

## மறுபடி ஒரு ரவுண்ட்

துணிச்சலான நடிகை என்று பெயர் எடுத்தும் பயனில்லாமல் தெலுங்குப் பக்கம் போனவர் ஆம்னி. அவரை மறுபடி தமிழ்ப்பட உலகில் தட்டிக்கொடுத்து ஊக்குவிப்பவர் ராமராஜன். 'தெம்மாங்கு பாட்டுக்காரன்' மூலம் மீண்டும் ஒரு ரவுண்ட் வரத் துடிக்கிறார் ஆம்னி. அதனால் ராமராஜன் கற்றுக்கொடுப்பதை தட்டாமல் கற்றுக் கொள்கிறாராம்!



மம்முட்டி-மனோரமா
படம்: மறுமலர்ச்சி



ராமராஜன்-ஆம்னி
படம்: தெம்மாங்குப் பாட்டுக்காரன்

## சின்னப் படம்

பெரிய நடிகர்கள், பெரிய பட்ஜெட் என்று எந்த பந்தாவும் இல்லாமலேயே படம் எடுத்து வசூல் குவிக்க முடியுமா? முடியும் என்று நிரூபித்திருக்கிறது 'லவ்டுரு டே'.

விஜய்-சுவலட்சுமி நடித்த 'லவ்டுரு டே' தமிழ்நாட்டில் சூப்பர் ஹிட்டாக ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படத்தை தயாரித்த சூப்பர் குட் பிலிம்ஸ் ஏற்கனவே தயாரித்த சூப்பர் ஹிட் படம் 'பூவே உனக்காக' விஜய் நடித்த சிக்கனமான படம். அதுவும் சூப்பர் ஹிட்தான்.

## பிரபுவின் சவாரி

நடிகர் பிரபு இப்போது ஆளே மாறிவிட்டார். அதாகப்பட்டது சிக்கென்று மெலிந்துவிட்டார். எல்லோருமே அவர் உடல் எக்கச் சக்கமாக பெருத்துவருவதாக கேலி செய்தார்களாம். அதனால் குதிரைச் சவாரி செய்யத் தொடங்கினார்.

ஒரே குலுக்கல்தான். குலுங்கிக் குலுங்கி உடம்பு மெலிந்துவிட்டதாம். தினமும் மூன்று மணிநேரம் குதிரைச் சவாரி செய்கிறாராம் பிரபு. தன்னைவிட தன் சுமை தாங்காமல் குதிரை மெலிந்துவிட்டது என்கிறார் பிரபு.

## ஏமாற்றம்

முன்னாள் கனவுக்கன்னியான ஸ்ரீப்பிரியாவுக்கு கல்யாணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது. அது பெண் குழந்தை. ஒரு ஆண்குழந்தைக்கு ஆசைப்பட்டார் ஸ்ரீப்ரியா. இப்போது கர்ப்பமாக இருக்கிறார். ஓடோடிப் போய் ஸ்கேன் எடுத்துப் பார்த்தாராம். ஏமாந்துபோனாராம். காரணம் பிறக்கப்போவதும் பெண் குழந்தைதானாம்



படிப்பகம்

www.padippakam.com

# படித்து- குறித்து- பயன்படுத்த
## சின்னச் சின்ன யோசனைகள்

* ஒரு பெண் கர்ப்பமாவதற்கு முன், கடைசி மாதவிலக்கு எந்தத் திகதியில் தொடங்கியதோ அந்த நாளுடன் 7 நாட்களைக் கூட்டி பிறகு அதிலிருந்து 3 மாதங்களைப் பின் தள்ளிப் பார்த்தால்-அதுதான் பிரசவ நாள் ஆகும். 4 அல்லது 5 நாட்கள் வித்தியாசப்படலாம்.
* "ஆ.... உடம்பு வலிக்கிறதே...?" என்று அவஸ்தைப் படுகிறீர்களா? புளிய இலைகளை வெந்நீரில் போட்டு கொதித்ததும் இறக்கி ஆறவிட்டுக் குளியல் போடுங்கள். மேல்-கால் வலி போய்விடும்.
* நல்லெண்ணெயில் வேப்பம் பூ போட்டு, தலையில் தேய்த்துக் குளித்தால் பொடுகு மறையும்.
* நக பொலிஷ் உடனே உலர வேண்டுமா? விரல்களைத் தண்ணீருக்குள் அமிழ்த்தி எடுங்கள்.
* குழந்தைகளின் சட்டைப் பொத்தான் தையல்களில் ஒரு துளி நக பொலிஷை இட்டு விடுங்கள். பொத்தான் எளிதில் அறுந்து போகாது.
* துணிகளைத் துவைப்பதற்காக ஊற வைக்கும்போது 4 மணிநேரத்திற்கு மேல் ஊறவைக்கக்கூடாது. அப்படி ஊறவைத்தால் அழுக்குப்போகாது.
* பட்டுத்துணிகளுக்கு இஸ்திரி போடும் போது தண்ணீர் தெளிக்கக்கூடாது.
* துணிகளில் எந்தவிதக் கறைபட்டாலும் வெள்ளைத் துணியை மண்ணெண்ணெயில் தொட்டு வேகமாகத் தேய்த்தால் போதும்.
* துணி பீரோவில் தாழம்பூவைப் போட்டு வைத்தால் பூச்சிகள் வராது.
* தூளுக்காக மிளகாய் வறுக்கும் போது ஒரு பிடி நிலக்கடலை சேர்த்தால் சுவையாக இருக்கும்.
* சாம்பாருக்குத் தக்காளியை மிக்ஸியில் அரைத்துப் போட்டால் நிறமும், மணமும் கம...கம...
* தேங்காய் உடைக்கும்போது (இள)நீரை வீணாக்காமல் ரசத்தோடு சேர்த்துப் பாருங்கள். சுவை கூடும்.
* 4 பூண்டுப்பல், ஒரு தேக்கரண்டி பொட்டுக் கடலை, ஒரு தேக்கரண்டி வறுத்த கடலை, ஒரு தேக்கரண்டி மிளகாய்த்தூள், சிறிது உப்பு சேர்த்து மிக்ஸியில் பொடி செய்தால் பூண்டுப்பொடி ரெடி.
* பருப்பு உருண்டைக்குழம்பு செய்யும் போது பொடிதாக நறுக்கிய கீரையையும் சேர்த்துப் பிடித்துப் போட்டுப் பாருங்கள். 'ஆஹா' என்பீர்கள்.
* உருளைக்கிழங்கைப் பொரிப்பதற்கு முன் சிறிது பயத்தம் மாவை உருளைக்கிழங்கு மீது தூவிவிட்டுப் பொரித்தால், பொரியல் மொறமொறப் பாகி விடும்.
* கெட்டித்தயிர் இரத்தக் குழாய்களைச் சுத்தமாக்கும் தன்மை படைத்தது. எனவே உணவில் கட்டாயம் சேர்த்துக் கொள்ளுங்கள்.
* மீன் வாங்கும்போது அதன் கண்கள் பளிச் என்று இருக்கிறதா? எனப் பாருங்கள். அதுதான் புத்தம் புதுச் சரக்கு.
* ஒரு கொத்து கறிவேப்பிலையை உருவி வெந்நீரில் போட்டு அந்தத் தண்ணீரை வீட்டில் தெளித்தால் ஈ, எறும்பு வராது.
* ஆட்டிறைச்சி சமைத்த பாத்திரத்தைப் புளி தடவிப் பின்னர் கிளீனிங் பவுடர் போட்டுத் தேய்த்தால் வாடை இருக்காது.
* குளிர்சாதனப் பெட்டிக்குள் எலுமிச்சப் பழத்தோலைப் போட்டு வைத்தால் வேண்டாத வாடை வராது.
* கடுகை அரைத்துத் தேய்த்துக் கழுவினால் வெள்ளிப் பாத்திரங்கள் பளிச் ஆகும்.
* பஸ்ஸில் பயணம் செய்யும் போது வாந்தி எடுப்பவர்கள், காதில் பஞ்சை வைத்துக் கொண்டு பயணம் செய்தால் வாந்தி வராது.
* காய்கறிகளை இரும்புப்பாத்திரங்களில் சமைத்தால் உடலுக்கு மிக நல்லது.
* பழைய ஷேவிங் பிரஷைத் தூர எறியாமல் ரீ.வி., ஃபான், கதவு, ஜன்னல்களைத் துடைக்கப் பயன்படுத்தலாம்.
* முகச்சுருக்கம் ஏற்படுகிறதா? தோடம்பழத் தோலைக் காயவைத்து, தூளாக்கி, கடலை மாவு சேர்த்து முகத்தில் பூசிக் கழுவி வர முகச்சுருக்கம் மறையும்.
* தலைமுடி சுருட்டையாக உள்ளவர்கள் முதல்நாள் இரவு வெந்தயத்தை ஊறப் போட்டு மறுநாள் காலையில் அதை அரைத்து தலைக்குத் தேய்த்துக் குளித்துவர முடி சுருள்வது மெல்ல விலகும்.
* தினசரி காலை இளம் சூடான வெந்நீரில் தேன் கலந்து பருகினால் உடல் பருமன் குறையத் தொடங்கும்.
* தங்க நகைகள் அணிவதால் உடல் சூடு தணிகிறது. நரம்புக்கு ஊக்கம் தருகின்றது. ஞாபகசக்தி பெருகுகின்றது, என்கிறார்கள்.



* தங்க நகைகளை வெந்நீரில் போடவும் கூடாது, பிரஷால் சுத்தப்படுத்தவும் கூடாது.
* குழந்தைகளுக்கு இரவில் 2 பேரீச்சம்பழமும், 1/2 டம்ளர் பாலும் கொடுத்து வந்தால் மனோபலமும், மூளையும் பலப்படும்.
* கொட்டைப் பாக்கை சந்தனம் போல நீர்விட்டு அரைத்து, 1/2 தேக்கரண்டி இழைத்து சிறிது பாலில் கலந்து குழந்தைகளுக்கு வெறும் வயிற்றில் கொடுத்தால் குடற்பூச்சிகள் வெளியே வந்துவிடும்.
* கர்ப்ப காலத்தில் பெண்கள் உப்பைக் குறைக்க வேண்டும். உப்பை அதிகமாகச் சேர்த்தால் உடலில் நீர் சேரும்.

# நீங்களும் அழலாம்!



சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! பல மேலை நாட்டு ஆய்வாளர்கள் அழும்படி அறிவுறுத்துகிறார்கள். மனப் பாரத்தை இறக்கி வைக்க அழுகையைப் போல் வேறொன்றுமில்லை என்று அடித்துக் கூறுகிறார்கள்.

ஏதாவது ஒரு துன்பம் நம்மை ஆட்கொள்ளும்போது இயல்பாகவே நாம் துக்கப் படுகிறோம். கண்கள் கலங்குகின்றன. ஆனால் பிறர் பார்த்து நகைப்பார்களோ என்ற பயத்தினால் அத்துக்கத்தை வெளிக்காட்டாமல் மூடி மறைத்து, போலியாக நடிக்கிறோம். இதனால் மனதில் அழுத்தம் அதிகரித்து இருதயம் தாக்கப்படுகிறது.

இயல்பாகவே ஏற்படும் துக்கத்தை மறைக்க முயலும்போது இதயம் மட்டுமல்ல, உடம்பின் பல பாகங்களும் பாதிப்படைகின்றன! ஆகவே உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே பாதிக்கும் துக்கத்தை எப்படியோ வெளியேற்றிவிடவேண்டும்.

இதற்கு ஒரே வழி அழுவதுதான். வாய்விட்டு, கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகப் பெருக்கெடுத்தோட– முழுப்பாரமும் தீரும்வரை அழுது தீர்க்கவேண்டியது தான்.

துயர சம்பவங்கள் நம் இல்லத்தைத் தாக்கும்போது நம்மவர்கள் வாய்விட்டு, மாரடித்து அழுவதைப் பார்க்கிறோம். இதனால் அடுத்தடுத்த நாட்களில் அவர்கள் புத்துணர்வுடன் நடமாடுவதைக் காண்கிறோம். மாரடித்து அழும்போது இரத்த நாளங்களில் மிதமிஞ்சிய துக்கத்தின் காரணமாகத் தேங்கி நிற்கும் இரத்தம் தடையின்றி ஓடத் தொடங்கிவிடும்.

இன்றைய நாகரிக உலகில் அழுவது அநாகரிகமாகப்படுகிறது. ஆனால் மேலை நாட்டு ஆய்வாளர்கள், அழுகையே சிறந்த ஔடதம் என்று சிபாரிசு செய்கின்றனர்.

பண்டைய கிரேக்க நாட்டு நாடக வல்லுநர்கள்-பார்வையாளர்கள் வாய்விட்டுக் கதறி அழவேண்டும் என்பதற்காகவே துன்பகரமான நாடகங்களை எழுதி அரங்கேற்றுவார்களாம்.

## சிரிகமபதநி

மன அழுத்தத்தை நீக்கும் மற்றுமொரு மா மருந்து சிரிப்பு. வாய்விட்டுச்சிரிப்பது மட்டுமல்ல, உங்களைத் துரத்தும் பிரச்சனைகளைப் பார்த்தும் சிரிப்பதே சிறந்த பலன் தருகிறது. சிரிக்கும்போது பழு நீங்கி உங்கள் மனம் மென்மை அடைகிறது.



சிரிப்பு சிறந்ததோர் ஔடதமாகக் கருதப் படுவதால் சிரிப்புக் கழகங்கள் பல இடங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன. இக்கழகங்களின் உறுப்பினர்கள் காலத்துக்குக்காலம் ஏதாவதோரிடத்தில் அமர்ந்து பலவிதமான நகைச்சுவைத் துணுக்குகளைக் கூறிச் சிரிப்பார்களாம்.

சிரிக்கும்போது கரியமிலவாயு அதிகமாக வெளியேற்றப்படுகிறது– பிராணவாயு உட் செல்லுகிறது. பிராணவாயு இரத்தத்தைச் சுத்தப்படுத்துவதுடன் மட்டுமில்லாமல் இரத்த ஓட்டத்தையும் துரிதமடைய வைக்கிறது. சுவாசமும் சுலபமாகிறது. நன்றாகச் சிரிக்கும் ஒருவரிடம் மன அழுத்தம் நெருங்காது. வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாகவே இருப்பார்.

இருப்பினும் பிறரைச் சிரிப்பூட்டும் பணியில் உள்ளவர்கள் தங்கள் வாழ்வில் சிரிப்பது குறைவு என்றுதான்கூறப்படுகிறது. இதற்கு ஒரு கதையும் உண்டு:

ஒருவர் சோகமே உருவாக ஒரு மருத்துவரிடம் போனார். தன் வாழ்க்கையில் எப்போதும் வேதனையும் சோதனையும் தான் தொடர்வதாகவும் இதனால் தூங்குவதே இல்லை என்றும் முறையிட்டார்.

அந்நோயாளியைப் பரிசோதித்த மருத்துவர், "நீர் நன்றாகச் சிரிக்க வேண்டும். சிரிப்பு வராவிட்டால் பிரபல சிரிப்பு நடிகர் சார்ளி சப்ளின் நடித்த திரைப்படங்களைப் போய்ப் பார்! தாராளமாகச் சிரிக்கலாம்," என்றார்.

நோயாளி என்ன சொன்னார் தெரியுமா?

"நான் தான் ஐயா அந்த சார்ளி சப்ளின்!"

# வர்ணமும் எண்ணமும்



உங்கள் இல்லச் சுவர்களுக்குப் பூசப்பட்டுள்ள வர்ணத்தைக் கொண்டே உங்கள் குணநலன்களும் மாறுபடுகின்றன. வர்ணங்களின் மர்மங்களை ஆராய்ந்தறியும் வல்லுநர்கள் இதைத் தெரிவிக்கின்றனர்.

இல்லத்தரசிகள் பெரும்பாலும் பயன்படுத்தும் இடங்கள் இரண்டு. படுக்கை அறை ஒன்று: மற்றது சமையலறை. இவ்விரு இடங்களிலும் கடுமையான வர்ணங்களைச் சுவர்களுக்குப் பூசலாகாது. மென்மையான (லைட்) வர்ணங்களே உகந்தவை. கடும் சிவப்பு வர்ணத்தை இவ்விரு இடங்களிலும் பூசி வைத்தால் உங்களுக்கு எப்போதும் அதிகம் கோபம் வந்து கொண்டே இருக்கும். மென் நீலம், நீலம், பச்சை அல்லது செம்மை கலந்த மஞ்சள் வர்ணங்கள், படுக்கை அறையைப் புனிதமாக்க ஏற்றவை. மனதுக்கு இவ்வர்ணங்கள் அமைதியைத் தரும்.

அதிர்வலைகளைப் பிரதிபலிக்கும் ஆற்றலுடைய மஞ்சள், ஒரேஞ்ச் போன்ற வர்ணங்கள் துடிப்புடன் இயங்க வைப்பவை. இவை பொதுவாக மண்டபம், கூடம் ஆகியவற்றுக்குப் பூசப்படலாம். இவ்வர்ணங்கள் இருளிலும் ஒளி தரக்கூடியவை ஆதலால்; உற்சாகமூட்டத் தக்கவை.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? மட்டக்களப்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**பு. உதயனி**
விபுலானந்தா இசை, நடன கல்லூரி,
கல்லடி-மட்டக்களப்பு.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# உங்கள் குழந்தைகளுக்கு
## ஊட்டச்சத்து நிறைந்த உணவு!

வளரும் குழந்தைகளுக்கு சத்துணவு தேவை. அவற்றின் உறுதியான உடல் வளர்ச்சிக்கு ஊட்டச்சத்து நிரம்பிய உணவு அவசியம்.

இறக்குமதி செய்யப்பட்டு- கடைகளில் விற்பனைக்கு வண்ணம் வண்ணமான டப்பாக்களில் எத்தனையோ தின்பண்டங்கள் வருகின்றன. நம் நாட்டுக் குழந்தைகளுக்கு சில சந்தர்ப்பங்களில் இவை பொருந்துவதில்லை, எக்காலத்திலும் எமது சிறுவர்களுக்குப் பொருத்தமான– சாதாரண சத்துணவை நாமே வீட்டில் செய்து கொடுக்கலாம்.

குரக்கன், பொட்டுக்கடலை, வேர்க்கடலை (கச்சான்) ஆகியவற்றை, வகைக்கு 250 கிராம் எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றைத் தனித்தனியாகக் கழுவிக் காயவைத்துக் கொள்ளுங்கள். பொட்டுக்கடலை, வேர்க்கடலை ஆகிய இரண்டையும் பொன் நிறமாக வறுத்தெடுத்து குரக்கனுடன் கலந்து 'மிக்ஸி'யில் பட்டுப்போல் மாவாக அரைத்தெடுத்து ஒரு போத்தலில் வைத்துக் கொள்ளுங்கள்.

தேவையான போது 4 கோப்பை நீரை கொதிக்கவிடவும். கொதிக்கும் நீரில் ஒரு கோப்பை மேற்படி மாவைக் கொட்டி, ஏலக்காய்ப் பொடியும் சீனியும் (உருசிக்கேற்றவாறு) போட்டு கிளறவும். 5 நிமிடங்களின் பின்னர் அடுப்பிலிருந்து இறக்கி ஆறியபின் குழந்தைகளுக்குக் கொடுங்கள். குழந்தைகள் (ஒரு வயதின் பின்னர்) மட்டுமல்ல பெரியவர்களும் இதனை விரும்பி உண்பார்கள்.



# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்
## மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BX

பெயர்:........................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 05-07-1997**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

# கண்களே! கண்களே!!



இளங்காலைப் பொழுதில் கதிரவனை நேரடியாக உற்றுப்பார்க்கவேண்டும். 3 நிமிடங்கள் இவ்வாறு பார்த்தால் போதுமானது. பின்னர் இமைகளை மூடிக்கொண்டு சூரியனைப் பார்த்தாப்போல் நிற்கும் போது– ஏற்கனவே பார்த்த அந்த இளஞ்சூரியனின் பிம்பம் நம் இமைகளிலேயே தோன்றும். நமது புலனை அந்தப் பிம்பத்தில் செலுத்தியபடி, தலையை வலமிருந்து இடமாகவும், இடமிருந்து வலமாகவும் சுற்றவேண்டும். 5 நிமிடங்கள் இதனைச் செய்யலாம்.

ஓய்வெடுக்கும்போது உள்ளங்கைகளால் கண்களை மூடிக்கொண்டு அரை மணிநேரம் படுத்திருக்கவேண்டும். படுக்கையிலிருந்து எழுந்து அதே உள்ளங்கைகள் கண்களை மூடியிருக்க- கண்களைச் சுற்றியுள்ள மேடான பகுதிகளை, உள்ளங்கையின் (விரல் களில்லாத) மேடான பகுதிகள் அழுத்திவருட வேண்டும். இவ்வேளையில் மூடியிருக்கும் கண்களில் கை படலாகாது.

வெண்மையான சுவரில் ஒரு சிறு கறுப்புப் புள்ளியை வையுங்கள். அல்லது ஒரு மெழுகுதிரியை எரிய வையுங்கள்: இவற்றில் ஏதாவதொன்றை- 2 அடி தள்ளி இருந்தவண்ணம் கண்களை இமைக்காமல் பாருங்கள். பின்னர் கண்களைச் சிமிட்டிய படி உற்றுப்பாருங்கள். ஒரு பென்சிலை இரண்டு அடிகளுக்கு அப்பால் ஆடாமல் அசையாமல் நிறுத்திவைத்து விட்டு நேராக அதனை உற்றுப்பாருங்கள்.

கண்களை அகலத்திறந்த வண்ணம் இரு முனைகளுக்கும் மாறிமாறி கண்மணியை ஓடவிடுங்கள். தொடர்ந்து மேலும் கீழுமாகவும் அசைக்கவும். அடுத்து கண்மணிகள் சுழலக் கூடியதாக ஓடவிடுங்கள். இப்பயிற்சிகளை வேளை கிடைக்கும்போது செய்துவந்தால் கண்களிலுள்ள குறைபாடுகள் நீங்குவதுடன் கவர்ச்சியான கண்களையும் பெறுவீர்கள்.


தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு– அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 17

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

## உறவுக் கவிதை

விலங்குகளை வேட்டையாடி
மகிழ்ந்தவர்கள்
மனிதர்களையே வேட்டையாடும்
இன்றில்...!
***
உயிர்களென்றால்
ஜீவகருண்யம் பேசுபவர்கள்
மனிதர்களென்றால்
உயிரோடே எரிக்கும்
இன்றில்...!
***
வாழ்விறந்தல்
என்பதற்கு மாறாக-
பிறந்துவிட்டதற்காக வாழும்
அகதிகள்
அதிகரித்த இன்றில்...!
***
வாய் கூசாமல்
இனவாதம் பேசுவது
உரிமைகோரல்
என்றாகிய இன்றில்...!
***
சகோதரா...!
கடித்த எறும்பையும்
காக்க மனமின்றி
மெதுவாய் பிடித்துவிடும்
உன்மென்மைய இதயத்தை
எடுத்துக்கொண்டு
என்ன செய்கிறாய்...?
***
எனதிதயம்
என்னை இகழ்ந்து
முகத்தில் உமிழ்கிறது...
இங்கே என்னிடமும்
இதயமிருக்கக் கூடாது
இல்லை யென்றால்
நான்
பிறந்திருக்கவே கூடாது!
***
எத்தனையோ பேர்
வாழ்கிறார்களே...!
இதயமில்லாமலும்
உயிர் வாழ முடியுமா?
***
கடைசியாக
இருவரும் ஒரன் அக்காலிட்டில்
முந்திரியம் பழந்தின்ற
ஒரு தராதத்திற்கு
முந்தியதான அன்றில்...
எனது தொப்பியை
நீ அணிந்து
உனது பொட்டை
எனது நெற்றியிலொட்டி
இருவரும்
தள ஆடியில்
பார்த்துக்கொண்டது
அப்போது...!
***
இப்போது முடிகிறதா
நாம்-
உறவாடிக் கொள்ளவேனும்...?
***
நீ வேறு-
நான் வேறென்றாகியதற்கு
நீயும் நானும் மட்டுமல்ல,
உன்னையும்
என்னையும் பிரிக்கும்
பங்காளர்களுக்கும்
ஆயுதங்களுக்கும்
பங்கிருக்கிறது!

எஸ். நஸீம்- மீராவோடை.

## அடிமை அவலங்கள்!

நகர இருக்கங்களால்
வாழ்க்கை
இப்பொழுது
கொஞ்சக் காலங்களாகவே
வரிவப்பட்டிருக்கின்றது.
*
நெருக்கங்களுக்கு
அப்பால் விலகிச் சென்று,
பீரங்கி வெளியின்
ஒரு இரத்தில்
உட்கார்ந்து கொண்டு
கசிகிறது!
*
இறுகு நெருக்கப்பட்ட
பறவையின் நிழலிலே
அடி முடி தேடும்
அர்த்தமிழந்து போன
அமைதி பற்றியதொரு
மதிப்பீடு!
*
உருமாறிப் போன
வடுக்களின் முகங்களிலும்
இன்னும்
கேள்வியாகவே
வாழ்க்கை
கொக்கி போடுகிறது.
*
எதிர்கால நிலவுகளுக்குக்கூட
அச்சம் பற்றிய
எதிர்வுகளோடு
கழியும் ஒரு நினைவுச்
சகுனம்!
*
மூர்ச்சை அறுந்துபோன
பேதவிப்பில்
சமாதானக் காலங்கள்
இடம் நகர மறுக்கும்
அவலம்!
*
எந்தக் காலத்தில்
வாழ்கிறோம்?
நெருப்பைத் தின்று
உஷ்ணங்களை
ஏப்பமாய்விடும் காலம்
இன்றிலா?
*
எச்சரிக்கை நினைவுகளும்
இதட்டிப்புக்களும்
எங்கள் முளையை
உரசும்
ஒரு
இறுகிய காலத்தின்
இரத்திலா?
*
இன்னும் எத்தனை
நாட்களுக்குத் தான்
அடிமைகளாய்
அலைவது?
*

மானுடபுத்ரன்.

## இழத்தல்

அவளைது கதறல்
வானுலகம் எட்டிற்று!
சொற்ப உயிரினையும்
அரிந்து வீசினாய்.
தலையறுந்த கோழியென
துடிதுடித்து அடங்கிற்றென்-நெஞ்சு.
**
கத்தியின்றி இரத்தமின்றி
நான் கொலையுண்ட
அத்தினத்தில்- நீ என்ன ஆனாய்...?
அன்பே!
மாலை மாற்றிக்கொண்டு
தலை குனிந்து அஞ்சலிந்தாயோ
எனக்கு...?
**
அமரகாவியத்தின் இறுதி
வசனத்திற்கோர்
முற்றுப்புள்ளியென சிந்திற்றோ உன்
விழிகள்...?
**
உயிருடன் சாதல்
எதுவென்கண்டேன்- கண்மணி!
உன் மணநாளில்!
**
இனிவரும் நிசியிலும்
அங்ஙனம் சாவேன்.
நீ கீறித்தந்த 'ஆட்டோ கிராப்'பின்
நடுத்த எழுத்துக்களில்
நீராடி விம்மி வெடிப்பதில்
ஒரு சுகமடி எனக்கு!

என்.சுஹா- கள்-எலிய.

## தேன் கிண்ணம்

## காதல் செய்திகள்

காகித வீதியில்
கறுப்பு மையினால் எமது
'வெற்றி நிச்சயம்' அற்ற
காதல் யுத்தம் ஆரம்பமானது!
ooo
இருவரும் பருவத்தேவைகளுக்கு
ஒரு விளிம்பே பாதையை
திறப்பதே இந்த
நடவடிக்கையின் முக்கிய
நோக்கமாகும்!
ooo
"ஐ லவ் யூ" என்ற
வீர வாசகங்களை
சிறுவருக்கொதுவர்
மொழிந்து கொண்டதோடு
எமது காதல் போர் துவங்கியது!
ooo
இரு தரப்பில் இருந்தும்
சரமாரியாக கடித ஷெல்கள்
ஏவப்படுகின்றன. இதனால்
அப்பாவித் தூதர்களான
அலைந்து திரிகிறான்!
ooo
நேற்று மாலை
பெராதனைப் பூங்காவிலிருந்து
நெருக்குப்பக்கமாக முன்னேறிய
எமக்கு கண்டியில் வைத்து
அவளது தந்தையை எதிர்கொள்ள
வேண்டியேற்பட்டது-நாம்
பதுங்க எத்தனித்தபோதும்-அந்த
முயற்சி பலனளிக்கவில்லை!
ooo
இந்தச் சம்பவத்தை
தொடர்ந்து அவளது
தரப்பில் இருந்து
கடுமையான எதிர்ப்பு
காட்டப்படுவதால்...
அடியாளர்களுடைய
தவிர்க்கும் பொருட்டு
மிக மெதுவாகவே
நகர வேண்டியுள்ளது!
ooo
எதுகவே
பரிமாறிக் கொண்ட
எமது சந்தோச
நிலைகளை
பலப்படுத்திக்கொண்டு
வெற்றி நிச்சயமற்ற
காதல் நடவடிக்கை
தொடர்கிறது...!

பர்ஸான்- யடவத்தை,
நிகசொள்ள.

## பரிசு மழையில் நனையும் அதிஷ்டசாலிகள்

முரசின் பரிசுமழைப்போட்டிக்கு வந்து குவிந்த கூப்பன் மழையில் மூச்சுத் திணறிப் போனது. அசத்திவிட்டீர்கள் போங்கள். பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் 200 பேரின் பெயர் விபரங்கள் தொடர்ந்து வெளியாகும். முதல் 120 பேரின் பெயர் விபரங்கள் கடந்த வாரங்களில் வெளியாகியிருந்தன. அடுத்த 20 பேரின் பெயர் விபரங்கள் இதோ:

121 செல்வி யோகேஸ்வரி வேலு
பாம் காடன்,
இரத்தினபுரி.

122 கே. ஆரோக்கியசாமி
மாஸ்க் டிவிஷன்,
அட்டன்.

123 சரவணமுத்து பேரின்பநாயகம்
70/1, நாவலர் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.

124 எம். அஸ்லம் சஜா
54, பெண் பாடசாலை வீதி,
சாய்ந்தமருது-11.

125 ஜீ. நாகேஸ்வரன்
வடக்கு பூண்டுலோயா,
மேல்பிரிவு, பூண்டுலோயா.

126 கே. அழகேசன்
மொக்கா அப்பர் டிவிஷன்,
மஸ்கெலியா.

127 எம். சரவணன்
முதலாம் பிரிவு,
டெமோரியா, பசறை.

128 எம். அமீர் மிஸ்ஹர்
92, பிரதான வீதி,
இரத்தினபுரி.

129 ஆர். ரஞ்சனிதேவி
நு/எபற்ஸ்போட் த.வி.,
நானு ஓயா.

130 பாத்திமா மஃமூதா
28, இந்திரிலிகொட,
மக்கொன.

131 ஆர். மங்களேஸ்வரி
முவான்கந்தை தோட்டம்,
மாவத்தகம போஸ்ட்.

132 ஆர். ஆபிரகாம்
69, பிரதான வீதி,
மொனராகல.

## யார் இவர்?

பார்த்தவுடனேயே யார் என்று புரிந்திருக்கும். உங்கள் கண்டுபிடிப்பு கச்சிதம் தானா என்றறிய பக்கம் 18க்குச் செல்லுங்கள்.



133 நாகரத்தினம் கரிகாலன்
117/3,தெய்வநெறிக்கழக
ஒழுங்கை,
லேடிமனிங்றை, மட்டுநகர்.

134 வசந்தா ரஞ்சனி பூராஜ்
இ/றை தமிழ் ம.வி.,
பலாங்கொடை.

135 திருமதி சுஜானா அஸ்ஹர்
57, போல்ஸ் வீதி,
புத்தளம்.

136 வி. தாட்சாயினி
32/5, மத்திய வீதி,
உவர்மலை, திருமலை.

137 பி. திலீபன்
16/5, எலியட் பிளேஸ்,
பொரள்ள,
கொழும்பு-08.

138 ரி. அபிராமி
தபாற்கந்தோர் விடுதி,
வெள்ளவத்தை.

139 எம். புஹாரி
HOUSE NO- 44, STREET NO -1
BLOCK NO - 4,
MUSRIF, KUWAIT.

140 வி. தவராஜா
60,BERKHAMSTED AVE,
WEMBELY
MIDDLE SEX,
HA9 6DT, U.K.

(ஏனைய விபரங்கள் அடுத்தவாரம்)

## யாரோ சொன்னார்கள் (?)

என் காதலியுடன்
கைகோர்த்து திரியும்
இந்த தெருவில்தான்,
"ரயர்கள்" எரிந்தன
கழிவு எண்ணெயில்
முன் பொரு காலத்தில்...!
...
நானும் அவளும்
தனிமையில் கதைக்க
ஒதுங்கும் மரம்,
தென்பகுதி தாய்களின்
கண்ணீரால்
செழித்து வளர்ந்ததாம்!
...
நானும் அவளும்
இன்று காலை
பறித்துச் சுவைத்த
இனிய பழம்,
எந்த சகோதரனின்
சதையும் இரத்தமும்...?
...
புதைகுழிகள்
தோண்டப் படுகையில்
சந்தோசப் பட்டோம்....
விடிவு வருகிறது
என்று
ஆனால் மீண்டும்....!
...
யாரும் எதையும்
எதிர்பார்க்க வில்லை,
இப்படி எல்லாம்
நடக்கும் என்று...!
சொந்தக் கத்தியே
முதுகில் பாயுமென்று....!
...
"எந்தத் தாயும்
ஆயுதம் ஏந்தச் சொல்லி
தாய்ப்பால் கொடுப்பதில்லை!"
என்று
இலங்கை மாதா
அழுகிறாள்.

சுபா வரன்-கண்டி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(29.06.1997 தொடக்கம் 05.07.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| சனி- இனசன நன்மை, மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- உறவினர் நன்மை, பலவிதபேறு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிடவாசம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, கௌரவ மேன்மை. | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| சனி- காரியானுகூலம், தொழில் பேறு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பணவரவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பலவித பேறு, தேகசுக நன்மை. | பகல் | 12 | மணி |
| சனி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- கௌரவமிகுதி, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, தொழில் விருத்தி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், அந்நியர் சகவாசம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- வீண் விரோதம், மனக் கவலை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 3 | மணி |
| புதன்- கௌரவ மிகுதி, பிரயாணக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், புதன். |
| கர்க்கடகம் | - வெள்ளி. |
| கன்னி | - செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |

சந்திரன்- மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- உறவினர் நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, ஆடம்பரச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் மேன்மை, பயனுள்ள செயல். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, கோபமிகுதி. | பி.ப. | 2 | மணி |
| புதன் - உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், கௌரவம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பயனுள்ள செயல். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- கடன் தொல்லை, தொழில் மந்தம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- உறவினர் பகை, வீண் விரோதம். | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- கடன் படல், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், பெரியோர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பி.ப. | 3 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனக்கலக்கம். | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, பணக் கஷ்டம். | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, பிரயாணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மனக்கலக்கம். | பகல் | 12 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| சனி- முயற்சி பலிதம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 3 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, மனக் கவலை. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியசித்தி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பிரயாணக் கஷ்டம், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| சனி- முயற்சி மேன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. | 3 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, தொழில் மந்தம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- கடன் படல், காரியானுகூலம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





## பட்டம் பறக்குது!

பட்டம் பறக்குது வானத்திலே
பந்தயம் நடக்குது பூமியிலே
சிறகில்லாமல் பறக்குது பார்!
சிந்தை மகிழும் காட்சியைப்பார்!

வண்ண வண்ணக் காகிதமாம்
வானில் வண்ணத் தோரணமாம்!
விதவிதமான தோற்றத்திலே
விண்ணில் நடக்கும் விளையாட்டாம்!

நூலை உருவி விட்டாலே
நொடியில் உயரக் கிளம்பிடுமே;
வாலை அறுத்துக் கொண்டாலும்
வட்டமிட்டு ஆடிடுமே!

காற்றும் நூலும் ஆதாரம்
கடற்கரை சென்றால் பிரமாதம்;
போட்டியில் நானும் ஜெயித்திடுவேன்!
பேரும்புகழும் பெற்றிடுவேன்!

எஸ். புகழேந்தி.

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!
-சுப்பிரமணிய பாரதியார்.



## பாப்பா முரசு சிறுகதை

# ஏன் அவதரிக்கிறார்?

ஒரு சமயம் அக்பருக்கு, 'இந்து மதத்தில் கடவுளே அவதரிக்கிறார் என்று சொல்கிறார்களே, மக்களை உய்விக்க அவரே ஏன் அவதாரம் எடுத்து வரவேண்டும்? அவரிடம்தான் எண்ணற்ற தெய்வ தூதர்கள் இருக்கிறார்களே! அவர்களில் ஒருவரை அனுப்பக்கூடாதா?' என்ற சந்தேகம் ஏற்பட்டது.

உடனே அக்பர், பீர்பாலை அழைத்து இந்தச் சந்தேகத்தைக் கேட்டார். அதற்கு பீர்பால், அரசரிடம் பத்து நாட்கள் தனக்கு அவகாசம் தரும்படி கேட்டார். அரசரும் அதற்குச் சம்மதித்தார்.

பௌர்ணமி நாட்களில் அரசரும், அமைச்சர்களும் ஆற்றில் படகிலேறி உல்லாசமாகச் செல்வது வழக்கம். அதேபோல் அன்றும் படகில் செல்லத் தயாராக இருந்தனர்.

அக்பர் கூட வந்துவிட்டார். ஆனால் பீர்பால் மட்டும் வரவில்லை. படகில் இருந்தவர்கள் எல்லோரும் பொறுமை இழந்து கொண்டிருந்தனர்.

அந்த நேரத்தில் பீர்பால் அவசர அவசரமாக ஓடிவந்தார். அவர் கையில் அக்பரின் இரண்டு வயதுப் பாலகன்.

"மன்னித்துக் கொள்ளுங்கள் மன்னா! நான் கிளம்பும்போது, இளவரசர் தானும் வருவேன் என்று ஒரேயடியாகப் பிடிவாதம் பிடித்து அழுததால் அவரையும் இருந்து அழைத்து வரத் தாமதமாகி விட்டது," என்றார் பீர்பால்.

அவர்களுடன் படகு புறப்பட்டது. அந்தப் படகுக்கு இருபுறமும் பல வீரர்களுடன் இரண்டு படகுகளும் வந்தன.

படகுகள் நடு ஆற்றில் சென்று கொண்டிருந்தன. திடீரென்று,

"ஐயய்யோ.... இளவரசர் ஆற்றில் விழுந்துவிட்டார். காப்பாற்றுங்கள்.... காப்பாற்றுங்கள்," என்று அலறினார் பீர்பால்.

அடுத்த கணம், அந்தப்படகின் முன்புறம் இருந்த அக்பர் மின்னலென ஆற்றில் பாய்ந்தார். சில வினாடிகள் கழித்து இளவரசருடன் அக்பர் படகில் ஏறினார்.

அதன் பின்புதான், அவர் எடுத்து வந்தது இளவரசரைப் போன்றதொரு மெழுகு பொம்மை என்று அக்பருக்குப் புரிந்தது. அரசர் கோபப்பார்வையுடன் பீர்பாலைக் கேள்விக்குறியுடன் நோக்கினார்.

"அரசே! தன் மக்களைக் காக்க ஆண்டவன் ஏன் தானே அவதரிக்கிறார் என்று இப்போது தங்களுக்குப் புரிந்திருக்குமே. இரண்டு படகுகளில் பல வீரர்கள் இருந்தும், மாபெரும் சக்கரவர்த்தியானவர் தனது மகனைக் காப்பாற்றத் தானே மூழ்கியது போல், சர்வ வல்லமை படைத்த ஆண்டவனும் தனது மக்களைக் காக்க தானே அவதரிக்கிறார்," என்றார் பீர்பால்.

பீர்பாலின் இந்த அருமையான விளக்கத்தைக் கேட்ட அக்பர் பீர்பாலின் முதுகில் தட்டி அவரை மனதாரப் பாராட்டினார்.

## வாரம் ஒரு நாடு

**ஜிபூடி**

தலைநகர்-ஜிபூடி
பரப்பளவு- 21,783 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை- 6.95 இலட்சம்
மொழி- ஃபிரெஞ்சு, அரபி, அஃபார், இஸா.
எழுத்தறிவு- 48%
சமயம்- இஸ்லாம்
நாணயம்- ஜிபூடி ஃபிராங்க்.
தனிநபர் வருமானம்- 1030 டொலர்.



**அமைவிடம்:**

வடகிழக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ளது. ஏடன் வளைகுடாவில் அமைந்துள்ள ஜிபூடியின் தென்கிழக்கே சோமாலியாவும்; தெற்கிலும், மேற்கிலும் எத்தியோப்பியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.


**வரலாறு:**

தொடக்கத்தில் ஜிபூடி, ஃபிரெஞ்சு சோமாலியா என்று அழைக்கப்பட்டது. ஃபிரான்ஸிடமிருந்து 1977ல் சுதந்திரம் பெற்றது. அதிபர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இவரது பதவிக்காலம் 6 ஆண்டுகள்.

**பொருளாதாரம்:**

கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில். விவசாயம் மிகக்குறைவு. நாட்டின் பெரும் பகுதி எரிமலைகள் சூழ்ந்த பாலைவனப் பகுதிகள். முக்கிய உற்பத்திப்பொருள் உப்பு. இவை இங்குள்ள அலோல் மற்றும் அஸ்ஸால் ஏரிகளில் இருந்து எடுக்கப்படுகின்றது.

## ஆழ்கடல் மீன்பிடிப்பு



கடலுக்குள் குறிப்பிட்ட திசையில் செல்லும் நீரோட்டங்கள் உள்ளன. இரண்டு நீரோட்டங்கள் சந்திக்கும் இடத்தில் நிறைய மீன்கள் கிடைக்கும். இத்தகைய பகுதிகளில் குறைந்தது 1100 அடி ஆழம் இருக்கும்.

மிகப்பெரிய மீன்பிடிப் படகுகளில் செல்லும் மீனவர்கள் மின்சார அதிர்ச்சி அளிப்பது, கூடை வடி இராட்சத வலையைப் போடுவது இரண்டு கப்பல்களில் வலையை இணைத்து நீண்டதூரம் இழுத்துச் செல்வது ஆகிய முறைகளில் மீன் பிடிக்கிறார்கள்.

கடலில் எங்குமீன் அதிகமாக இருக்கிறது என்று செயற்கைக்கோள் (சாட்டிலைட்) மூலம், வானத்தில் இருந்து படம் பிடித்துப் பார்க்கும் முறையும் உள்ளது.

நவீன முறையில் மீன்பிடிப்பதால் கடல்வளம் பாதிக்கப்படுகிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். இருப்பினும் கடல்நீர் கலங்குவதன்மூலம் அதில் உள்ள கனிம வளமும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 05.07.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 199
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 197


பரிசுக்குரியவர்:
வி. கௌரிசங்கர்,
கே.கே.எஸ்வீதி, இணுவில்.

பாராட்டுக்குரியவர்கள்:


| | |
|---|---|
| பற்றீஷியா பல்லவி, இராமகிருஷ்ணமிஷன் ம.வி.,கல்முனை. | தணிகாசலம் பாபுஜி, வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| கவிதா விஜயகுமார், புனித கெப்பரியில் பாலிகா ம.வி, ஹட்டன். | ஹுஸ்னி முபாரக், மின்ஹாத் கனிஷ்ட வித்தியாலயம், யோகனபுர, திக்குவெல்லை. |
| கே. மைதிலி, கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு. | த. ஜூட்ராஸ், நு/ ட்ரூப் த.வி, தலவாக்கலை. |
| ஆர். தர்ஷனி, இரஜவெல த.ம.வித்தியாலயம், இரஜவெல. | பி. விஜிதா, சிந்தாமணி பிள்ளையார் வீதி, வவுனியா. |
| எம். பத்தீலா, பெரியநீலாவணை-02, கல்முனை. | ஏ.எம். ஸஹ்பீக், வஹ்பீக், பு/ எருக்கலம்பிட்டி மு.ம.வி., பாலாவி. |

## அதிசயச் செய்திகள்

மனித உடலில் உள்ள எலும்புக்கு, அதைப்போல 30 மடங்கு எடையைத் தாங்கும் சக்தி உண்டு.



சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை 6000 பாகை செல்சியஸ்.



கடலில் 1000 கோடி தொன் தங்கம் இருப்பதாக விஞ்ஞானிகள் மதிப்பிடுகிறார்கள்.



ஜே.ஆர். ஒபன் ஹீமர் என்னும் அமெரிக்க விஞ்ஞானியே முதன் முதலில் அணுகுண்டைத் தயாரித்து 1945ல் சோதனை நடத்தியவர். இக்குண்டு வெடிக்கப்பட்ட போது 12 ஆயிரம் மீட்டர் உயரத்திற்குப் புகை எழும்பியது.



## அன்டார்ட்டிக்கா

அன்டார்ட்டிக்கா பனிப்பிரதேசத்தின் பனிக்கட்டிகள் உருகினால் உலகம் முழுவதும் உள்ள கடல்களின் தண்ணீர் மட்டம் 200 அடிகள் உயரும்.



அமுட்சென்

அன்டார்ட்டிக்காவில் உள்ள பனிக்கட்டிகள் 2 கிலோமீட்டர் நீள அடர்த்தி கொண்டவை. 1500 முதல் 8000 அடி உயரமுள்ள பனிக்கட்டி மலைகள் ஏராளம் உள்ளன.

உலகில் உள்ள பனிக்கட்டியில் 90 சதவீதமானவை அன்டார்ட்டிக்காவில்தான் உள்ளன. தென்துருவ முனையான அன்டார்ட்டிக்காவுக்கு முதன் முதலில் சென்றவர் நோர்வே நாட்டு ஆய்வாளரான ரோல்ட் அமுட்சென்னும் அவரது குழுவினரும்தான்.

## சிலந்தி வலை



மடகாஸ்கர் தீவில் இராட்சத சிலந்திகள் காணப்படுகின்றன. இவை பின்னும் வலைகள் மிகவும் பலமுடையதாகவும், பெரிதாகவும் இருக்கும். இந்த வலையை அங்குள்ள மீனவர்கள் எடுத்துச் சென்று மீன் பிடிக்கப் பயன்படுத்துகிறார்கள்.

## விடுகதைகளும் விடைகளும்

1. முகம் இருக்கிறது; கைகள் இருக்கின்றன, கால்கள் மட்டும் இல்லை, என்றாலும் நடக்கிறேன். நான் யார்?
2. மரக்கிளையோடு பிறந்தவன், மண்ணிலே சிறந்த ஓட்டக்காரன். அவன் யார்?
3. பரட்டைத் தலை மாமிக்கு பவளம் போல மருமகள். அவள் யார்?
4. சின்னப் பையனுக்குக் கறுப்புத் தொப்பி. அது என்ன?
5. மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கு அல்ல, பட்டை தீட்டியிருப்பான் சாமியாரும் அல்ல. அவன் யார்?
6. கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள். அவள் யார்?
7. கட்டுப்பட்டு இருந்த மகளை விட்டுப் பிரிந்து வந்தாள். அவள் யார்?
8. பறிக்கப் பறிக்கப் பெரிதாகும். அதுஎன்ன?
9. சிங்கார மண்டபத்தில் சங்கீதக் கச்சேரி, அருகே போனால் ஆணியடித்து அபிஷேகம். அது என்ன?
10. நாலு மூலை சதுரப் பெட்டி, நடுவில் ஓடும் குதிரைக் குட்டி அது என்ன?

**விடைகளும்**

1. கடிகாரம் 2. மான்
3. இலந்தைப்பழம் 4. தீக்குச்சி
5. அணில் 6. மெழுகுதிரி
7. நெல்-உமி 8. பள்ளம்
9. தேன்கூடு 10. அம்மி-குழவி

தொகுப்பு- ஆர். அரவிந்தன்.



படிப்பகம்

www.padippakam.com




# உடைந்த இரவு

க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

**இதுவரை**

தினேஷ்–மைத்ரேயி தம்பதிக்கு சிறந்த தம்பதி என்று விருது கிடைக்க இருக்கிறது. அத்தகவலை மைத்ரேயிடம் மகிழ்ச்சியுடன் சொல்கிறான் தினேஷ். மைத்ரேயிக்கும் பாஸ்கர் என்ற இளைஞனுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருக்கிறது. தினேஷை கொல்ல பாஸ்கருடன் திட்டம் போடுகிறாள் மைத்ரேயி. அப்போது ஒரு போன் வருகிறது. போனில் ஒரு பெண்குரல் மைத்ரேயி– பாஸ்கர் தொடர்பை தெரிந்து வைத்து மிரட்டுகிறது. போனில் மிரட்டுவது யார் என்று தெரியாமல் மைத்ரேயியும், பாஸ்கரும் குழம்புகின்றனர்.

**இனி...**

வாசல் படியில் நின்றிருந்த அந்தப் பெண்ணை பார்வையில் வாங்கிய மைத்ரேயி மெல்லிய குரலில் கேட்டாள்,

"எஸ்... யார்.... வேணும்...?"

"நீங்கதானே மிஸஸ் மைத்ரேயி...?"

"ஆமா...."

"உங்களைத்தான் பார்க்க வந்தேன்..."

"நீங்க யார்ன்னு சொல்லவேயில்லையே...?"

"என்பேர் தமிழ்ச்செல்வி. 'திலகம்' பத்திரிகைக்கு உதவியாசிரியர்..."

மைத்ரேயி மலர்ந்தாள்.

"பத்திரிகையிலிருந்து வர்றீங்களா....? ப்ளீஸ் கம்...."

"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்... சாப்பாட்டு நேரத்துல வந்து உங்களுக்கு தொல்லை தர்றேன்..."

"நோ... நோ... ப்ளஷர் இஸ் மைன். 'திலகம்' பத்திரிகைக்கு நான் ரெகுலர் ரீடர். பெண்களாலேயே பெண்களுக்காக நடத்தப்படற அந்தப் பத்திரிகையைப் படிக்காத பெண்களே இருக்கமாட்டாங்க."

மைத்ரேயி தமிழ்ச்செல்வியை வரவேற்று கூட்டிப் போய் சோபாவில் உட்கார வைத்தாள். கேட்டாள்,

"என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்திருக்கீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?"

"ஸ்வீட் ஷேர் அமைப்பின் மூலமா நீங்க ஒரு சக்சஸ்புல் வுமனா தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கீங்க, இல்லையா?"

"ஆமா..."

"அது சம்பந்தமா உங்களைப் பார்த்து, வர்ற இஷ்யூவுக்கு ஒரு பேட்டி எடுத்துட்டுப் போலாம்ன்னு வந்தேன்..."

மைத்ரேயி பெரிதாய் மலர்ந்தாள்.

"கிட்டத்தட்ட ஆறுலட்சம் பிரதிகள் விக்கிற உங்க 'திலகம்' பத்திரிகைக்காக என்னைப் பேட்டி எடுக்க வந்தது குறித்து ரொம்பவும் சந்தோஷம். ...இது எனக்கு கிடைச்ச மிகப் பெருமையா நினைக்கிறேன்".

"பேட்டியை ஆரம்பிக்கலாமா..?"

"நல்ல வெய்யில்ல வந்திருக்கீங்க... ஏதாவது கூலா குடிக்கத் தரட்டுமா...?"

"அதெல்லாம் வேண்டாம்... ஆபீஸை விட்டு கிளம்பும் போதே லெமனேட் சாப்பிட்டுத்தான் வந்தேன்... பேட்டிக்கு போலாமா?"

"ம்..." மைத்ரேயி தலையசைக்க தமிழ்ச்செல்வி தான் கையோடு கொண்டு போயிருந்த லெதர் பேக்கின் ஸிப்பைப் பிரித்து உள்ளேயிருந்து ஒரு சிறிய டேப் ரிக்கார்டரை எடுத்து டீபாயின் மேல் வைத்து பட்டனைத் தட்டிவிட்டபடி கேட்டாள்,

"ஒரு ஆணின் வெற்றிக்கு ஒரு பெண் ஐம்பது சதவீதம் காரணமாக இருக்கிறாள் என்பது உண்மையா...?

"உண்மைதான்..."

"அது உண்மையா இருந்தா எல்லா ஆண்களினாலும் ஏன் வெற்றி பெற முடியறதில்லை."

"ஒரு ஆண் சரியா செயல்பட்டா அந்தச் சரியான செயலுக்கு பெண்– அதாவது அவனுடைய மனைவி உதவுற பட்சத்துலதான் வெற்றி சாத்தியம்..."

"உங்க கணவரோட வெற்றியில் உங்க பங்கு என்ன?"

"அவர் பிஸினஸ் டென்ஷனோட வீட்டுக்கு வரும்போது அந்த டென்ஷனை அதிகப்படுத்தாத மாதிரி நடந்துகிட்டாலே போதும்...."

"அதாவது அவரோட மனசை டைவர்ட் பண்ணணும்."

"ஆமா..."

"எப்படி டைவர்ட் பண்ணுவீங்க....?"

"வாங்க வெளியே போய்ட்டு வரலாம்ன்னு கூட்டிட்டு பீச்சுக்கு போயிடுவேன். பீச்சுக்கு போனதும் கொஞ்ச நேரம் கழிச்சு அவராகவே பிசினஸோட பிரச்சனையைப் பத்தி பேச ஆரம்பிப்பார். நானும் டிகிரி படிச்சவ. எனக்குத் தோணின ஆலோசனைகளை சொல்வேன். அதுல சிலது 'க்ளிக்' ஆகும். அப்படி 'க்ளிக்' ஆகும் போது அவர் என்னைப் பாராட்டுவார். அந்தப் பாராட்டு எனக்கு வைட்டமின் மாத்திரைகள் மாதிரி. மேலும் ஆலோசனைகளைக் கொடுக்க அது உதவியா இருக்கும்..."

"நீங்க அவரோட பிரச்னைகளுக்கு உதவற மாதிரி அவர் உங்களோட பிரச்னைகளுக்கு உதவுவாரா?"

மைத்ரேயி சிரித்தாள்.



"எனக்கு பிரச்னையே வராமல் அவர் பார்த்துக்கிறார்."

"யூ... ஆர் லக்கி... இப்படியொரு கணவர் கிடைக்க நீங்க குடுத்து வைக்கணும்..."

"சந்தேகமே வேண்டாம்.... இது ஏதோ பூர்வஜென்ம புண்ணியம்தான்... எனக்கு இப்படிப்பட்ட கணவர் அமைஞ்சதுக்காக தினசரி கடவுளுக்கு நன்றி செலுத்திட்டு வர்றேன்.."

"சர்ட்டன்லி யூ ஹேவ் டுடூ இட்.." சொல்லிவிட்டு சிரித்த தமிழ்ச்செல்வி அடுத்த கேள்விக்காக வாயைத் திறந்த விநாடி.

உள்ளே டெலிஃபோன் கூப்பிட்டது.

"எக்ஸ்க்யூஸ்... மீ..."

மைத்ரேயி எழுந்தாள்.

"போய் அட்டெண்ட் பண்ணிட்டு வாங்க..." தமிழ்ச்செல்வி டேப் ரிக்கார்டரில் ஸ்டார்ப் பட்டனைத் தட்டிவிட்டு சாய்ந்து உட்கார மைத்ரேயி வேகமாய் நடந்து ஹாலைக் கடந்து அறைக்குள் நுழைந்தாள்.

கதறிக் கொண்டிருந்த டெலிஃபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ..."

மறுமுனையில் குரல் கிசுகிசுத்தது.

"நான் பாஸ்கர்..."

மைத்ரேயி சட்டென்று குரலைத் தாழ்த்தினாள்.

"என்ன இந்த நேரத்துல ஃபோன்...?"

"ஏன் கரடி வீட்டுக்குள்ளே இருக்கா...?"

"இல்ல.... கரடி டெல்லிக்குப் புறப்பட்டு போயாச்சு."

"இந்த உலக மகா சந்தோஷ விஷயத்தை இவ்வளவு சர்வசாதாரணமா சொல்றே...? உடனே எனக்கு ஃபோன் பண்ணியிருக்க வேண்டாமோ....?"

"பண்ணலாம்னுதான் இருந்தேன்.... அதுக்குள்ளே...?"

"அதுக்குள்ளே...?"

"திலகம் பத்திரிகையிலிருந்து என்னைப் பேட்டி எடுக்கிறதுக்காக வந்துட்டாங்க.."

"பேட்டி முடிஞ்சுதா இல்லையா?"

"இன்னும் முடியலை போயிட்டிருக்கு..."

"சரி...! எப்போ வரட்டும்...?"

மைத்ரேயி குரலை இன்னமும் தாழ்த்திக் கொண்டாள். "சாயந்தரம் ஏழு மணிக்கு மேல் உங்களுக்கு ஃபோன் பண்றேன்... உங்க கிட்ட நிறைய பேசவேண்டியிருக்கு..."

"ஏழு மணியிலிருந்து ஒவ்வொரு நிமிஷமும் உன்னோட டெலிஃபோனை எதிர்பார்த்துக்கிட்டிருப்பேன்.."

"சரி பண்றேன்..."



மைத்ரேயி ரிஸிவரை வைத்துவிட்டு மறுபடியும் ஹாலுக்கு வந்தாள். தமிழ்ச்செல்வி டீபாயின் மேல் கிடந்த ஒரு வார இதழை எடுத்து புரட்டிக் கொண்டிருந்தாள்.

"ஸாரி..."

"நோ... ப்ராப்ளம்... டெலிஃபோன் இருக்கிற வீட்ல எந்த நிமிஷமும் மணியடிக்கும்... பேட்டியை கண்டினியூ பண்ணலாமா...?"

"ம்...."

டேப்ரிக்கார்டரின் 'ரிக்கார்ட்' பட்டனைத் தட்டிவிட்டு அடுத்த கேள்வியைக் கேட்டாள் தமிழ்ச்செல்வி.

"உங்க வாழ்க்கையோட லட்சியமா எதை நினைக்கறீங்க...?"

"பெரிசா லட்சியம்ன்னு எதுவும் கிடையாது. என்னோட கணவர்க்கு ஒரு நல்ல மனைவியாகவும் துணைவியாகவும் இருக்கணும்...? அவரோட மனசு கோணாத படிக்கு நான் நடந்துக்கணும்..."

"ஒரு கணவன், மனைவிக்குள்ளே இது சாத்தியமா?"

"ஏன் அப்படி சந்தேகமா கேட்கறீங்க...?"

"ஒரு தம்பதியர் என்னதான் அன்னியோன்யமா இருந்தாலும், அவர்களுக்குள்ளே சின்னச் சின்ன உரசல்கள் ஏற்படறதை தவிர்க்க முடியாதுன்னு சொல்லுவாங்க...."

"ஊடல்கள் வரலாம்... உரசல்கள் வராது...! ஊடலுக்கும் உரசலுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு.."

"உங்களுக்கு இந்த வீட்ல எல்லா உரிமைகளையும் கொடுத்திருக்காரா...?"

"ஆல் மோஸ்ட்..."

"இதுக்கு என்ன அர்த்தம்...?"

மைத்ரேயி சிரித்தாள்.. "தொண்ணூறு சதவீத உரிமைகளை கொடுத்திருக்கார்ன்னு அர்த்தம்..."

"உங்க கல்யாணம் காதல் கல்யாணமா?"

"இல்லை.... அரேன்ஜ்டு மேரேஜ்... நான் வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணில்லை. அப்பா, அம்மாவை சின்ன வயதிலேயே இழந்துட்ட நான் வளர்ந்தது எல்லாமே என்னோட பெரியப்பாகிட்டதான்... அந்த பெரியப்பாவும் ரெண்டு வருஷத்துக்கு முந்தி காலமாயிட்டார்."

"ஸோ... உங்களுக்கு இப்போ இருக்கக்கூடிய ஒரே துணை உங்க கணவர் மாத்திரம்தான்..."

"ஆமா..."

"உங்களுக்கு குழந்தைகள்...?"

"இனிமேல்தான்..."

தமிழ்ச்செல்வி அடுத்த கேள்வியைக் கேட்கும் முன் உள்ளேயிருந்த டெலிஃபோன் மறுபடியும் வாயைத் திறந்து கூப்பிட்டது.

மைத்ரேயி தவிப்பாய் தமிழ்ச்செல்வியை பார்க்க, அவள் புன்னகைத்தாள்.

"போய் அட்டெண்ட் பண்ணுங்க...."

"ஸாரி... பேட்டிக்கு ரொம்பவும் இடைஞ்சலாயிருக்கு..."

"நான் இதை இடைஞ்சலா நினைக்கலை... போய் பேசிட்டு வாங்க... அதுக்குள்ளே நான் சில கேள்விகளை பிரிப்பேர் பண்ணிக்கிறேன்..."

மைத்ரேயி சற்றே எரிச்சலோடு வேக நடை போட்டு ஹாலைக் கடந்து அறைக்குள் நுழைந்தாள்.

கத்திக் கொண்டிருந்த ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ...."

"என்ன மைத்ரேயி சாப்பிட்டாச்சா....?" பெண் குரல் கேட்டது.

"யாரு...?"

"தெரியலையா? மனசாட்சி... பேசறேன்..."

மைத்ரேயி பதில் பேசாமல் மௌனமாய் இருக்க குரல் சிரித்தது. "எனக்குத் தெரியும்... என்மேல உனக்கு இப்போ ஏகப்பட்ட கோபம் இருக்கும். என்ன செய்யறது... கோபத்தைப் பார்த்தா முடியமா?"

"உனக்கு இப்போ என்ன வேணும்..?"

"ஒரு விஷயம் கேள்விப்பட்டேன்.... உண்மையா?"

"என்ன கேள்விப்பட்டே...?"

"உன்னோட கணவர் தினேஷ் இன்னிக்கு டெல்லி புறப்பட்டுப் போறாராமே...?"

"....."

"என்ன பதிலையே காணோம்...?"

"ஆமா... போறார்... அதுக்கென்ன இப்போ...?"

"உண்மையை ஒத்துக்கிட்டதுக்கு நன்றி... புருஷன் டெல்லி போயிட்டாங்கிற தைரியத்துல.... உன் தாலி கட்டாத புருஷனோடு சேர்ந்து ஆட்டம் போடாமே கோயில் குளத்துக்கு போய்ட்டு சுத்தமா இருக்கணும்.... எனக்கு ஆயிரம் கண்கள். எந்தத் தப்பை நீ பண்ணினாலும் சரி என்னோட கோர்ட்டுக்கு அந்தத் தப்பு வந்துடும்..."

"யூ.. ப்ளடி... பிட்ச்..." மைத்ரேயி அடித்தொண்டையில்– சத்தம் வெளியே கேட்காதபடிக்கு கத்திவிட்டு ரிஸீவரை 'த்தட்' டென்று சாத்தினாள்.

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: பி. இளமுருகன்.
வயது: 21
முகவரி: மார்க்கட் ஒழுங்கை, 5ம் வட்டாரம், உடப்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். பர்ஹான்.
வயது: 27
முகவரி: இஹலகம, கன்னத்தொட.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, வானொலி.

பெயர்: கே. பாலேந்திரன் சந்திரன்.
வயது: 26
முகவரி: 14, NORRIS ROAD, SINGAPORE- 208256.
பொழுதுபோக்கு: பத்திரிகை, சினிமா.

பெயர்: வி. ஜெயந்தினி.
வயது: 18
முகவரி: மாதர் வீதி, நொச்சிமுனை, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: பி. மிஸ்ருல் அஸான்.
வயது: 16
முகவரி: 46/4, மத்திய வீதி, கொழும்பு-12.
பொழுது போக்கு: உதைபந்து, கிரிக்கெட்.

பெயர்: எம். ஜவாஹிர்.
வயது: 20
முகவரி: P.O.BOX-15589, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: வானொலி.

பெயர்: எம். ஜமீக்.
வயது: 17
முகவரி: 106, பள்ளி வீதி, கல்ஹின்னை.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், தொலைக்காட்சி.

பெயர்: அகமட் எம். தஸ்தகீம்.
வயது: 22
முகவரி: 123, அனுக்கம, கம்பிரிகஸ்வெவ, அனுராதபுரம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: கே. மோகனதாஸ்.
வயது: 20
முகவரி: 54, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: ரீ.வி., கதைப்புத்தகம்.

பெயர்: எம். றொஷான்.
வயது: 20
முகவரி: 25, மாதெவட வீதி, மாத்தளை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: ரி. கோகுலதாசன்.
வயது: 21
முகவரி: FRANKEN STR-139, 90461 NURNBERG, GERMANY.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். முபீன்.
வயது: 24
முகவரி: இமாம் கொமைனி வீதி, காத்தான்குடி-2
பொழுது போக்கு: வழமையானவை.



படிப்பகம்

www.padippakam.com

# அத்தியாயம் 17

# கனவு மெய்ப்பட வேண்டும்

**இதுவரை** சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

**இனி...**

**ம**தியம் மூன்று மணிபோல், அவள் தன் அலுவலக பைல்களை எடுத்து வைத்துக்கொண்டு அவைகளில் ஆழ்ந்து போயிருந்தாள். கணேசன் தூங்கிக் கொண்டிருந்தான். அப்பா அப்போதுதான் காபியை அருந்தி விட்டு, பக்கத்தில் இருந்த காந்தி வாசக சாலைக்குச் சென்றிருந்தார். அம்மா, சமையல் அறையை ஒட்டிய அறையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தாள். திடுமென அவள் முன் வந்து நின்றான் கணேசன்.

"என்ன பண்றே?" என்றான்.

"ஆபீஸ் பைல்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"எடுத்து வைத்துவிட்டுக் கிளம்பு."

"எங்கே?"

"சினிமாவுக்குப் போகலாம்."

"சரி. மணி மூன்றுதானே ஆகிறது. ஐந்து மணிக்குக் கிளம்பினால் போதாதா?"

"நாலு மணி சினிமாவுக்குத்தான் கூப்பிடுகிறேன். பெரிய மேதை மாதிரி பேசாதே."

"சரி. துணி மாற்றிக் கொண்டு வருகிறேன்."

"சீக்கிரம் வா."

அவசரம் அவசரமாகக் குளியல் அறைக்குள்புகுந்து, முகம் கழுவி அவனுக்கு மிகவும் பிடித்த சிவப்பு கோட்டாவ் புடவையையும், அதற்கேற்ற ஜாக்கெட்டையும் அணிந்துகொண்டு அவன் முன் வந்து நின்றாள்.

"சினிமாவுக்குப் போறோமா, சினிமாவில் நடிக்கப்போகிறாயா?"

"ஏங்க?"

"உள்ளே இருக்கிறதெல்லாம் தெரியற மாதிரி உடுத்திக்கிட்டு வந்து நிக்கறே..."

உண்மையில் அந்தச் சேலையோ, ஜாக்கெட்டோ அப்படி இருக்கவில்லை. அவள் மிகவும் கூசிப்போனாள்.

மீண்டும் அறைக்குள் சென்று, கட்டியிருந்ததை அவிழ்த்துப் போட்டு, வெகு சாதாரணமான, மொத்தமான கஞ்சி போட்ட பருத்திச் சேலையை உடுத்திக் கொண்டு அவன் முன்போய் நின்றாள்.

"எவ்வளவு நாளாய் நீ என்னை அவமானப்படுத்த வேண்டும் என்று எண்ணம் கொண்டிருக்கிறாய்...?"

"ஏங்க?"

"இந்த மாதிரி, வேலைக்காரிங்க கட்டிக்கொள்கிற சேலையைக் கட்டிக் கொண்டு என்னுடன் வந்தால், பார்ப்பவர்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்?"

மனச் சங்கடத்துடன் நின்றாள் சுமதி.

"போய் வேறு ஒரு நல்ல புடவையை எடுத்துக் கட்டிக்கொண்டு வந்து தொலை. சரியாக ஐந்து நிமிஷம். உடனே புறப்படவேண்டும்....."

வேர்க்க விறுவிறுக்க மீண்டும் அறைக்குள் சென்று புதுப் புடவை ஒன்றை மஞ்சளும் கறுப்பும் கலந்த மிக அழகிய வண்ணத்தில் எடுத்து அணிந்து கொண்டு வெளியே வருகையில் காரில் அமர்ந்திருந்தான் கணேசன். புதுமணத் தம்பதிகளுக்குச் சௌகர்யமாக இருக்கட்டும் என்று அப்பா ஒரு புதுக்காரே சில நாட்களுக்கு வாடகைக்கு எடுத்துக் கொண்டுத்திருந்தார்.

சுமதி காரின் அருகில் சென்று கார்க் கதவைத் திறக்கப் போகையில் அவன் சொன்னான்,

"இரு. இந்த மாதிரி கண்ணைப் பறிக்கிற ஆடைகளில் எல்லாம் என் மனைவி தோன்றுவது எனக்கு இஷ்டமில்லை தேவடியாள்மாதிரி இருக்கிற நீ. முதலில் கட்டியிருந்த புடவையையே எடுத்து உடுத்திக் கொண்டு வா."

டிரைவர் திரும்பி அவனையும் அவளையும் மாறிமாறிப் பார்த்தான். அதுவரையில் சிரமப்பட்டு அடக்கி வைத்திருந்த அழுகை இவளை அறியாமலேயே வழியத் தொடங்கியது. மீண்டும் அறைக்குள் திரும்பி அந்த முதன் முதல் கட்டிய புடவையையே எடுத்துக் கட்டிக் கொண்டு திரும்பினாள் அவள்.

கார் போய் விட்டிருந்தது; கணேசன் போய் விட்டிருந்தான்.

**சு**மதி பத்து நாட்கள் விடுமுறை போட்டிருந்தாள்.

செயலாளர் முணுமுணுத்துக் கொண்டு தான் அந்த விடுமுறையையும் அவளுக்கு அளித்திருந்தார். ஆனாலும் நான்காம் நாளே அவள் பணிக்குத் திரும்பும்படியாகிவிட்டது.

"ஏன்? என்னைப் பிடிக்கலையா?" என்றான் கணேசன்.

"சேச்சே. அப்படியெல்லாம் இல்லீங்க. டில்லியிலிருந்து எம்.பி.க்கள் குழு ஒன்று வருகிறது. மாநில வளர்ச்சி பற்றிய முக்கியமான விஷயங்கள் பேச வேண்டும் என்று செயலாளர் கூப்பிட்டிருக்கிறார்."

"டில்லிக்காரன் உன்னைத்தான் பார்க்க வாரானாக்கும். அதாவது நீ அவ்வளவு பெரிய உத்தியோகம் பண்ணுகிறாய் என்று எனக்குத் தெரிய வேண்டுமாக்கும். அப்படித் தானே?"

அவள் விக்கித்துப் போய் நின்றாள். பிறகு சொன்னாள்:

"ரொம்ப முக்கியமான கூட்டம்ங்க. நான் அவசியம் போய்த்தான் ஆகணும்....."

"நீ போனா, அத்தோட ஒரேயடியா போயிடு: மீண்டும் திரும்பி வரக்கூடாது..."



"என்ன இப்படிப் பேசறீங்க? முக்கியமான கூட்டம் இல்லைன்னா, நான் போவேனா?"

"என்னைவிடக் கூட்டம் உனக்குப் பெரிசாப் போச்சா?"

"ஐயோ, அப்படி இல்லைங்க...எம்.பி.க்கள் ஏதாவது ரிப்போர்ட் எழுதினா வம்பாப் போயிடும்."

"டில்லிக்காரன் முன்னாலே உனக்கு ஆடணும். அவ்வளவுதானே? செய்..."

அவள் போகத்தான் செய்தாள். கூட்டம் மதியம் கடந்து, மாலையையும் கடந்து, இரவு எட்டு மணிக்குத்தான் முடிந்தது. அலுவலகக் காரில் வீட்டுக்குத் திரும்பிய சுமதி கதவை நெருங்கி, அழைப்பு மணியை ஒலித்தாள். மீண்டும் மீண்டும் ஒலித்தாள். மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டேயிருந்தாள்.

கதவு திறக்கப்படவேயில்லை.

மனிதரை மனிதர் இழிவு செய்வது என்று தீர்மானித்துவிட்டால், அந்தச் சரிவுக்குத்தான் அளவேது?

சுமதியைப் பால்காரன் முதல் அவள் மேலதிகாரிவரை அனைவரோடும் இணைத்துப் பேசத் தொடங்கினான், கணேசன். காலை நாலரை மணியிலிருந்து ஐந்துமணிக்குள் வருபவன் பால் பொட்டலம் போடும் நவநீதகிருஷ்ணன். ஒரு நாள் தற்செயலாக அவனுடன அவளுக்குப் பேச நேர்ந்தது. பார்வைக்கு வசீகரமாகவும், நடத்தையில் மிக அடக்கமானவனாகவும் அவன் இருந்தான். படித்த இளைஞன் மாதிரிகூட அவளுக்குப்பட்டது. சுமதியிடம் ஒரு பழக்கம் இருந்தது. சுயமுயற்சியில், வாழ்க்கையின் மேல் நிலைக்கு வரப்போராடும் யாரையும் அவள் எதிர்ப்பட நேர்ந்தால் அந்த மனிதருடன் பேசுவதும், தன் பதவி, அந்தஸ்து ஆகியவைகளைப் பயன்படுத்தி அவருக்கு உதவுவதும் அவள் தன் வாழ்க்கைக் கடமைகளில் ஒன்றாகவே கருதினாள். அந்த உணர்வுடன் தான் நவநீதத்துடன் அவள் பேசினாள்.

"நான் எம்.ஏ. வரலாறு படிக்கிறேன். மேடம். அப்பா இல்லை. அம்மா மட்டும் உண்டு. அம்மா இரண்டு வீடுகளில் வீட்டு வேலைகள் செய்கிறாள். குடும்ப சம்பாத்தியம் மிகவும் குறைவு. என் செலவுக்கும், சமயங்களில் படிப்புச் செலவுக்கும் நான் சம்பாதிக்க வேண்டித்தான் இருக்கிறது. அதிகாலை மூன்று மணிக்கு வரும் பால் வேனுக்குக் காத்திருந்து, பூத்திலிருந்து பால் பொட்டலங்கள் வாங்கி அந்தக் காலனிக்குப் போட்டு முடிய ஐந்து மணி ஆகும். அப்புறம், ஒரு பேப்பர் ஏஜெண்ட்டிடம் பேப்பர் போடும் வேலை. எல்லாம் முடிய ஏழுமணி ஆகும். அப்புறம் குளித்துக் கல்லூரி போவேன்."

ஒரு வைகறைப் பொழுதில் அவன் சொன்ன கதையைக் கேட்டு அவள் நெஞ்சம் அன்பு சுரந்து, அழச் செய்தது. உடனே தனக்குள் ஒரு முடிவுக்கு வந்தாள். மாவட்ட நூலக அதிகாரியை அழைத்து, நூலகங்களுக்கு பத்திரிகை, வார, மாத இதழ்கள் போடும் பொறுப்பை மிகுந்த சிரமத்துக்குப் பிறகு அவனுக்கு வாங்கித் தந்தாள். இது தொடர்பாக, அவனுடன் பலமுறைகள் அவள் பேச வேண்டியிருந்தது. காலை நாலுக்கும் நாலரைக்கும் வரும் அவனை விழித்திருந்து, அவள் சந்திக்க வேண்டியிருந்தது. அத்தனை காலைப் பொழுதில் வீட்டுக்குள்ளும் அவனை அமர்த்திப் பேச முடியாததோடு, அதனால் அவன் வேலை வேறு பாதிக்கப்படலாம். ஆகவே தெரு வாசலிலேயே அவனை அவள் சந்தித்துப் பேசினாள். மாவட்டத் தலைநகரில் இருக்கும் நூலகங்கள் அனைத்துக்கும் பத்திரிகை கள் போட வேண்டு மெனில், கொஞ்சம்

**பிரபஞ்சன்**

மொத்தமாகப் பணம் அவனுக்குத் தேவைப்பட்டது. அதற்கும் அவள் ஏற்பாடு செய்தாள். ஒரு வாரம் காலை நேரங்களில் இந்த வேலை அவனுக்கு வாய்த்தது. ஒருநாள் பேப்பரும், கையுமாக அறைக்குள் அவள் நுழைகையில், தெருவைப் பார்த்த ஜன்னலைப் பிடித்துக் கொண்டு கணேசன் நிற்பதைப் பார்த்தாள்.

"எத்தனை நாளாய் இது நடக்குது?"

"எதுங்க?"

"கள்ளக் காதல்!"

சுரீர் என்று யாரோ தன் மேல் சாட்டையைச் சொடுக்கியது மாதிரி இருந்தது அவளுக்கு.

"என்ன சொல்றீங்க? கேக்கவே அசிங்கமா இருக்கு."

"பத்தினி மாதிரிப் பேசாதே. விடியற்காலை நாலு மணிக்கு அந்தப் பையனோட என்னடி குழையல் வேண்டிக்கிடக்கு."

"என்ன இப்படிப் பேசறீங்க? பாவம் காலேஜ்ல படிக்கிற பையன். கஷ்டப்படறானேன்னு ஏதோ உதவி செய்தேன். அவ்வளவுதான். அதைப்போயி....."

"ஷிப்ட் முறையில் உதவியாடி? ராத்திரி பத்து மணியிலிருந்து பன்னிரண்டு வரைக்கும் நான். அப்புறம் நாலு மணிக்கு மேலே அவனா?"

அவளுக்கு உடம்பு கொதிக்கத்தான் செய்தது.

"இப்படிப் பேச உங்களுக்கு வெட்கமா இல்லை?"

அதற்குப் பதிலாக அவன் அவளை அறைந்தான்.

காய்கறி வாங்கக் கடைக்குச் செல்வதற்கும், சின்னச் சின்ன ஏவல்களைச் செய்வதற்கும் என்று ஒரு பையன் இருந்தான். அந்தப் பையனை வேலையை விட்டு நிறுத்தினான் கணேசன்.

"ஏன்?" என்றாள் சுமதி.

"உனக்கென்ன கேடு? காலை நேரத்தில் என்ன வெட்டிச் சாய்க்கிறே. நீயே போய் வந்தால் என்ன?" என்றான் கணேசன்.

காலை நேரத்தில் அவள் அலுவல் தொடர்பாகப் பலர் அவளைப் பேட்டி காண வந்து சென்றார்கள். எப்பவும் வாசலில் கார்களும், வரவேற்பறையில் மனிதர்களுமாக, அவளைச் சுற்றி எப்பவும் கூட்டமாக இருந்தது. அது கணேசன் மனதில் பொறாமையை விதைத்தது. அதன் பின், அவளே காய்கறி வாங்கக் கடைக்குப் போகும்படி ஆயிற்று. போனாள்.

வரிசையாக இருந்த காய்கறிக் கடைகளில் முதல் கடையில் அவள் வாடிக்கையாக வாங்குவது என்று தீர்மானமாயிற்று.

ஒரு வாரத்துக்குள், அவள் குடும்பத்துக்கு என்ன காய்கறித் தேவை என்பதையும், என்ன அளவு என்பதையும், கடைக்காரன் புரிந்து கொண்டான். ஒருநாள் அவனே சொன்னான்,

"உங்களுக்கு என்னத்துக்கம்மா கஷ்டம்? நானே காய்கறிகளை அனுப்பி வைச்சுடறேனே..."

அவளுக்கும் சரியென்று பட்டது. காலை நேரங்களில் அவள் பார்க்க வேண்டிய பைல்கள் நிறைய இருந்தன. ஆகவே, சமயங்களில் கடைக்காரனே வந்து போனான். ஒரு முறை பாவக்காய் கொண்டு வந்திருந்தான்.

"சின்னசாமி இனிமே பாவக்காய் வேணாம்..." என்றாள், சுமதி.

"ஏம்மா, உடம்புக்கு நல்லதாச்சுங்களே..." என்றான் அவன்.

"எனக்குப் பிடிக்கும். ஆனா, இங்கே இருக்கிறவர்களுக்கு அது பிடிக்கிறதில்லை..."

"உங்க வீட்ல இருக்கிறவங்களுக்கு நல்லதையே பிடிக்காதுபோல...." என்றான் அவன்.

எதை நினைவில் கொண்டு சொன்னானோ, தெரியவில்லை. ஆனால், சிரிக்கத் தோன்றியது அவளுக்கு. அவள் வரவேற்பறை சோபாவிலும், அவன் அறைவாசலிலும் நின்றவாறும்தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரம் கணேசன் அங்கு தோன்றினான். சின்னசாமி போன பிறகு அவன் கேட்டான்,

"என்னடி காய்கறிக் கடைக்காரனிடம் சிரிப்பும், கொஞ்சலும், குலாவலும். கடைசியாக, காய்கறிக்கடைக்காரன் வரைக்கும் வந்துட்டியா?"

அன்று முழுக்க வரவேற்பறையிலேயே அமர்ந்திருந்தாள் சுமதி.

அலுவலகத்தில் நிறைய மீட்டிங்குகள் நடைபெறலாயின. கவர்னர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அடிக்கடி கவர்னர் உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கொண்டிருந்தார். சந்திப்பு இரவு பத்து, பதினொரு மணி வரைக்கும் கூட நடைபெறலாயின.

**(தொடர்ந்து வரும்)**

# சிறகுகளும் சிலுவைகளும்

**டே**விட்டின் கையில் கிடார் இருந்தது. உதடுகளின் மெல்லிய அசைவில் இனிமையான கீதம் பிறந்தது.

சஹானாவும் ஜூலியும் இசையின் இனிமையில் லயித்து இமை மூடியிருந்தனர். பாடலை முடித்து டேவிட் சிரித்தான்.

"பாட்டை கேட்டீங்களா இல்லை? அப்படியே தூங்கிட்டீங்களா?" அவன் கழுத்தில் தொங்கிய மாலையில் தங்கச் சிலுவை பளபளத்தது. பார்த்த ஜூலியும் சஹானாவும் புன்னகைத்தனர்.

ஜூலி-டேவிட்டின் தங்கை. சஹானா ஜூலியின் நண்பி. டேவிட் நல்ல சிவந்த நிறம். அழகான தோற்றம் மட்டுமல்ல வளமான குரலுக்கும் சொந்தக்காரன். சஹானா ஜூலியைச் சந்திக்கவரும் பொழுதுகளில் டேவிட்டை காண்பாள். பாடச் சொல்லிக் கேட்பாள். மறுக்காமல் பாடுவான். சிரித்துப் பேசுவான்.

கழுத்திலுள்ள சிலுவையை விரல்களால் வருடியபடி கேட்டான், "இது நல்ல பாடல் இல்லியா சஹானா? 'உன் இதயத்தை வெற்றி கொள்வதெப்படி' அப்படின்னு கேட்கிறான் அவன். இதே கேள்வியை நான் உங்கக் கிட்ட கேட்டா என்ன சொல்வீங்க?" டேவிட் சிரித்தவாறு கேட்டுவிட்டு அவள் முகத்தை ஆவலுடன் பார்த்தான்.

"ம்... என்ன சொல்வேனா? என் இதயம் என்கிட்ட இல்ல. அதை நான் கழட்டி வீட்டில வெச்சுட்டு வந்துட்டேன்னு சொல்வேன்." சஹானா சொல்ல ஜூலி, டேவிட் சிரித்தனர்.

"மதம், சமுதாயம், சம்பிரதாயம், சட்ட திட்டம் இதையெல்லாம் தாண்டி நீ என்னோட அண்ணனைக் காதலிச்சா என்னடி? உனக்கு துணிவிருக்கா? அண்ணனுக்கு எப்பவுமே உன் மேல நல்ல பிரியம். நானும் சப்போர்ட். எங்க வீட்லன்னா எதிர்க்க மாட்டாங்க. என்ன சொல்றே?" தனிமையில் ஜூலி சஹானாவிடம் கேட்க சஹானா மௌனமாயிருந்தாள். பின்னர்,

"முடியாது ஜூலி. என்ன மன்னிச்சிடு. இது நடக்கமுடியாது. உங்க அண்ணனை நல்ல நண்பனாத்தான் நினைக்கறேன். அவ்வளவுதான் ஜூலி. வேற ஒண்ணுமில்லை." அமைதியாக- உறுதியாகக் கூறினாள் சஹானா.




ஜூலி சஹானாவின் சம்மதம் கேட்க வீடு தேடி வந்திருந்தாள். அவளுக்கு ஏமாற்றமாயிருந்தது. "ஏண்டி பொய் சொல்றே? உன்னை நீயே ஏமாத்திக்கிறே. உன் கண்களிலேயே காதல் தெரியுதும்மா. மறைக்காதே, சொல்லிடு."

"விளையாடாதே ஜூலி. இல்லைன்னா இல்லைதான். மேலே மேலே பேசி என் கோபத்தைக் கிளறாதே." சூடாகச் சொன்னாள் சஹானா. ஜூலிக்கும் கோபம். "நீயொரு கோழை சஹானா. மதம், சமுதாயம் எல்லாத்தையும் தாண்டி வர உன்னால முடியாது. நெஞ்சில துணிவில்ல. எனக்குத் தெரியும். இது அந்த முட்டாள் டேவிட்டுக்குப் புரியலியே. நான் வர்றேன்." முகம் சிவக்கக் கூறிவிட்டு வெளியேறினாள்.

அன்று துண்டிக்கப்பட்ட நட்பு பல வருடங்களின் பின்பு தற்செயலாக மீண்டும் சஹானா ஜூலியைப் பார்த்தபோது மீண்டும் துளிர்த்தது. அதே சிரிப்பு: அதே பேச்சுடன் ஜூலி சகஜமாகப் பேசினாள். "உனக்கு எத்தனை லெட்டர்ஸ் போட்டேன் ஏண்டி

**ஷர்மிளா இஸ்மாயில் – கண்டி**

பதிலே போடலை? அத்தனை கல் மனசுக்காரியா நீ?" கேட்டாள். "எதுவுமே கிடைக்கலைடி. நாங்க வேற வீடுமாறிட்டோம். நீ பழைய முகவரிக்கு அனுப்பியிருப்பாய் இல்லியா? நான் கூட உனக்கு லெட்டர்ஸ் எழுதினேனே! கிடைச்சுதா? நீ மட்டும் என்ன? பதிலே போடலியே?" திருப்பிக் கேட்டாள் சஹானா.

"ஐயோ சஹா, நாங்க சிலோன்லயே இல்லடி. குடும்பமா எல்லோரும் கனடா போய்ட்டோம். அந்த நேரக் கோபம். உன் கிட்டகூட சொல்லலை நான். மன்னிச்சிடு என்ன?" ஜூலியின் முகத்தில் சின்ன மாறுதல், எதையோ நினைத்தவள் போல சஹானாவும் அதை உணர்ந்தவள் மௌனமாயிருந்தாள். சஹானாவின் மனது கனத்தது. 'டேவிட் எப்படியிருக்கிறான்? என்ன செய்கிறான்? எப்படிக் கேட்பது இவளிடம்?' தடுமாறினாள் சஹானா. அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஜூலி. பெருமூச் சொன்று அவளையறியாமல் வெளியேறியது. கண்களில் ஈரம் படிந்தது. சிரித்த முகம் வாடிப்போனது.

"சஹா" என்று மெதுவாய்ச் சொன்னவள் கைப்பையைத் திறந்து எதையோ எடுத்தாள். "இந்தா உன்னை எங்கிட்ட காட்டின இறைவனுக்கு நன்றி சொல்லணும். என்கிட்டேயே வெச்சிருந்தேன்; இன்னைக்கு நான் நிம்மதியா இருக்கலாம்." கைகளில் திணித்தாள்.

பிரித்த சஹானா அதிர்ந்தாள்.

தங்கத்தினாலான சிறிய சிலுவை. "கார் விபத்துல டேவிட் செத்துப் போயிட்டான். கடைசி ஆசையா இதை உன்கிட்ட எப்படியாவது கொடுத்திடச் சொன்னான். காதலைத்தான் மறுத்திட்டே! கடைசி ஆசையையாவது நிறைவேத்திடுவே இல்ல?" நடுங்கும் விரல்களாலும் அழும் மனத்துடனும் கழுத்தில் மாலையுடன் சேர்த்து சிலுவையைக் கோர்த்துக் கொண்டாள் சஹானா.


படிப்பகம்

www.padippakam.com

அம்மாவின் அதட்டல் டிலானிக்குப் பிடிக்கவில்லை. அது அவளின் மனதில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. சரியோ, பிழையோ தான் சொல்வதைத்தான் கேட்கவேணுமாம். மேற்கொண்டு அவளை வாயே திறக்கக் கூடாதாம்!

இந்த அடக்குமுறையைத்தான் அவளால் பொறுக்கமுடியவில்லை. அவளுக்கும் மனம் ஒன்று உண்டு. அந்த மனத்திலும் ஆசை, விருப்பு-வெறுப்பு இவைகள் அடங்கியிருக்கின்றன. அதைவிட மனச்சாட்சி நிறைந்திருக்கின்றன.

**"பாசத்துடன் வளர்த்தாலும் தாய் சொல்லைத் தட்டாத பெண்ணாகத்தான் இருந்தாள்"**

# அம்மாவின் மனம் வெள்ளை மனம்



**கலுவாஞ்சிக்குடி யோகன் - அவுஸ்திரேலியா**

இவைகளை விட்டுக் கொடுக்க டிலானி இப்போ தயாராக இல்லை. இதுநாள்வரை அம்மாவின் வார்த்தைகளுக்குத் தலையாட்டியது போதும். இனிமேலும் நியாயங்களை விட்டுக்கொடுக்க முடியாது. அதனால் அம்மா சொன்ன 'என்ஜினியர்' மாப்பிள்ளையைச் சம்மதிப்பதில்லை என்று முடிவு பண்ணினாள் டிலானி.

அதற்காக அவள் அடக்கமில்லாதவள் என்று அர்த்தமில்லை. தந்தையில்லாத அவளை தாயார்தான் மிகவும் பாசமாக வளர்த்து ஆளாக்கினாள். பாசத்துடன் வளர்த்தாலும் தாய் சொல்லைத் தட்டாத பெண்ணாகத்தான் டிலானி வளர்ந்தாள். அவளுக்கு இப்போ இருபத்தியொரு வயது தொடங்கியிருந்தது.

டிலானி 'அட்வான்ஸ்லெவல்' சித்தியெய்தியபோது 'யூனிவர்சிற்றி'க்கு இடங் கிடைத்தது. நாட்டு நிலமையைக் காரணங் காட்டி தாய் தடுத்தாள். அதை ஏற்றுக்கொண்டு ஏதாவதொரு வேலையில் சேரலாமென்று, பொருத்தமானதொரு வேலைக்கு விண்ணப்பித்தாள் டிலானி.

நேர்முகப் பரீட்சைக்கு தலைநகருக்கு அழைத்திருந்தார்கள். அதனால் தாயும், மகளும் கொழும்பிற்குப் புறப்பட்டு ஒரு 'லொட்ஜில்' தங்கியிருந்தார்கள். அங்கேதான் டிலானியின் தாயார் தனது உறவு துண்டித்துப்போன- இரத்த உறவுள்ள ஒரு சொந்தத்தைச் சந்தித்தாள்.

அவளின் தாய் யாழ்மாவட்டத்தில் பிறந்து வளர்ந்தவள். ஆரம்பகாலத்தில் தனது தாதித் தொழிலுக்காக மாற்றம் கிடைத்து திருமலைக்கு வந்தாள். வந்த இடத்தில் ஆசிரியரொருவரை விரும்பி மணஞ்செய்து அங்கேயே தங்கிவிட்டாள். திருமலையில் மணஞ்செய்தது சொந்தங்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவளை அந்தப் பழமைவாதிகள் ஒதுக்கிவைத்து தொடர்புகளை துண்டித்துக்கொண்டனர்.

டிலானியின் அப்பா இறந்தபோது அறிவித்தும் கூட யாரும் வரவில்லை. இதனால் அவளின் அம்மாவிற்கும் அவர்களின் மேல் கோபம் அதிகமாகவேயிருந்தது. இவைகள் எல்லாம் மறையும் நினைவுகளாகியிருந்தன.

அன்றைக்கு அவளது தாய் தனது சகோதரனின் மனைவியைக் கண்டதுமே எல்லாவற்றையும் மறந்துபோனாள். இருவரும் பாசமழை பொழிந்து பரஸ்பரம் விசாரித்தார்கள்.

டிலானியைத் தாய், அவளது அத்தைக்கு அறிமுகஞ்செய்தாள். அவளைப் பார்த்த அத்தை பரவசப்பட்டுப்போனாள். அவளது அடக்கமும் அழகும் அந்த அத்தையைக் கவர்ந்தன.

அத்தை தனது பிள்ளைகளைப் பற்றிப் பேசினாள். தனது மூத்தமகன் கபிலுக்கு இருபத்தாறு வயதென்றும் அவன் இப்போ சுவிஸில் இருப்பதாகவும் சொன்னாள். அவனுடன் ரெலிஃபோன் கதைத்துவிட்டு, அனுப்பிய பணத்தை எடுத்துக்கொண்டு போகத்தான் வந்திருப்பதாகக் கூறினாள்.

தான் வைத்திருந்த மகனின் படத்தை அவர்களுக்குக் காட்டி மகிழ்ந்தாள் அத்தை.

அதைப் பார்த்த டிலானியின் அம்மாவிற்கு உள்ளம் பூரித்துப் போயிற்று. இருவருமே நிறைய மனம்விட்டுக் கதைத்தார்கள். விட்டுப்போன உறவுகளைப் புதுப்பிக்க வேணுமென்றார்கள்.

சுவாரசியமான பேச்சுக்களுக்கிடையே "சுவிஸிலிருக்கும் மகன் கபிலைப் பிடித்திருக்கிறதா?" என்று டிலானியிடம் அத்தை கேட்டாள். அவளுக்கு வெட்கம் வந்தது. "அம்மாவின் முடிவுதான் என் முடிவு!" என்றாள் அவள்.

"அவள் நான் வளர்த்தபிள்ளை. என் பேச்சை மீறமாட்டாள்," என்றாள் தாய். அப்போது அவர்களாகவே டிலானிக்குக் கபில்தான் கணவர் என்று முடிவு பண்ணினார்கள். அன்றைக்கே அத்தைமகன் கபிலுடன் டிலானி ரெலிஃபோனில் கதைத்தாள்.

அவளுக்கும் கபிலுக்கும் காதல் பரிமாற்றங்கள் கடித மூலம் தொடர்ந்துகொண்டு வந்தன.

♡ ♡ ♡

அவளின் கிராமத்தில் எல்லோரும் கௌரவிக்கின்ற குடும்பமென்றால் அது பாலசிங்கம் குடும்பமாகவேயிருந்தது. அவர்களிடம் ஏகப்பட்ட பணம் இருந்தாலும் மற்றவர்களை மதிக்கின்ற குணமும் தாராளமாக இருந்தது. பாலசிங்கத்தாரின் மனைவி டிலானி மீது ஒரு கண் வைத்திருந்தாள். தனது மகன் சசியின் 'யூனிவசிற்றி' படிப்பு முடிந்ததும் டிலானியைப் பெண்கேட்க நினைத்திருந்தாள். அந்தச் சசி இப்போ பட்டப்படிப்பை முடித்துவிட்டு மட்டக்களப்பில் பொறியியலாளராகக் கடமையாற்றுகிறார். அதனால் டிலானியின் அம்மாவிடம் டிலானியை தனது மகனுக்குத் திருமணம் பேசினாள்.

"அவளுக்கு ஏற்கனவே திருமணம் முற்றாகிவிட்டது. என்னுடைய சொந்த மருமகன்தான் மாப்பிள்ளை; அவர் இப்போ சுவிஸில் இருக்கிறார். அவரைத்தான் செய்து கொடுப்பதாக எண்ணம்," என்று டிலானியின் தாய் நாசூக்காக மறுத்தாள். ஏற்கனவே டிலானியை மருமகளாக்க நினைத்து வைத்திருந்ததைக் கூறிய அந்தத் தாய், சுவிஸ் மாப்பிள்ளை என்றதும் அங்குள்ள சாதகமான விடயங்களை மறைத்து, பாதகமான விடயங்களை மட்டும் மிகைப்படுத்திச் சொல்லியிருக்கிறாள். மொத்தத்தில் டிலானியின் அம்மாவின் மனதைக் குழப்பிவிட்டாள் அந்தத் தாய்.

அதனாலோ என்னவோ! தன் ஒரே மகளை அயல் நாடு அனுப்புவதில்லையெனவும், தான் உயிருடன் இருக்கும்வரை மகளின் குடும்பம் தன் அருகில் இருக்கவேண்டும் எனவும் டிலானியின் அம்மா தீர்மானித்தாள்.

எதற்கும் தலையாட்டும் மகள் இதற்கும் தலையாட்டுவாள் என நினைத்துத்தான் கபிலின் தொடர்பை விட்டுவிடும்படி வற்புறுத்திக் கொண்டிருக்கிறாள்.

"என்ஜினியர் சசிதான் உனக்கு மாப்பிள்ளை, அவருக்கும் உனக்கும்தான் கல்யாணம்!" என்று சொல்லிவிட்டாள்.

தனது வாழ்க்கைப் பிரச்சனையில் டிலானி விட்டுக்கொடுக்கவில்லை.

"நான் கபில் அத்தானைத்தான் செய்வேன்!" என்று அவளும் பிடிவாதமாக நின்றாள். ஆனால் தாய் விடவில்லை. தான் அவர்களுக்கு வாக்குக்கொடுத்துவிட்டதாகச் சொன்னாள். தான் உயிருடன் இருப்பதென்றால் தனது வாக்கைக் காப்பாற்றும்படியாக இன்று ஒரு முடிவு சொல்லவேணுமென்றும் கேட்டிருந்தாள்.

மாலை ஐந்து மணியாகியது. டிலானியின் அலுவலக நேரம் முடிந்தது. அவள் ஆறுமணிபோல் வீடு வந்து சேர்ந்தாள். மகளுக்குத் தேநீர் கொண்டு வைத்த தாய். "என்ஜினியர் சசியைத்தானே செய்வதாக முடிவெடுத்திருக்கிறாய்?" இறுதி முடிவைக் கேட்டாள்.

"அம்மா!" சற்று ஆவேசமாக அழைத்தாள் டிலானி.

"நான் அம்மாதான் சொல்லு!" என்றாள் தாய்.

"கபில் அத்தானைப் பேசியதும் நீங்கள். இப்பொழுது என்ஜினியர் மாப்பிள்ளையைச் செய்யச் சொல்வதும் நீங்கள்! இதே நீங்கள் நாளை ஒரு டொக்டர் வந்தால் அவரைத்தான் செய் என்று சொல்லமாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம்? இது மனம் அம்மா! நீங்களும் பெண்தான். உங்களுக்குப் புரியும். மனதில் ஒருவரை நினைத்தால் அதை அழிப்பது சுலபமில்லை. நீங்களே உறவுகளை வெறுத்து விரும்பியவருடன் இங்கு வந்து வாழவில்லையா?"

மௌனமாகவே கேட்டுக்கொண்டிருந்த அவளது தாய், "அப்போ நான் போய் முடிவைச் சொல்லிவிட்டு வருகிறேன்," என்று எழுந்தாள். என்ன முடிவு என்பதுபோல டிலானி தாயைப் பார்த்தாள்.

"உங்களின் சம்பந்தத்திற்கு எங்களுக்கு இஷ்டமில்லை, என்ற முடிவைத்தான்," என்று எழுந்தவள் பாலசிங்கத்தாரின் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள். ■

---

**மணி சரியாக நாலு. வித்தியாவைச் சந்திக்கும் தீவிரம்.. அதற்கிடையே தொலைபேசி அழைத்தது.**

# அவசரம்



**ரூபராணி**

டாக்டர் ஜெயபால் அழகாக உடையணிந்து கண்ணாடியில் தன் முகத்தை மீண்டும் ஒரு முறை பார்த்துக் கொண்டார். அவருடைய மனதில் இருந்த மகிழ்ச்சி உதட்டில் புன்னகையாய்த் தவழ்ந்தது.

டாக்டர் ஜெயபால் அவசரமாக அவர் காதலி வித்தியாவைச் சந்திக்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். "சந்திப்போமா சந்திப்போமா தனிமையில் நம்மைப் பற்றிச் சிந்திப்போமா?" என்று மெதுவாக முணு முணுத்துப் பாடினார்.

தன் மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்தார் டாக்டர் ஜெயபால். மணி சரியாக, நாலு. நாலரை மணிக்குள், வித்தியாவைச் சந்திக்க வேண்டும் என்ற தீவிரம்... அதற்கிடையில் தொலைபேசி அவரை அவசரமாக அழைத்தது.

"டாக்டர் ஒரு ஆக்சிடென்ற் கேஸ். நிலைமை சீரியஸாகத் தெரிகிறது. டாக்டர் ஸ்ரீதரனும் இன்றைக்கு லீவு. நீங்க வந்தால் அந்த உயிரைக் காப்பாற்றி விடலாம் போல் தோணுது. ஏதாவது ஆகி விடுமுன் தயவு செய்து நீங்க வந்தால் நல்லது!" ஆஸ்பத்திரியிலிருந்து தலைமை நர்ஸ் செய்தி சொன்னாள்.

"ஹலோ.. சிஸ்டர் நான் ஒரு மணித்தியாலத்துக்கு முன்புதான் ஆஸ்பத்திரியை விட்டுக் கிளம்பினேன். இப்போ எனக்கு அவசரமாய் ஒரு அப்பொயின்றமென்ற். ஐ காண்ட் அற்ரெண்ட். நீங்க ஜூனியர் டாக்டர் அல்விசைக் கொண்டாக்ட் பண்ணுங்க. இரத்தப் போக்கு அதிகமானால் இரத்தங்கொடுக்கவும் ஏற்பாடு செய்யுங்கள். நான் அனேகமாக ஆறு மணிக்குள் வந்து விடுவேன்!" றிசீவரை வைத்தார் டாக்டர் ஜெயபால். நெற்றியில் அரும்பிய வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றித் துடைத்தார். அவருக்குக் கோபம் அடுப்புத் தணலாய் எரிந்தது.

'சை, என்ன தொழில் இது! கொஞ்சங் கூட றிலக்ஸ் பண்ண முடியாத வாழ்க்கை? இரவென்றுமில்லை பகலென்றுமில்லை, டாக்டர்கள் காதலிக்கக் கூடாதா? என்ஜோய் பண்ணப்படாதா?' இப்படி அலுத்துக் கொண்டபோது டாக்டர் ஜெயபாலுக்கு அவருடைய அண்ணன் சண்முகத்தின் ஞாபகம் மனதைப் பிறாண்டியது.

ஜெயபாலும் சண்முகமும் பெற்றவர்களை இழந்து கஷ்டப்பட்ட நேரமது. அண்ணன் சண்முகம் தன்படிப்பை நிறுத்திவிட்டு தனக்கென்று வாழாமல் தன் தம்பியைப் படிப்பித்து டாக்டராக்கி விட வேண்டுமென்று பட்ட கஷ்டங்கள்... ஓய்வு ஒழிச்சலின்றிப் பார்த்த பல வகைப்பட்ட தொழில்கள்.. டாக்டர் ஜெயபாலின் நெஞ்சில் கடல் அலையாக வந்து மோதியது. கடமையும் காதலும் போராடின. கடமை தோற்றது. விர் என்று காரில் விரைந்துவிட்டார் டாக்டர் ஜெயபால் காதலியைச் சந்திக்க.

பேராதனைப் பூங்காவில் வித்தியா காத்திருந்தாள். நேரங்கடந்து வந்ததற்கு அவள் முகங்கோணினாள். வித்தியாவைச் சமாதானப்படுத்தி வழமைக்குத் திருப்ப டாக்டர் ஜெயபாலுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. ஊடல் மறந்து நாணினாள் வித்தியா. இருவரும் காதல் உலகில் கவலையை மறந்து களித்தனர். மணி ஆறை நெருங்குவதை டாக்டர் ஜெயபாலின் கைக்கடிகாரம் காட்டியது. அவர் எழுந்துவிட்டார். வித்தியாவை அவள் வீட்டில் ட்றொப் பண்ணி விட்டு புயல் வேகத்தில் அவருடைய கார் ஆஸ்பத்திரியை நோக்கிப் பறந்தது.

காரைவிட்டு இறங்கிய டாக்டர் ஜெயபால் அவசர கேஸ் வார்டுக்குள் நுழைந்தார். தலைமை நர்சும் டாக்டர் அல்விசும் வெளியேறிக் கொண்டிருந்தனர். "எப்படியிருக்கிறது அந்தக் கேஸ்?" டாக்டர் ஜெயபாலன் கேள்வி, எழுப்பினார்.

"சொறி டாக்டர், வீ குட் நொட் ஹெல்ப்." பதில் சொல்லிய டாக்டர் அல்விஸ், தலைமை நர்ஸ் ஏனைய நர்ஸ்சுகள் சகிதம் டாக்டர் ஜெயபாலை அழைத்துக்கொண்டு பதின்மூன்றாம் இலக்கக் கட்டிலை அணுகினார்கள்.

அதன் மீது மூடியிருந்த வெள்ளைத் துணியை நர்ஸ் அகற்றுகிறாள். பன்டேஜ் துணிகளின் கட்டுகளுக்கிடையே இரத்தக் கோலத்தில் கிடந்த அந்த முகத்தை உற்றுப் பார்க்கிறார் டாக்டர் ஜெயபால். அவர் இதயம் வெடித்துச் சிதறியது. அந்த முகம் அவர் அண்ணன் சண்முகத்தினுடையது. ■

---

**"உன்னுடைய தங்கச்சியின் கையைப் பிடித்து இழுத்தனாங்களா?" இளைஞனின் கேள்வி கரனை கோபப்படுத்தியது.**

# பொழுதுபோக்கு



**யாழ். மு. கலை**

கோயில் மணி சீரான கதியில் ஒலித்துக்கொண்டிருந்தது. தேர்கள் பவனி வரத் தயாராகி விட்டன என்பதை பக்தர்களுக்கு சொல்லிக்கொண்டிருந்தது.

கோயில் வீதியெங்கும் பக்தர்கள் நிறைந்து காணப்பட்டனர்.

மணி ஒலித்து ஓய்வுக்கு வர, தேர்கள் நகரத் தொடங்கின. தேர்களில் பொருத்தப்பட்டிருந்த மணிகள் ஒன்று சேர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தன.

தேரில் பவனி வரும் அம்பாளின் அருளைப் பெற வந்த அடியார்கள் அம்பாளின் தேருக்கு முன்னும் பின்னும் பிரார்த்தனையுடன் சென்று கொண்டிருந்தனர். அதேவேளை வீதிகளில் 'நடமாடும் அம்பாள்' களை வணங்கி, அவர்களின் அருள் வாக்கைப்பெற பல 'பக்தர்கள்' வந்திருந்தனர்.

கரனும் அவனது நண்பர்களும் அந்தத் தொகுதிக்குள்ளேயே உள்ளடங்குகிறார்கள். பெண்பிள்ளைகளுக்கு நக்கல் சொல்வதும், வம்புக்கு வலிந்து இழுப்பதுமாக கரனும் அவன் நண்பர்களும் தமது செயற்பாடுகளை கோயில் வீதிகளில் மேற்கொண்டிருந்தனர்.

தங்கள் செயலை மற்றவர்கள் அவதானித்துக் கொண்டிருப்பார்களே, என்ற சிந்தனை துளிகூட இல்லாது, பெற்றோருடன் வரும் பெண்பிள்ளைகளுடன் கூட சேட்டை செய்துகொண்டிருந்தார்கள்.

இளைஞர்களின் நக்கல் பேச்சுக்களையும், சேட்டைகளையும் விரும்பி இரசிக்கும் பெண்பிள்ளைகளும் அக்கூட்டத்தில் இல்லாமலில்லை. அவர்களுக்கு கரனினதும் நண்பர்களினதும் செய்கைகள் இனிப்பாகவே இருந்தது.

கரனும் நண்பர்களும் கோயில் வீதியை சுற்றிச் சுற்றி தமது நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தனர்.

நண்பர்கள் எல்லோரும் ஒருத்தருடைய கையை மற்றவர் பிடித்துக்கொண்டு சங்கிலிக் கோர்வையாக நடந்து கொண்டிருந்தனர்.

"அண்ணா!..." என்ற அழைப்பு வந்த திசையில் கரன் திரும்பினான்.

அத்தனை சனத்திரளுக்குள்ளும் தங்கை கிரிஜாவின் குரல் கரனின் கவனத்தை ஈர்த்துக் கொண்டது.

"என்ன கிரிஜா?" என்றவாறு கிரிஜாவை நோக்கி கரன் வந்தான்.

கிரிஜாவின் முகம் கோபத்தால் சிவந்து போயிருந்தது.

"இந்தப் பொடியங்களைப் பாரன். இவங்கள் நிறைய நேரமா எங்களோடை சேட்டை விட்டுக்கொண்டு வாறாங்கள்," என சிநேகிதிகளுடன் வந்த கிரிஜா அண்ணனிடம் முறையிட்டாள்.

கரனுக்கு கோபம் தலைக்கேறியது. கிரிஜா சுட்டிக்காட்டிய இளைஞர்களை கோபக் கனல் முகத்தில் தெறிக்கப் பார்த்தான்.

கரனின் பார்வையை அலட்சியப்படுத்துவது போல அந்த இளைஞர்கள் தங்களுக்குள் கதைத்துச் சிரித்துக் கொண்டு நின்றார்கள்.

அது கரனுக்கு கோபத்தை மேலும் தூண்டிவிட்டது.

"உங்களுக்கு என்ன வேணும்?" எனக் கரன் கேட்டான்.

"உனக்கென்ன வேணும்?" என இளைஞர்களுள் ஒருவன் கேட்டான்.

"செய்யிறதையும் செய்துபோட்டு உங்களுக்குத்திமிர் வேறை?" என்ற கரனை "நாங்கள் இப்ப என்ன செய்தோம்?" என்ற அந்த இளைஞனின் கேள்வி கரனுக்கு மேலும் மேலும் கோபத்தைத் தூண்டியது.

"என்னுடைய தங்கச்சியோடை சேட்டை பண்ணல்லையா?"

"உன்னுடைய தங்கச்சியின் கையைப் பிடிச்சு இழுத்தனாங்களோ?" என்ற இளைஞனின் பதில் கரனின் பொறுமையை இழக்கச் செய்தது.

"என்னடா சொன்னாய்?" என அந்த இளைஞனின் சட்டையை கரன் பாய்ந்து பிடித்தான்.

ஆனால், அந்த இளைஞன் பொறுமை இழக்கவில்லை.

"எடடா கையை!" என கரனின் கையை தனது சட்டையிலிருந்து விலக்கிய இளைஞன், "இவ்வளவு நேரமும் கோயிலில் நீ என்ன செய்து கொண்டிருந்தாய்? உன்னுடைய தங்கச்சியைப் போல மற்றப்பிள்ளையளையும் நீ நினைத்து நடந்திருந்து, இப்ப நான் செய்ததை நீ கேட்க வந்திருந்தால், நீ கேட்டதை நான் ஏற்றிருப்பன். ஆனால் நீயே இவ்வளவு நேரமும் எத்தனையோ பிள்ளைகளோடை சேட்டை விட்டுக் கொண்டிருந்ததை நானே கண்டனான். இப்ப உன்னுடைய தங்கச்சிக்கு நாங்கள் சேட்டை விட்டதை உன்னாலை தாங்கமுடியேல்லை. அதைப்போலத்தான் மற்றப்பிள்ளையளுக்கும் இருக்கும் எண்டதை யோசி!" அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் கரனின் கன்னத்தில் மாறிமாறி அறைந்தது போலிருந்தது.

அங்கு கூடியிருந்த எத்தனையோ சோடிக்கண்கள் தன்மீது பதிந்திருப்பதை உணர்ந்த கரன், அவமானத்தால் கூனிக்குறுகி தலைகுனிந்து நின்றான். ■



படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்



இத்தனையோ நோய்வந்து போனதுண்டு
இத்தனை துயர் தந்து நின்றதில்லை.

பெரு வலியாய் தலைவலியும் வந்ததுண்டு
கொடு வலியாய் இதுபோல வந்ததில்லை.

நோய் கண்டு படுக்கையிலே உழன்றதுண்டு
பேய் இதுபோல பிடித்தென்னை ஆட்டவில்லை.
பாய் போட்டு படுத்தாலும் தூக்கமில்லை
போய் பஞ்சணையில் வீழ்ந்தாலும் ஊக்கமில்லை.

கண்மூடிக் கொண்டாலும் போனதில்லை
கண்ணுக்குள் கண்மணியாய் நிற்கின்றாளே!
மண் மூடிக் கொண்டாலும் மறப்பதில்லை
பெண்மீது காதலுக்கு இறப்பேயில்லை!

சித்த மருந்துக்கும் தடுக்கின்ற சக்தியில்லை
மெத்த காதலுக்கு மாமருந்து எங்குமில்லை.
சுற்றி தடுமாறும் சித்தமெல்லாம்
முற்றி அலைபாயும் காதலினால்!
குட்டித் தடுத்தொரு புத்திசொல்ல
முட்டி மோதும் மனதுக்கு சக்தியில்லை!

பசுவின் மடியினைத் தேடும்
பசும் கன்றினைப்போல்
பாவையின் மனதினைத் தேடும்
பாவி என் ஆவி துடிக்கிறதே!

இடது கண் துடித்ததோ எனைக் கண்டு
என்று நான் கேட்க நினைக்கையிலே
இடறி நான் விழ்ந்தேன் விழி பாய்ந்து
என்று நான் எழுவது இனி மீண்டு?

ஐந்து தலைப் பாம்புக்கும் அஞ்சமாட்டேன்
சிந்து நகை நீயெனக்கு தந்துவிட்டால்!
முந்து எனத் தூண்டும் மோக நிலையாலே
வந்து விழுந்தேனடி ஆசைவலை மேலே!
பந்து எனத் துள்ளும் பருவ இளமானே
தந்து விடு எனக்கு பருக செந்தேனே!

முன்னர் இருந்தோரும் மோகக் கடல் குளித்தார்
பின்னர் வந்தோரும் மோகக் கடல் வீழ்ந்தார்
எந்தத் தலைமுறைக்கும் மோகம் விதிவிலக்கோ
தங்கப் பெண்ணாளே வந்து தழுவுதல் கொள்!

முற்றும் துறந்தவரும் பற்றி எரிந்தனரே
சுற்றும் பெரும் மோக காட்டுத் தீயினிலே!
குற்றம் என நினைத்து விட்டு விலகாதே
முற்றும் எனக் கதையை முடித்துப் போகாதே!

வீணைதனை மீட்டும் உந்தன் விரலாலே
வானைத் தொடுகின்ற காதல்தனை மீட்டு
காணக்கிடைக்காத லோகம்தனை திறவாய்
வாலைக் குமரியடி கோலக் கலை செய்வாய்

பூவை தேன் சுமக்கும்
தேனை வண்டு அள்ளும்
பூவே வாராயோ
தேனள்ளித் தாராயோ!

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துணக்கு நான் தரமுடியாது
நானோர் ஏழையடி நாலும் உன்னிடமே
கோலம் செய் காதல் திருமுகத்தால்!

மாடி மனை சுகமும்
கோடி பொன் பொருளும்
நாடி நான் போகேன்
தேடி வருகின்றேன் உன்மடியை!

வட்ட பொற்குடங்கள்
பிரம்மன் கலைஞனடி
என்ன கச்சிதமாய்
கிண்ண எழில் செய்தான்!

எட்ட நின்றாலும்
கொட்டிப் பாய்கின்ற
கரும்பு வில் நீயோ!
கொட்டும் மழை போன்ற
குறும்பு நகை உனதோ!
கட்டும் கயிற்றையெல்லாம்
மனது அறுத்தெறியும்
சுட்டும் விழிப் பெண்ணே
உனைக் கண் கண்டால்!

மாறன் மனதுக்குள்
காதல் மேகம் கருக்கட்ட
மாறன் உதடுகளால்
கவிதை மழை கொட்டியது!

ஒரு தலைக் காதல்தான்
மறுதரப்பின்
கடைக்கண் பார்வை கிட்டும்வரை!

முடிவு தெரியுமுன்னரே
காதல் அரங்கத்தில்
மனம் முடிசூட்டிக் கொள்கிறது!
பட்டத்துராணி என்று
பக்கத்தில் அவளை இருத்திக் கொள்கிறது!

## தேவை ஒரு மருந்து

விடை தெரியும்வரை
விழிகள் வேலை நிறுத்தம் செய்யும்!
விடை தெரிந்த பின்னும்
வேலை நிறுத்தம் தொடரும்!

காதல் ஒரு
கட்டாய அவஸ்த்தை!

வலை என்று தெரிந்துவிட்டால்
எந்த விலங்கும்
தானாகச் சென்று மாட்டிக்கொள்ளாது.

வலை என்று தெரிந்த பின்னர்தான்
மனம் அதில் விழுவதற்கு
விலையெதற்கும் தயாராகிறது!
காதல் மந்திரம்
செய்யும் விசித்திரம் அது!

மாறனும் மாட்டிக்கொண்டான்
வலையதில் விழுந்துவிட்டான்!

மனம் என்ற கிண்ணத்தில்
நினைவுகளை நிரப்பிக் கொண்டான்!
கிண்ணம் நிரம்பி வழிய வழிய
எண்ணத்தில் போதையேறிக் கொண்டது.

அளவுக்கு மிஞ்சினால்
அமுதமும் நஞ்சு
காதலில் மட்டும்
நஞ்சும் அமுதம்!

அளவே கிடையாது
கடலளவே ஆயினும்
கையளவே என்று நினைத்து
அளவே பாராமல் அள்ளத்தூண்டும்
அற்புதக் கடல் காதல்!

அள்ளத்தான் நினைத்தான்
அனுமதிதான் கிடைக்கவில்லை.

வழுக்கு மரத்தில்
ஏறுவதுபோல-அவனது
விடை அறியும் முயற்சியும்!

அறிதலைவிட
அறிய முன் எழும் துடிப்பு
அலாதியானது!-ஆனால்
இதயத்துடிப்பை
ஏறுமாறாகச் செய்யக்கூடியது!

அவளுக்கு
இடது கண் துடித்ததோ இல்லையோ
இவனுக்கு
இதயம் என்றுமில்லாதபடி துடித்தது!

இப்படியே
இதயம் துடித்தால் வெடித்துவிடுமே!
சாவதைப் பற்றிக் கூட கவலையில்லை
சம்மதம் அவள் சொன்ன பின்னர்
என்றால்-

அறியும் வரையாவது
உயிருடன் இருக்கவேண்டுமே
உடனடிக் கவலை அதுதான்!

இதயத் துடிப்பின் வேகத்தை
நிறுத்தியாக வேண்டும்
நெஞ்சிடம் அவன்
கெஞ்சினான் மருந்து கேட்டு;

"நெஞ்சமே! நெஞ்சமே!
இத் துன்ப நோய் துரத்த
நீயொரு மருந்தை
நினைத்துச் சொல்ல மாட்டாயா?"

"நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே
—எனைத் தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து"
குறள்-1241. அதிகாரம் 125

தருவது
ரஜீகன்

## ஸ்போர்ட்ஸ்

### விளாசல் மன்னர்கள்

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 150ற்கு அதிகமான ஓட்டங்களைக் குவித்துள்ளவர்களின் விபரங்கள் இதோ:

| வீரர் | ஓட்டங்கள் | அணி | எதிரணி |
|---|---|---|---|
| 1. சயிட் அன்வர் | 194 | (பாகிஸ்தான்) | இந்தியா. |
| 2. விவியன் றிச்சர்ட்ஸ் | 189★ | (மே.இ.தீவுகள்) | இங்கிலாந்து |
| 3. கேரி கேஸ்டன் | 188 | (தெ.ஆபிரிக்கா) | ஐக்கிய அரபு எமிரேட்ஸ் |
| 4. விவியன் றிச்சர்ட்ஸ் | 181 | (மே.இ.தீவுகள்) | இலங்கை |
| 5. கபில் தேவ் | 175★ | (இந்தியா) | ஸிம்பாப்வே |
| 6. கிளென் டேர்னர் | 171★ | (நியூஸிலாந்து) | கிழக்கு ஆபிரிக்கா |
| 7. கலகன் | 169★ | (தெ. ஆபிரிக்கா) | நியூஸிலாந்து |
| 8. பிரையன் லாரா | 169 | (மே.இ.தீவுகள்) | இலங்கை |
| 9. றொபின் ஸ்மித் | 167★ - | (இங்கிலாந்து) | அவுஸ்திரேலியா |
| 10. அன்ட்ரு ஹட்ஸன் | 161 | (தெ.ஆபிரிக்கா) | ஹொலண்ட் |
| 11. டேவிட் கவர் | 158 | (இங்கிலாந்து) | நியூஸிலாந்து |
| 12. விவியன் றிச்சர்ட்ஸ் | 153★ | (மே.இ.தீவுகள்) | அவுஸ்திரேலியா |
| 13. பிரையன் லாரா | 153 | (மே.இ.தீவுகள்) | பாகிஸ்தான் |
| 14. டெஸ்மன்ட் ஹெய்ன்ஸ் | 152★ | (மே.இ.தீவுகள்) | இந்தியா |
| 15. சனத் ஜயசூரிய | 151★ | (இலங்கை) | இந்தியா. |

### சகலகலா வல்லவர்கள்

ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் சகலதுறைகளிலும் பிரகாசித்தவர்கள் (50 ஓட்டங்களும் 4 அல்லது அதற்கு அதிகமான விக்கெட்டுகளும்) பற்றிய விபரங்கள் வருமாறு:

| வீரர் | ஓட்டங்கள் | பந்துவீச்சு | அணி | எதிரணி |
|---|---|---|---|---|
| 1. மார்க் வோவ் | 57 | 5-24 | அவுஸ்திரேலியா | மே.இ.தீவுகள் |
| 2. ஸ்ரீகாந்த் | 70 | 5-27 | இந்தியா | நியூஸிலாந்து |
| 3. விவியன் றிச்சர்ட்ஸ் | 119 | 5-41 | மே.இ.தீவுகள் | நியூஸிலாந்து |
| 4. அமீர் சொகைல் | 85 | 4-22 | பாகிஸ்தான் | இலங்கை |
| 5. குரோக்கர் | 50 | 4-26 | ஸிம்பாப்வே | இந்தியா |
| 6. இயன் பொத்தம் | 53 | 4-31 | இங்கிலாந்து | அவுஸ்திரேலியா |
| 7. ஷோன் பொலொக் | 66★ | 4-34 | தெ.ஆபிரிக்கா | இங்கிலாந்து. |
| 8. சைமன் ஓ டொனல் | 57★ | 4-36 | அவுஸ்திரேலியா | இலங்கை. |
| 9. ஃப்ளெட்சர் | 69★ | 4-42 | ஸிம்பாப்வே | அவுஸ்திரேலியா |
| 10. நதன் ஆஸ்ட்லே | 117 | 4-43 | நியூஸிலாந்து | பாகிஸ்தான். |
| 11. ஸ்டீவ் வோவ் | 82 | 4-48 | அவுஸ்திரேலியா | பாகிஸ்தான். |

### லாராவுக்கு அபராதம்

மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் வீரர் பிரையன் லாராவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டிக்காக மேற்கிந்திய அணியின் பயிற்சி முகாமிற்கு சரியான காலத்தில் வரத் தவறியதற்காக லாராவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் லாராவுக்குக் கிடைக்கும் வருமானத்தில் அரைவாசியை அபராதமாகச் செலுத்த வேண்டுமென மேற்கிந்திய தீவின் வானொலிச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக 1995ல் இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்த மேற்கிந்திய அணியில் லாரா இடம் பெறாததைக் கண்டித்து அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

#### அவர்தான் இவர்


கமல்

## சிந்தியா பதில்கள்

★ உலகத்தில் அதிகமாகப் பொய் சொல்லும் நாடு எது சிந்தியா?

பி. பாலா, மாத்தளை.

என் நாட்டுப்பற்றை நாடிபிடித்துப் பார்க்கிறீர்களாக்கும்! நானா மாட்டுவேன்? ஹி.ஹி.ஹி.

❀ ✳ ❀

★ டியர் சிந்தியா! பாதையில் அரட்டை அடித்து சில்மிஷம் செய்யும் ஆண்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

வீ. யுகானந்தி, கல்முனை.

பேரறிஞர் அண்ணா சொன்னதை நினைக்கிறேன்:"சாலையோரத்தில் வேலையற்றதுகள்; வேலையற்றதுகள் நெஞ்சில் விபரீத எண்ணங்கள்!"

❀ ✳ ❀

★ இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை?

ஏ.எல்.நளீம், ஏறாவூர்-03.

தனக்கு ஒரு கண்போனாலும் எதிரிக்கு சகுனப்பிழையென்ற நிலைப்பாடு வெளிப்பாடாகி வருகிறது.

❀ ✳ ❀

★ கவலைகளைப் போக்குவதற்கு தாங்கள் கையாளும் உத்தி என்ன?

சில்மியா சனூன், புத்தளம்.

"போனால் போகட்டும் போடா...."

❀ ✳ ❀

★ இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர் ராகுல் திராவிட் ஒரு காலத்தில் கப்டனாக வருவார் என்கிறேன். உங்கள் கருத்து என்ன?

வி. வசீம், தெகிவளை.

அதனை நான் ஆமோதிக்கிறேன்!

❀ ✳ ❀

★ நம் நாட்டில் தேர்தல் என்ற ஒன்று இல்லாவிட்டால் எப்படி இருக்கும்?

வே. பன்னீர்செல்வம், பலாங்கொடை.

ஓஷோ சொன்ன விளக்கம் பொருத்தமாக இருக்கும்:

"ஜனநாயகத்தில் இரண்டு கட்சிகள் தேவை என்று அவர்கள் கூறுகிறார்கள். ஜனநாயகம் என்பது இரண்டு கட்சிகளைப் பொறுத்தது அல்ல. இரண்டு கட்சிகள் முற்றிலும் வேறுபட்ட ஒரு காரணத்திற்காகத் தேவைப்படுகின்றன. இது மனோதத்துவம் பற்றியது.

ஒரு கட்சி ஐந்தாண்டுகளுக்கு ஆட்சியில் இருக்கிறது. அந்த ஐந்தாண்டுகளில் எல்லோரும் அந்தக் கட்சிக்கு எதிராகத் திரும்பி விடுவார்கள். ஏனெனில் அது சொர்க்கத்தை உருவாக்குவதாக வாக்களிக்கிறது. நீங்களோ நரகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

எதிர்க்கட்சி உங்களை தொடர்ந்து தூண்டிவிடுகிறது. "இந்தக் கட்சியின் வாக்குறுதிகள் என்னாயிற்று? நாங்கள் என்றால் வாக்குறுதிகளை நிறைவேற்றி இருப்போம்."

அடுத்த தேர்தலில் ஆட்சியில் இருந்தவர்கள் தோற்றுப்போகிறார்கள். அடுத்த கட்சி ஆட்சிக்கு வருகிறது. ஐந்து வருடகாலத்தில் இவர்களும் முடிந்து போகிறார்கள். ஆனால் இந்த ஐந்துவருட காலத்தில் மக்கள் முதலில் ஆட்சியிலிருந்த கட்சியை மறந்துபோகிறார்கள். அவர்கள் மீண்டும் ஒரு சொர்க்கத்தை உருவாக்குவதாக வாக்குறுதி அளிக்கிறார்கள். மக்கள் அதை நம்புகிறார்கள்.

பொதுமக்களுக்கு ஐந்துவருட நினைவாற்றல் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் தேர்தல்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

ஒரு கட்சி தொடர்ந்து ஆட்சி செய்து கொண்டிருந்தால் அதன் குற்றங்களை உங்களால் மன்னிக்க முடியாது. மக்கள் புரட்சி செய்யத் தொடங்குவர். எனவே தேர்தல் என்பதும், இரண்டு கட்சிகள் இருப்பதும் மக்களைத் திருப்திப்படுத்தும் மனோதத்துவ ரீதியான தந்திரம்.

"கவலைப்படாதீர்கள். இன்னும் இரண்டே வருடம்தான். அப்போது இந்த மனிதர்கள்போய் நல்ல மனிதர்கள் ஆட்சிக்கு வந்துவிடுவார்கள்." ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரே வகையைச் சேர்ந்தவர்கள்தாம்!

❀ ✳ ❀

★ மறப்பது நன்று என்கிறார்கள். ஞாபக மறதியும் கூடாது என்கிறார்கள்? குழப்பமாக இல்லையா?

எம். கேசவன், பதுளை.

இல்லை. சில சமயங்களில் மறக்கக் கூடாததை மறந்துபோனால்தான் இசகு பிசகான குழப்பமாகிவிடும்.

ஒரு பேராசிரியர் எழுதிய புதிய புத்தகம் வெளியானதினத்தில் அவர் மனைவிக்குக் குழந்தையும் பிறந்தது. இரண்டு செய்திகளும் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தன. வாழ்த்துக்கள் குவிந்தன.

பேராசிரியர் வாழ்த்துச் சொன்னவர்களுக்கு நன்றிக் கடிதம் எழுதினார். குழந்தை பிறந்ததுக்கு வாழ்த்துச் சொன்னவர்களுக்கு கடிதம் எழுதுகிறோம் என்பதை அவசரத்தில் மறந்துபோய் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இப்படி எழுதினார்:

"மிக்க நன்றி! இந்தச் சாதனையை தனியொருவனாக என்னால் செய்திருக்க முடியாது. என் இரண்டு பட்டதாரி மாணவர்களின் ஒத்துழைப்பின் விளைவாகவே இந்தச் சாதனை சாத்தியமாயிற்று!"

❀ ✳ ❀

★ இந்தக்கால நடிகைகளுக்கு வெட்கம் என்பதே இல்லாமல் போனது ஏன்?

சி. விசுவம், கண்டி.

முன்னாள் நடிகைகள் மட்டும் வெட்கத்தின் சிகரத்தில் இருந்தார்கள் என்று நினைப்போ? முன்னால் தமிழக முதல்வர் முன்னாளுக்கு முன்னால் கொடுத்த போஸைப் பாரும். 'வைரம்' படத்தில்தான் இந்தமாதிரி துணிச்சல் காட்டினார் அம்மு.

❀ ✳ ❀



★ டியர் சிந்தியா! வாழ்க்கையில் எது நிச்சயம்?

ஐ.மு.இக்பால், ஹொறவபொத்தானை.

மரணம்.

❀ ✳ ❀

★ சிந்தியா! ஒரு பெண் என் மனதைத் திருடிவிட்டாள் என்ன செய்வது?

எஸ். விஜயன், அக்கரைப்பற்று-07.

அபராதம் விதியுங்கள், உங்கள் வாழ்க்கைத் துணைவியாக்குவது மூலம்!

❀ ✳ ❀

★ விதண்டாவாதிகளை என்ன செய்யலாம்?

ஜெ. சியாமளா, கொழும்பு-08.

பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த லொயிட் ஜோர்ஜ் "எல்லா நாடுகளுக்கும் சுதந்திரம் வேண்டும்" என்று பேசினார்.

அவரைக் கேலி செய்ய நினைத்த ஒருவன், "நரகலோகத்திற்கு?" என்று கத்தினான்.

"இப்படி ஒவ்வொருவரும் தத்தம் நாடுகளுக்கு பரிந்து பேசவேண்டும் என்பதுதான் என் விருப்பம்!" என்றார் லொயிட் ஜோர்ஜ்.

❀ ✳ ❀

★ அமைச்சர் அஷ்ரப்பின் பதவி குறைக்கப்பட்டது ஏன்?

வை. சரீ.ப், கல்முனை.

அதிகாரப் பரவலாக்கம்!

❀ ✳ ❀

★ தமிழ்க்கட்சிகளுக்குள் ஒன்றுபட்டதன்மை இல்லை. அதுதான் தம்மால் ஒரு நிலைப்பாட்டுக்கு (அரசியல்தீர்வு விடயத்தில்) வர முடியாதுள்ளது என்கிறாரே ஐ.தே.க. எம்.பி?

எம். கனகரட்ணம், கொழும்பு-05.

யார்.... டிரோன் பெர்னாண்டோதானே? அவரிடம் நாம் கேட்கவேண்டிய கேள்வி! தீர்வு இனப்பிரச்சனைக்கா, தமிழ்க்கட்சிகளுக்கா? திம்புவில் தமிழ்க்கட்சிகளெல்லாம் ஒன்றுபட்டு நின்றபோது ஐ.தே.கட்சி அரசு பேச்சுவார்த்தைக் கதவுகளை இழுத்து மூடியது ஏனாம்? நியாயம் சொல்கிறார்களாம் நியாயம்!

❀ ✳ ❀


பவுலா

★ அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் பாடு திண்டாட்டம்தானா? குற்றச்சாட்டை நம்பலாமா?

எஸ். சோதிராஜ், வவுனியா.

கிளின்ரனின் உடலில் எங்கெங்கே மச்சம் இருக்கிறது என்று விலாவாரியாக சொல்லுவேன் என்கிறாரே பவுலா. அதனால் மருத்துவ பரிசோதனையில் கிளின்ரனின் உடல்பற்றிய பவுலாவின் விபரிப்புக்கள் பொருந்தினால் கிளின்ரன் கிளீன்போல்ட் தான்.

❀ ✳ ❀



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 89

# போரே ஒரே வழி!

## இலக்குவன் சூளுரை!

இராமபிரான் தன்னுடைய அணிக்காகத் தெரிவு செய்யப்பட்ட படைகளுடன் இலங்கை மாநகரின் வடதிசை வாயிலை நோக்கிப் புறப்பட ஆயத்தமானார். அந்த இறுதிக் கட்டத்திலும் சுக்கிரீவன், அனுமன், விபீடணன் முதலானோரை மீண்டும் தன்னிடம் அழைத்துவரும்படி இலக்குவனிடம் கூறினார். அவர்களும் வந்து சேர்ந்தனர். அவர்களை நோக்கி, "போர் தொடங்குவதற்கான சகல ஆயத்தங்களையும் நாம் செய்து விட்ட



இந்த வேளையில், மீண்டும் இராவணனிடம் தூதன் ஒருவனை அனுப்பிப் பார்க்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. உங்களுடைய கருத்தையும் அறிவதற்காகவே உங்களை இங்கு அழைத்தேன்!" என்றார்.

இக்கருத்தினை இராமபிரான் கூறியதும், இலக்குவன் கண்களில் கனல் தெறித்தது. தனது அதிருப்தியைத் தெரிவிக்கும் முகமாக, வேறு புறமாகத் தன் பார்வையைச் செலுத்தினான். இதனை தனது ஊகத்தால் உணர்ந்த இராமபிரான், "இலக்குமணா! எதுவாக இருந்தாலும் உனது கருத்தை ஒளிவு மறைவின்றிக் கூறிவிடு!" என்றார்.

### மீண்டுமொரு தூதா?

"இரக்கமற்ற இலங்கைக்கதிபனான இராவணனிடம் மீண்டும் தூதனுப்புவதனால் என்ன பயன் ஏற்படப்போகிறது அண்ணா? கற்புக்கரசியான சீதாப்பிராட்டியாரை வஞ்சகமாக- எம்மிருவரையும் ஏமாற்றிவிட்டு, எவரும் இல்லாத நேரம் பார்த்து, தந்திரமாக அபகரித்துச் சென்றான். தடுத்து நிறுத்திய நம் தந்தைக்கு நிகரான ஜடாயு ஐயாவைக் கொலை செய்தான். அத்தகைய செயல்களைப் புரிந்த ஒருவன் 'பிராட்டியாரை விட்டுவிடுகிறேன்' என்றால் மன்னிப்பு வழங்கிவிடமுடியுமா? 'கானகத்தில் வேள்விகளை நடத்த முடியாமல் தடுக்கும் அரக்கரை வேரோடு அழிப்பேன்!' என்று தண்டகாரணியத்தில் வாக்களித்தீர்களே! அவர்களுக்கு என்ன பதில் தரப்போகிறீர்கள்? அரக்கர்கோனின் தம்பியான விபீடணரை, ஏற்கனவே, 'இலங்கைக்கு நீயே அதிபன்!' என்று மகுடாபிஷேகமும் செய்து முடித்துவிட்டீர்கள்! அவ்வாறு கொடுத்த வாக்கு என்னாவது? எடுத்த பணியை இடையில் நிறுத்துவதும், கொடுத்த வாக்கைக் காற்றில் பறக்க விடுவதும் சத்திரியருக்கு அழகாகுமா?

இத்தனை இலட்சம் வீரர்களையும் திரட்டி, அவர்களுக்குப் போர்ப் பயிற்சி கொடுத்து, போர்க்களத்துக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டு, "இராவணன் எனது மனைவியைக் கொண்டு வந்து என்னிடம் ஒப்படைத்துவிட்டான்; அவனை மன்னித்துவிட்டேன்!" என்று கூறினால் முறை தவறிய செயலாகுமல்லவா? வில்லில் நாணேற்றிவிட்டோம். இனிப் பாணங்களைப் பொழிந்து எதிரியை வீழ்த்த வேண்டியது தான் ஒரே வழி! அதைவிடுத்து, எத்தகைய சமாதானத்துக்கும் இனி இடம் கிடையாது. போர்தான் ஒரே முடிவு!"

இவ்வாறு இலக்குவன் பெருமழை போல் பொழிந்தான். இதனைக் கேட்டிருந்த அனைவரும் திகைப்படைந்தனர். பரம சாதுவான அண்ணனுக்கு- கனல் தெறிக்கும் வீராவேச வார்த்தைகளைக் கொட்டிய வீரன் தம்பியாக வாய்த்திருப்பதைப் பார்த்து வியந்தனர்.

**அன்னவன் தனக்கு மாதைவிடில்**
**உயிர் அருளுவாயேல்**
**என்னுடை நாமம் நிற்கும்**
**அளவெலாம் இலங்கை மூதூர்**
**மன்னவன் நீயே என்று, வந்து**
**அடைந்தவற்கு வாயால்**
**சொன்ன சொல் என் ஆம் முன்னம்**
**சூளுறவு என் ஆம் தோன்றால்?**

*(யுத்த காண்டம்-920)*

பொருள்:

***உன் மனைவியை உன்னிடமிருந்து அபகரித்துச் சென்றான்: அப்போது அதனைத் தடுக்க முயன்ற நம் தந்தை போன்றவரையும் கொன்றான் இவை போன்ற கொடுமைகளைப் புரிந்த அத்தகையவன், உன் மனைவியான சீதையை மீண்டும் ஒப்படைத்துவிட்டால் அவனுடைய உயிரைப் பறிக்காமல் விட்டுவிட்டாயானால், "என்னுடைய பெயர் நிலைத்திருக்கும் வரை இலங்கை எனும் மூதூருக்கு நீயே மன்னவன்!" என்று உன்னிடம் அடைக்கலம் புகுந்த விபீடணனுக்கு நீ அளித்த வாக்குறுதி என்னாகும்? அதற்கு முன்னர் தண்டகாரணியத்தில் முனிவர்களுக்குக் கொடுத்த வாக்கு என்னாகும்?"***

இவ்வாறு இலக்குவன்- அண்ணன் இராமபிரானிடம் வினவியதாக கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமான் எடுத்துக்காட்டுகிறார்.

இலக்குவன் தொடர்ந்து அண்ணனிடம், "ஏதாவதொரு அறத்தின் பொருட்டு போரை நிறுத்திக்கொள்ள நீங்கள் நாட்டம் கொள்ளலாம்: அல்லது இலங்கையின் எழில் தங்கள் மனதில் சஞ்சலப்புயலைக் கிளப்பிவிட்டிருக்கலாம். 'இத்தகைய பேரெழில் படைத்த இப்பூலோக சொர்க்கத்தை அழித்துவிடலாகாது' என்று கூடக் கருதலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை, போர் என்ற ஒரே வழிதான் முடிவான முடிவாகும்!" என்று சபதம் கூறுவது போல் தன் கருத்தைத் தெரிவித்து ஓய்ந்தான்.

தம்பியின் கனல் தெறிக்கும் வார்த்தைகளைச் செவிமடுத்த இராமபிரான் புன்முறுவல் பூத்தவராக தன் தம்பியை அருகழைத்து, தனது வலது புறத்தில் அணைத்து அவனுடைய முதுகை வாஞ்சையோடு தடவிவிட்டார்.

### "வாக்குறுதியை மறக்கவில்லை!"

"தம்பி! உன்னுடைய கோபம் நியாயமானதே! எனக்குரிய கடமைகளை நான் என்றும் மறந்து விடவில்லை. தமது வேள்விகளுக்கு இடையூறு விளைத்த கொடிய அரக்கர்களை வதைப்பேன் என்று தண்டகாரணிய வனத்து முனிவர்களுக்கு அளித்த வாக்கினை நான் மறந்துவிடவில்லை. அரக்கர்களுக்குரிய அறவழிகளை நன்குணர்ந்தவனாயினும் அத்தகைய முறைகளைத் தனது அகந்தையினாலும் மமதையினாலும் மறந்துவிட்டவனான இராவணன் தன்முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்பது திண்ணம். அவன் அழிவு எம்கையினால் நிறைவேறப்போவதுதான் உண்மை. ஆனால் சத்திரிய மரபுப்படி, எப்போர் தொடங்குவதற்கு முன்னரும் பல தூதர்களை அனுப்பி சமாதானத்துக்குண்டான வழிமுறைகளையும் ஆராய்ந்து பார்ப்பது தான் அறவழி. தேவர்களின் குருவான பிரகஸ்பதியும் அசுரர்களின் குருவான சுக்கிராச்சாரியரும் கூட இதே வழிமுறைகளை வலியுறுத்தியுள்ளனர்.

ஆகவே நாமும் மற்றுமொரு தூதனை அனுப்பி, இராவணனின் இறுதி முடிவை அறிவதுடன்- அவனுடைய அழிவு அண்மித்துவிட்டது என்பதனையும் அறிவுறுத்திவிடுவோம்!"

இராமபிரான் இவ்வாறு கூறியதனை முதலில் ஆதரித்தவர் விபீடணர்தான். தனது அண்ணனாகிய இராவணன் சிறு பிராயத்திலிருந்தே எதற்கும்- எப்போதும் விட்டுக்கொடுக்காத தன்மையுடையவன் என்றார். எவருடைய அபிப்பிராயத்தையும் கேட்காமல், தான் நினைத்ததைச் சாதிப்பதில் தீவிரங்காட்டுபவன் என்றும் கூறினார். சீதாப்பிராட்டியார் தொடர்பாக இராவணனை பல பெரியார்களும் தானும் கண்டு எவ்வளவோ அறிவுரைகளைக் கூறியதாகவும் சொன்னார். எவருடைய வார்த்தைக்கும் இராவணன் எதுவித மதிப்பும் அளிக்கவேயில்லை என்பதனையும் சுட்டிக்காட்டினார். இதே காரணத்தினால் எழுந்த வாதப்பிரதி வாதங்களின் முடிவில் தான் இலங்கை மாநகரை விட்டு வெளியேறிய தாகவும் கூறினார்.

சுக்கிரீவனும் இராமபிரானின் கருத்தை ஆமோதித்தார். இதனைத் தொடர்ந்து இலங்கை வேந்தனிடம் யாரைத் தூதனுப்புவது என்பதையும் இராமபிரானே தீர்மானித்தார்.

### "அங்கதனை அனுப்புவோம்!"

"ஏற்கனவே இலங்கை வேந்தனிடம் எமது தூதுவனாக ஆஞ்சநேயர் சென்றிருந்தார். அவர் தூதுவராக மட்டுமல்லாமல், எமது வானரசேனை எத்தகையது என்பதனையும் அறிவுறுத்திவிட்டு வந்துவிட்டார். மீண்டும் அவரை அனுப்புவது உசிதமல்ல; தொடர்ந்து அவரைத் துன்புறுத்த வேண்டியிருக்குமே என்று நாம் கருதவில்லை. மாருதி எம் கருத்தினை நன்குணர்ந்தவர். அவரையே மீண்டும் அனுப்பிவைத்தால், வேறு ஆற்றலுடைய வீரர்கள் எவரும் எம் மத்தியில் இல்லையோ என்று அவர்கள் கருதிவிடுவார்கள். ஆகவே, வேந்தன் வாலியின் மகனான அங்கதனே தூதனாகச் செல்லத் தகுதியுடையவன் என்று கருதுகிறேன். வீரதீரனான அங்கதன் அரக்கர் மத்தியில் தன் அறிவாற்றலினால் எமது கருத்தை வலி யுறுத்திவிட்டு வர வல்லமை உடையவன்!"

இவ்வாறு இராமபிரான் தெரிவித்த கருத்தினை ஏனையோர் ஆமோதித்தனர். அங்கதனும் இராமபிரான் முன் வந்து, அவர்தாள் பணிந்து ஆணைக்காகக் காத்து நின்றான். "ஐயனே! இராவணனிடம் நான் என்ன கூறவேண்டும் என்பதனை விபரமாகக் கூறுவீர்களாக!" என்று கேட்டான்.

"நற்குணமும், நல்லறிவும், பழுதுபடா வீரமும் கொண்ட இளைஞனே! இராவணனிடம் நீ சென்று இரண்டில் எது அவனுடைய விருப்பம் என்பதனைக் கேட்டு அறிந்து வருவாயாக! சீதாப்பிராட்டியாரை எம்மிடம் சேர்ப்பித்து உயிர் பிழைக்கச் சொல்! இதற்குச் சம்மதமில்லையெனில், பதுங்கியிராமல் எம்முடன் நேருக்கு நேர் வந்து நின்று போர் புரியட்டும்: கோழைபோல் ஒதுங்குவது சுத்த வீரனுக்கு அழகல்ல- அறமுமாகாது, என்று கூறு. அவன் ஏதாவது ஒருவழியைத்தான் தேர்ந்தேயாக வேண்டும். அவன் பதில் என்ன என்பதை அறிந்து வருவாயா?"

அங்கதனிடம் இராமபிரான் இதனைக் கூறியதும் மீண்டும் அவர் தாள் பணிந்து எழுந்தான். தன் சிற்றப்பாவான சுக்கிரீவனையும் ஆஞ்சநேயரையும் தொழுது, அனைவரிடமும் விடைபெற்றபின் தெற்கு நோக்கிப் புறப்பட்டான் அங்கதன்.

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

**இராமாயணப் போட்டி: 87**
**சரியானவிடை:- அகழி.**

1. க.சந்திரகுமார், பிரதான வீதி, நீர்கொழும்பு.
2. ஆர்.பிரசாத், கே/இரஜவெல த.ம.வி., இரஜவெல.
3. ஜே.எம்.பிரியந்தி, வனிதா ஹொட்டல் வீதி, பொத்துவில்-03.
4. ச.சுபாஸ், சுங்கவீதி, திருகோணமலை.
5. செல்வன் பத்மராஜா சலோஜன், புனித மிக்கேல் தேசிய கல்லூரி, மட்டக்களப்பு.

**போட்டி இல. 89** கேள்வி- இராவணனிடம் முதலில் தூதாகச் சென்றவர் யார்?

ஜூலை. 05 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி – இல.89, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# காணவில்லை-காணவில்லை-காணவில்லை



மிஸ்டர் பொக்ஸ் என்னும் கனவானைக் காணவில்லை. கடைசியாகக் காணப்பட்டபோது சுத்தமான வெள்ளைத்தோலும், மூக்குக் கண்ணாடியும், விவேகமான மூளையும் அணிந்திருந்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் இவர்மீது இலங்கையில் பொழியப்பட்ட ஐஸ்மழை காரணமாக ஜலதோஷத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்.

அன்னார் ஒரு சிறந்த நாடக நடிகருமாவார். இவர் தயாரித்து கட்டுக்கதை எழுதி, பிரிட்டிஷ் தேர்தலை முன்னிட்டு மேடையேற்றப்பட்ட 'இணக்கப்பாடு' நாடகம்மூலமே இலங்கை மக்களுக்கும் நன்கு அறிமுகமானார்.

இலங்கையில் ஆளும் அணி, எதிரணி இரண்டுமே ஒரே நேரத்தில் ஒரே குரலில் தம்மை மறந்து கரகோசம் செய்து வரவேற்ற ஒரே ஒரு நாடகம் 'இணக்கப்பாடு' என்பது கின்னஸில் பொறிக்கவேண்டிய தகவல். அந்தளவுக்கு எதிரும் புதிருமான தரப்புக்களுக்கே பிடித்தமான அம்சங்களை கொண்டிருந்த நாடகம் 'இணக்கப்பாடு.'

இலங்கையில் எண்ணற்ற விமர்சகர்களின் ஏகோபித்த ஆதரவுடன் சில வாரங்கள் வெற்றிநடை போட்ட 'இணக்கப்பாடு' நாடகம், பிரிட்டனில் மேடையேற முடியவில்லையாயினும், சின்ன வரவேற்பைக்கூட பெறவில்லையாம். அதனால் ஹீரோ பொக்ஸ் மனமுடைந்து காணப்பட்டதாக கூறப்படுகிறது.

அன்னார் காணாமல்போனதை அடுத்து அவரால் பயன் அடைந்த அபிமானிகள் கடலளவு கவலையில் இருக்கிறார்கள். அவரை எங்கே எந்த மூலை முடுக்கில் கண்டாலும் உடனே தகவல் தருமாறு அபிமானிகள் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறார்கள்.

*தகவல் தரவேண்டிய முகவரி*
*'இணக்கப்பாடு' நாடகக்குழு,*
*இலங்கை.*

# உருக்கமான வேண்டுகோள்

*திருப்ப நாயகனே, மத்தியஸ்த மன்னனே, எங்கள் ஹீரோவே! நீ எங்கே இருக்கிறாய்?*

*ஒருமுறை, ஒரே ஒரு முறை சும்மா வந்துபோ. அதுபோதும். ஒரு முறை எட்டிப்பார் அதுபோதும்! அதனைவைத்தே ஓராயிரம் கட்டுக்கதைகள் கொட்டிக் குவிக்க எம்நாட்டு விமர்சகர்கள் எவரெடியாக இருக்கிறார்கள்.*

*நாங்கள் அறிந்தே தாமதம் செய்கிறோம். தெரிந்தே தீர்வுகளை தள்ளிவைக்கிறோம் என்பதை உலகம் அறிய அவகாசம் கொடுக்காமல் அடுத்த நாடகக் காட்சியை அரங்கேற்ற வேண்டாமா? அண்ணலே! காதல் நாடகங்களில் மட்டும்தான் கடிதப் பரிமாற்றம் கல கலப்பான காட்சிகளாக அமைவது வழக்கம். அரசியல் நாடகத்திலும் கடிதப் பரிமாற்றத்துக்கு சுவாரசியம் ஏற்படுத்தியது உன் வரவால் ஏற்பட்ட திருப்பம்.*

*பார்க்காமலே காதல், பழகாமலேயே காதல் என்றெல்லாம் திரைப்படங்கள் வரும் காலம் இது. ஆனால் நீரோ உடன்பாடின்றியே உடன்பாடு, மனம்திருந்தாமலேயே புரிந்துணர்வு, மனம்விட்டுப் பேசாமலேயே ஒத்துழைப்பு என்ற புதிய அரசியல் நாடகத்துக்கு கதை வசனம் தயாரித்தீர். இது எங்கே இந்த பாழாய்ப்போன மக்களுக்குப் புரியப்போகிறது? இல்லாவிட்டால் பிரிட்டிஷ் தேர்தலில் உம்மை ஓரம்கட்டியிருப்பார்களா?*

*அண்ணலே! நம் நாட்டுமக்களை நீர் நூற்றுக்கு 96வீதம் நம்பலாம். அவர்களுக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்து கொட்டாவிவிடுவதில் ஒரு அலாதிப்பிரியம்.*

*உதாரணத்துக்காக சொல்வதாயின், எங்கே பொட்டென்று சிரித்துவிடுவார்களோ என்று நினைத்த நகைச்சுவைக் காட்சிகளையெல்லாம் எவ்வளவு சீரியசாக இருந்து இரசித்தார்கள் பார்த்தீரா?*

*வயிறு குலுங்க சிரிக்கவைக்கும் காட்சிகளுக்குக்கூட சிரிக்காமல் கல்லுளிமங்கர்களாக இருக்கிறார்களே என்று நீவிர் கவலைப்பட்டிருக்கலாம்.*

*அதொன்றுமில்லை அண்ணலே, அதுகுறும்புக்கார விமர்சகர்கள் சிலர் செய்த சதி. உமக்குப் பின்னால் புலி இருக்கலாம், சிங்கம் இருக்கலாம் என்றெல்லாம் தாங்களும் மிரண்டு, மக்களையும் மிரட்டித்தொலைத்துவிட்டார்கள். அதனால்தான் அண்ணலே, மக்கள் சிரிக்க மறந்துபோய் சிலைபோல் இருந்துவிட்டனர். டோண்ட் மிஸ் அண்டஸ்ராண்ட்.*

*பட், வன் திங்க், அண்ணலே! உமது 'இணக்கப்பாடு' நாடகத்துக்கு கொட்டை எழுத்துக்களில் இலவச விளம்பரம் செய்து விமர்சகர்களும், பத்திரிகைகளும் உதவியதை ஒருநாளும் மறக்கக்கூடாது. எனவே பிளீஸ் கம். எங்கிருந்தாலும் பிளீஸ் கம்.*

*'வெளிநாட்டு மத்தியஸ்தம்' என்றொரு உண்மைக்கதைக்கு மெருகூட்ட சிலர் முயற்சிப்பதாக அறிகிறோம். இவ்வாறான சீரியசான கதைகளில் எமது நடிப்பு எடுபடாமல் போகலாம். அண்ணலே உரிய நேரத்தில் உமக்கு உதவிய எங்களை நீர் கைவிடலாமா?*

*'இணக்கப்பாடு' என்னும் சிரிப்பு நாடகத்தை தொடர்ந்து நடத்தி எமக்கு உதவுவது உமது கடமையல்லவா? உமது அரசியல் வசூலுக்காக பிரிட்டிஷ் தேர்தல் நேரத்தில் 'இணக்கப்பாடு' நாடகம் மேடையேற நாங்கள் தந்த ஒத்துழைப்பை வெறும் 'தாங்க்யூ'வால் மட்டும் ஈடுசெய்ய முடியுமா?*

*எமது அரசியல் வசூலுக்கு பாதகம் வராதிருக்க, புதிய கதை ஒன்றை தயாரிக்கும் காலம்வரை 'இணக்கப்பாடு' நாடகத்தை தொடர்வதுதான் இரசிகர்களை மயக்கி வைத்திருக்கும் மாமருந்து.*

*நீவிர்மட்டும் வந்தால் போதும். துணை நடிகர்களை போதியளவு விநியோகிக்க இயலும். விளம்பர ஏற்பாடுகளை பத்திரிகைகள் கவனித்துக் கொள்ளும். தலைநகரில் மழைக்கு பஞ்சம் என்றாலும், ஐஸ் மழைக்கு தகுந்த ஏற்பாடு செய்ய தமிழ்க் கட்சியின் மூத்த தலைவர்கள் உத்தரவாதம் தந்துள்ளனர்.*

*உடனே எங்கிருந்தாலும் பிளேன் பிடித்து ஓடிவருமாறு உருகி உருகிக் கேட்டுக் கொள்கிறோம்.*

*அறிவித்தல் தந்தோர்*
*ஆளும் அணி-எதிரணி-சீட்டணி,*
*விமர்சன அணி.*


**பி.கு: காதிலை பூ கந்தசாமியின் அனுசரணையுடன் இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.**

## காதிலை பூ கந்தசாமி

# மீண்டும் வெளியாகியுள்ளது

★ பேசியதையே திரும்ப திரும்பப் பேசும் அரிய காட்சிகள்.
★ கனி இருக்கக் காய் கொய்யும் சிரிப்பூட்டும் சம்பவங்கள்.
★ இடைக்கிடையே தீப்பொறி பறக்கும் வீரவசனங்கள்.
★ இடைக்கிடையே சோகம் கொப்பளிக்கும் திருப்பங்கள்.

**தமிழ்க் கட்சிகள் பேச்சுவார்த்தை!**
(ஈஸ்ட்மென்ட் கலர்- புதிய கொப்பி)



இயக்கம்: ஜி.எல்.பீரிஸ்
சண்டைப் பயிற்சி: ரணில்
இசை: பாராளுமன்ற தெரிவுக்குழு

**பத்திரிகை விமர்சனங்கள்**

தமிழ்-முஸ்லிம் கட்சிகள். விறுவிறுப்பாக மோதிக்கொள்ளும் காட்சிகளில் ரணிலின் அனுபவம் பளிச்சிடுகிறது. சபாஷ் ரணில்.

*-கருடன் வாரமலர்.*

காலதாமதத்தை உடைக்க சுத்தியலை தூக்க வேண்டிய நோக்கத்தில், தாமே காலதாமதத்துக்கு காரணம் என்று வில்லன்தரப்பிடம் தமிழ்க்கட்சிகள் மன்னிப்புக் கேட்கும் காட்சியில் திரையரங்கமே தலையில் அடித்துக்கொண்டு அழுகிறது. சோகத்தை பிழிந்து தருகிறார்கள்.

*-தினசரி.*

*விமர்சனம் மூலம் பாராட்டிய பத்திரிகையாளர்களுக்கு நன்றி...நன்றி...நன்றி. தொடர்ந்து காணத் தவறாதீர்கள்.*



படிப்பகம்

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS



580230

பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-

105 GALLE ROAD, COLOMBO 06

காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06


# ஓ...ஓ.... ஆ.... ஆ



➡ நீர்யானைகள் நீரில்தான் பெரிதும் சஞ்சரித்தாலும் நிலத்திலும் நடமாடக் கூடியன. நீரில் வாழும்போது- பார்வைக்குப் பயங்கரமாகக் காட்சியளித்தாலும், நிலத்தில் சுற்றித்திரியும் போது மிகச் சாதுபோல காணப்படும். சாதுவான பிராணிதானே என்று நெருங்கிச் சென்றால் மனிதர்களைக் கடித்துவிடும். ஆறுகளில் நீந்தி விளையாடித் திரிந்துவிட்டுக் கரையேறும் காட்சிகளைக் கண்டு மகிழ சுற்றுலாப்பயணிகள் விரும்புவர். சற்று அருகில் சென்றவர்களை இவை தாக்கியுள்ளன. நீர்யானையால் தாக்குண்டவர்கள் உயிர் தப்புவது அரிது. இவ்வாறு இறப்பதற்கு இம்மிருகத்தின் தோற்றம் ஏற்படுத்தும் அதிர்ச்சியும் ஒரு காரணமெனலாம்.

நீரில்-அதன் பயங்கரமான பெரிய அளவு உடம்புடன் அதிவேகமாக நீந்தும். அதேவேளையில் தரையில் ஒருமனிதன் ஓடும் வேகத்தில் ஓடும்.

யானை, காண்டாமிருகம் ஆகியவற்றுக்கு அடுத்து மூன்றாவது பெரிய மிருகம் 'ஹிப்போபொட்டமால்' எனும் நீர்யானை. நீரிலோ நிலத்திலோ இது எந்த உயிரினத்தையும் உண்பதில்லை. நீரில் நீர்த்தாவரங்களையும் தரையில் புல், பழம், கிழங்கு, இலை குழைகளையும் புசிக்கும். தினசரி 60 கிலோ தாவர உணவு தேவை.

நீர்யானை ஒரு தடவையில் ஒரு குட்டி ஈனும். நீருக்குள்ளிருந்த வண்ணமே குட்டிக்குப் பால் தரும். 6 மாதங்கள் வரை பால் குடிக்கும் குட்டிகள் எப்போதும் தாயை ஒட்டியே திரியும். தரையில் தாயை விட்டுத் தூரத்தில் தனியாக குட்டி உலாவப்போனால், தாய் அதனைப் பிடித்து வந்து தன் மூக்கால் முட்டித் தண்டிக்கும்.

நாலாவது வயதில் முதல் குட்டியை ஈனும்.

நீர்யானை வாயைத்திறந்தால் அதன் அகலம் 90 முதல் 120 சென்ரிமீட்டர் வரை விரியும் தன்மையுடையன. பாருங்கள் வாய்க்குள் தாராளமாக ஒரு ஆள் நுழையலாம்போல் இல்லை!




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லஸ்

SRI KALYANY JEWELLS

323657

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11


# அதிரடி மன்னன்




➡ திறமைக்குப் பஞ்சமில்லை, ஆனால் ஒரே ஒரு குறை, பொறுத்த நேரத்தில் உரிய வேகம் இல்லாமல் கருண்டு விடுவார்கள். இந்திய கிரிக்கெட் அணிமீதான பொதுவான குற்றச்சாட்டு அதுதான். இந்த அணியை வழக்கமான பலவீனத்தில் இருந்து மீட்கப் போராடும் பொறுப்பு டெண்டுல்கரின் தோள்களில். இன்னமும் முழுமையாக நிமிர்த்த அவராலும் முடியவில்லை. இந்த பலத்த முயற்சியில் டெண்டுல்கரின் அசாத்திய ஆட்டத்திறமையும் எங்கே காணாமல் போய்விடுமோ என்று அவரது விசிறிகள் கவலைப்படுகிறார்கள். அவர்களுக்கு ஆறுதல் பரிசுமாதிரி அவ்வப்போது தனது அதிரடி ஆட்டத்தை காண்பிக்கிறார் இந்த இளம் கப்டன்.

சமீபத்திய தோல்விகளால் பாதிக்கப்பட்டிருக்கும் டெண்டுல்கரை தட்டிக் கொடுப்பதுபோல அவருக்கு 'அதிரடி ஆட்டக்காரர்' என்ற விருது கொடுத்து கௌரவித்துள்ளது தோம்சன் நிறுவனம். சுதந்திரக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு பின்னரே இந்த விருது கொடுக்கப்பட்டிருக்கிறது. கவாஸ்கர், போய்காட், டோனி ஜோசியர், மைக்கேல் ஹோப்டில், ரவிசாஸ்திரி ஆகியோர் கொண்ட கமிட்டிதான் இந்த விருதுக்குரியவராக டெண்டுல்கரை தெரிவுசெய்தது.

இதுவரை சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 12 சதங்களை குவித்திருக்கிறார் டெண்டுல்கர். இதன்மூலம் அதிக சதம் போட்ட வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கிறார். முதல் இடத்தில் இருப்பவர் மேற்கிந்திய வீரர் கெயின்ஸ். அவரது சதம் 17. இரண்டாம் இடத்தில் டெண்டுல்கருடன் விவியன் ரிச்சார்ட்ஸ், சயீத் அன்வர் ஆகியோரும் உள்ளனர்.

# இணக்கப்பாடு



⬆ எலியைக் கண்டால்போதும் பூனையார் கப்பென்று பாய்ந்து அமுக்கி விடுவார் என்றுதானே நினைப்போம் தப்பு. படத்தில் பாருங்கள் எவ்வளவு ஒரு அந்நியோன்யம்! படத்தில் பூனையாரோடு காணப்படும் எலியார் பார்வைக்கு வித்தியாசமாக இருக்கிறதல்லவா? இது எலிகளில் ஒரு ரகம். சீமைப் பெருச்சாளி என்று பெயர். மேல்நாடுகளில் அதிகம் காணப்படுவதால் சீமை என்னும் பட்டமும் பெருச்சாளியுடன் ஒட்டிக்கொண்டது.

எலியையும் பூனையையும் கூட சிறு குட்டிகளாக இருக்கும்போதே சேர்த்து வளர்த்தால் ஒன்றுக்கொன்று சேர்ந்து வாழக் கற்றுக் கொள்ளுமாம். இருப்பினும் எல்லாக் காலங்களிலும் இவ்வொற்றுமை நிலைத்து நிற்பதில்லை. திடீரென்று பூனை தனது இயல்பான குணத்தைக் காட்டி விடுமாம். இதே போலத்தான் வீட்டில் ஒன்றாக வளர்க்கப்படும் நாயும் பூனையும் திடீரென்று ஒன்றையொன்று முறைத்து மோதிக் கொள்ளுவதுண்டு.

பூனைகளுடன் சீமைப் பெருச்சாளி ஒட்டிக்கொள்ளுமாம். இவற்றிடையே மோதல்கள் வருவது குறைவாம். இதனால் ஐரோப்பிய நாடுகளில் தங்கள் குழந்தைகளுக்காக வளர்க்கப்படும் பூனைகளுடன் சேர்த்தே சீமைப் பெருச்சாளிகளையும் வளர்க்கின்றனராம். இருப்பினும் முன்னெச்சரிக்கையாக, பூனைகளின் சுபாவமான போக்கினை அனுசரித்து, அவற்றின் கூர்மையான விரல்களின் நகங்களால் சுலபமாகக் கிழித்தெறியப்படாத பாதுகாப்பு வலைக்கூடுகளுக்குள் தான் சீமைப் பெருச்சாளிகளை இரவு வேளைகளில் அடைத்து விடுவார்களாம். படத்தில் பூனையாரும் சீமைப் பெருச்சாளியும்தான் நட்போடு காணப்படுகின்றன.

இதன்மூலம் அறியப்படும் நீதியாதெனில், என்னதான் ஒற்றுமையாக வாழ்ந்தாலும் பாதுகாப்பு உத்தரவாதமான ஏற்பாடுகள் முக்கியம். நம்ப நட, நம்பி நடவாதே. இது எலிக்கும் பூனைக்கும் மட்டும்தான் பொருந்தும் என்றில்லை.

# வர்ணமந்தி



⬆ அபிவிருத்திப் பணிகளுக்காக ஒவ்வொரு நாட்டிலும் காடுகள் அழிக்கப்படுகின்றன. (நம்நாட்டில் போர்விருத்திக்காகவும்). கடந்த 30 ஆண்டுகளில் உலகெங்கணும் 40 சதவீதமான காடுகள் அழிக்கப்பட்டுவிட்டன. காடுகள் அழிக்கப்படுவதனால் அக்காடுகளில் வாழும் மிருகங்கள், பறவையினங்கள் மற்றும் உயிரினங்கள் அழிந்தொழிந்து விடுகின்றன. இதில் பெரிதும் பாதிப்புக்குள்ளாவது குரங்கினங்களே!

தென் அமெரிக்காவில்- குறிப்பாக பிரேஸில் நாட்டில் காணப்படும் ஓர் அபூர்வ குரங்கினம் 'தங்கச் சிங்கம்.' படத்தில் அட்டகாசமாக போஸ் கொடுப்பது அதுதான். நீளமான-அடர்த்தியான-தங்கவர்ண பிடரி மயிர்களைக் கொண்டது.

காடுகள் மிக வேகமாக அழிக்கப்பட்டமையினால் இத்தங்கச் சிங்க இனக் குரங்குகள் முற்றாக அழிந்து போகும் நிலை ஏற்பட்டது. அந்நாட்டு வனவிலங்குப் பாதுகாப்பு நிறுவனங்கள் காலமறிந்து செயற்பட்டமையினால், இவ்வினம் முற்றாக அழிந்து விடாமல் காப்பாற்றப்பட்டது. இந்த இனக் குரங்குகளைப் பிடித்து வளர்த்து, அவற்றின் இனத்தைப் பெருக்க உரிய வழிமுறைகளை வளர்ப்புப் பண்ணைகளிலேயே கடைப்பிடித்து, ஓரளவு வளர்ச்சியடைந்ததும் காடுகளில் விட்டுவிடுகின்றனர். தங்கச் சிங்கமும் அழிவிலிருந்து தப்பித்துக் கொண்டது. பார்த்தீர்களா, குரங்கிலும் சிங்கம் உண்டு.


தமிழ் கணனி சொற்றொடர்

கம்பன் எழுத்தோலை



இலங்கை அறிமுக விலை

US$ 49

முதல் 50 பேருக்கு மட்டும்

சாதாரண விலை US$59

Windows 3.1,3.11,95 compatible

விநியோகஸ்தர்கள் தேவை

Mail Order: BINNARY TRADING

33 MOON BEAM WALK, SINGAPORE 277243

Tel: 8726596, Internet: Lakshman@ cyberway.com.sg

Payment by Bank Draft or Money Order, 2 week delivery





இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த பிளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பார் நாவலவில் உள்ள சமலை அச்சகத்தில் ஜூன் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.


படிப்பகம்